விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 மாசி 13 சனிக்கிழமை (25.02.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 068

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இலங்கைக்கு எதிராக நோர்வேயும் களத்தில்

### எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு



(ஒஸ்லோ) இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என மேற்கத்தைய நாடுகள், ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் கொண்டு வரப்போகும் தீர்மானத்துக்கு நோர்வேயும் ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளது. (24ஆம் பக்கம் பார்க்க)


## சவேந்திர சில்வாவுக்கு அரசாங்கம் ஆதரவு

(கொழும்பு)

ஐ.நா.செயலாளர் நாயகத்தின் அமைதி காக்கும் படை ஆலோசனைக்குழுக் கூட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி நிரந்திர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அரசாங்கம் முழுமையான ஆதரவளிப்பதாக நாடாளுமன்றத்தில் அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய வாய்மூல கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில், வெளிவிவகார பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா இதைத் தெரிவித்தார்.

யுத்தத்தில் வெற்றிபெறுவதற்கு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா பாரிய பங்காற்றியவர் என்பதை நாம் அறிவோம். அவருக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்து நாம் கவலை அடைகின்றோம் எனக் கூறிய தயாசிறி ஜயசேகர எம்.பி, சவேந்திர (24ஆம் பக்கம் பார்க்க)



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் பாதுகாப்புச் செயலர்....

## இறுதிப் போரில் 9 ஆயிரம் பேர் பலி

### புள்ளிவிபரம் வெளியிட்டது அரசு

இலங்கை அரசாங்க புள்ளிவிபரங்களின் அடிப்படையில் மூன்று வருடங்களுக்கு முன்னர் நடந்த சர்ச்சைக்குரிய போரின் இறுதிக் கட்டத்தில் வடக்கில் போர்ப் பகுதியில் 9 ஆயிரம் மக்கள் இறந்ததாக அறியக் கிடைத்துள்ளதாக பிபிசி கூறியுள்ளது.

இவற்றில் 7 ஆயிரத்திற்கும் அதிகமான மரணங்கள் நேரடியாக இராணுவ மோதல்களுடன் தொடர்புபட்டவையாகும்.

இந்த அளவுக்கு அங்கு அழிவு ஏற்பட்டிருக்கிறது என்பதை அறியத்தரும் முதலாவது அரசாங்க புள்ளிவிபரம் இதுவாகும்.

இந்த விவகாரம் தொடர்பாக பல வெளிநாட்டு விமர்சகர்கள் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை இதனை விட பல மடங்கு அதிகம் என்றும் அவர்கள் கூறுகின்றார்கள்.

கடந்த சில நாட்களில் அரசாங்கம் தனது மக்கள் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. வடக்கில் உள்ள மக்களை அந்த திணைக்களத்தின் அதிகாரிகள் செவ்வி கண்டு இந்த தகவல்களை வெளியிட்டிருந்தனர்.

இந்த மரணங்களின் புள்ளி விபரம் (24ஆம் பக்கம் பார்க்க)

## வாழ்வாதாரத்தை மேம்படுத்த படையினர் உதவி வழங்குகின்றனர்

### பாதுகாப்பு செயலர் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் அதிகளவில் பாதிக்கப்பட்ட வட பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த படைப்பிரிவினர் பல்வேறுபட்ட உதவிகளை மனிதாபிமானத்துடன் மேற்கொண்டு வருகின்றனர் என பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேசமான்ய க.பாலேந்திராவின் நிதியுதவியுடன் யாழ்.தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பார்வையாளர் அரங்கு அழகியல் மற்றும் விளையாட்டு வகுப்பறைகள் கொண்ட பல் வளாக புதிய கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவத்தினர் இந்தப் பகுதி மக்களின் நலனுக்காக பல்வேறுபட்ட உதவிகளை செய்து வருகின்றனர் என்பதை நான் அறிவேன். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து இராணுவத்தினர் உதவிகளைச் செய்ய வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

வாழ்வாதாரத்தில் பின்தங்கிய மக்களின் மேம்பாட்டுக்காக எவ்வாறு உதவிகளை செய்து வருகின்றனரோ அதேபோன்று மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்கும் பல உதவிகளை இராணுவத்தினர் செய்து வருகின்றனர்.

இன்று (நேற்று) திறந்து வைக்கப்பட்ட இந்தப் பாடசாலைக் கட்டிடத்தினையும் இராணுவத்தினரே கட்டிக் (24ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆளும் கட்சி எதிர்வரும் வாரத்தில் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், ஆளும் கட்சியிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் பெரும் கலக்கத்தில் ஆழ்த்தியிருக்கின்றன எனத் தெரிகிறது.

எரிபொருள் விலை அதிகரிப்பாலும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பாலும் மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வரும் சூழ்நிலையில், இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு மக்களை (24ஆம் பக்கம் பார்க்க)

## பாணின் விலை அதிகரித்தது; பால்மா விலை அதிகரிக்கும்

இலங்கையில் மக்களின் அன்றாட முக்கிய உணவுகளில் ஒன்றாகக் கருதப்படும் பாணின் விலை நேற்று நள்ளிரவு முதல் 5 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அதன்படி இதுவரை 50 ரூபாயாக இருந்து வந்த 450 கிராம் பாணின் விலை 55 ரூபாயாக அதிகரிக்கிறது.

எரிபொருள் விலை அதிகரிப்பினால் ஏற்பட்ட உற்பத்திச் செலவு அதிகரிப்பே இந்த விலையேற்றத்துக்கு காரணம் என்று பேக்கரி உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

எரிபொருள் விலையேற்றத்தால் போக்குவரத்துதுறை உட்பட பல துறைகள் இலங்கையில் சிரமத்தை எதிர்நோக்கும் நிலையில் பேக்கரி உரிமையாளர்களின் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

இதேவேளை 450 கிராம் பால்மாவின் விலையை 15 ரூபாயால் அதிகரிப்பதற்கு நுகர்வோர் விவகார அதிகாரசபை அனுமதியளிக்காவிட்டால், இறக்குமதியை நிறுத்தப் போவதாக பால்மா இறக்குமதியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

உள்ளூர் பால் மா சந்தையில் 95 சத வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இறக்குமதியாளர்கள் நஷ்டத்தை எதிர்கொள்வதால் பால் மா வர்த்தகத்தில் ஈடுபடுவதில் நெருக்கடியை எதிர்நோக்கி (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை – அமெரிக்கா மின்னஞ்சல் சமர்



ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 19ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தை வரைவதற்கு அமெரிக்காவுடன் இலங்கை நெருங்கிச் செயற்படுவதாக அமெரிக்கா மேற்கொள்ளும் பிரசாரத்திற்கு எதிராக பேரவையின் அங்கத்துவ நாடுகளுக்கு ஜெனிவாவிலுள்ள ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர தூதரகம் மின்னஞ்சல் மூலம் கடிதம் அனுப்பியுள்ளது.

பேரவையின் 47அங்கத்துவ நாடுகளுக்கும் இலங்கைத் தூதுவர் தமாரா குணநாயகம் எழுதியுள்ள இக்கடிதத்தில், இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதரகமும் ஜெனிவாவிலுள்ள சர்வதேச அமைப்புகளும் அங்கத்துவ நாடுகளின் ஆதரவை நாடியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்துடன் தான் நெருக்கமாக செயற்படுவது போலவும் பதிலளிக்கும் கடப்பாடு மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள், நல்லிணக்க (24ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# தமிழர்களுக்கு தீர்வு கிடைப்பதற்கு இந்தியாவின் தலையீடு போதுமானதல்ல

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தெரிவிப்பு

இலங்கைத் தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வை வழங்குவது தொடர்பில் இலங்கை அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்கு இந்திய அரசின் தலையீடு போதுமானதாக இல்லையென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி குற்றம்சுமத்தியுள்ளது.

அத்துடன் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணவும் போர்க்காலத்தில் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களுக்கு நிவாரணங்கள் கிடைத்திடவும் இலங்கை அரசாங்கத்தை இந்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 20ஆவது தமிழ்நாடு மாநில மாநாட்டிலேயே இத்தீர்மானம்நிறைவேற்றப்பட்டுள்ளது. இத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் போர் முடிந்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. ஆயுத மோதல் முடிந்தவுடன் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக அரசாங்கம் கொடுத்த வாக்குறுதி எதையும் நிறைவேற்றவில்லை. இலங்கைத் தமிழர்களின் துயரம் இன்னும் தொடர்கிறது.

சொந்த நாட்டிலேயே அகதிகளாய் வாழ்விடங்களை விட்டு வெளியேறி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணப் பணிகள் ஆமை வேகத்தில் நடைபெறுகின்றது.

அவர்களின் புனர்வாழ் விற்கான மீள்குடியேற்றத்திற்கான நடவடிக்கைகள் போதுமான அளவு நடைபெறவில்லை.

ஆயுத மோதல் காலத்திலும் அதற்கு முன்பு கைது செய்யப்பட்டு இன்றைக்கும் சிறையில் இருக்கக் கூடியவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும்.

மேலும் தமிழர்கள் வாழக் கூடிய பகுதிகளில் இன்றும் இராணுவ நிர்வாகம் தொடர்கிறது. உடனடியாக இராணுவம், விலக்கிக்கொள்ளப்பட்டு சிவில் நிர்வாகம் கொண்டுவரப்படவேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையே 11 முறை பேச்சுவார்த்தை நடந்துள்ளது. ஆனால் எந்தவித முன்னேற்றமும் இல்லை. பேச்சுவார்த்தை நடைபெறுகின்ற போதே அரசாங்கம் இந்தப்பிரச்சினையை நாடாளுமன்றத் தேர்வுக் குழுவுக்கு விடுவது என்று முடிவு செய்திருக்கிறது.

அரசாங்கத்தின் இவ் முடிவு பிரச்சினைக்குதீர்வுகாண உதவாது இலங்கையில் வடக்குக்கிழக்கு மாகாணங்களை இணைத்து நிலம், பொலிஸ் துறை உள்ளிட்ட மாநில சுயாட்சி அந்தஸ்துடன் கூடிய அதிகாரங்களை வழங்குவதற்கும் இலங்கையில் தமிழ்மொழி, தமிழர்களுக்கு சம வாய்ப்பு, சம உரிமைகளுடனான பாதுகாப்பு ஆகியவற்றைக் காக்கும் விதத்திலும் சட்டத்திருத்தம் செய்திட இலங்கை அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை தமிழர் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் அரசியல் தீர்வு காணவும் போர்க் காலத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நிவாரணங்கள் கிடைக்கவும் மீள்குடியேற்றம் துரிதமாக நடைபெறவும் இலங்கை அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க வேண்டும் என இத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-11)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

வேம்படி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, கௌரவ விருந்தினராக வட மாகாண கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர்எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஏ)


**வேலைக்கு ஆட்கள் தேவை**

லைடன் புடவை நிலையத்திற்கு வேலைக்கு ஒரு ஆணும் 2 பெண் பிள்ளைகளும் தேவை. அனுபவம் உள்ளவர்களும், இல்லாதவர்களும் வரலாம். விரும்பியவர்கள் நேரில் வரவும்.

**லைடன் புடவை நிலையம்**
**410, ஆஸ்பத்திரி வீதி**
**யாழ்ப்பாணம்.** (C-5905)




**EASY ENGLISH**
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
**YAALH ENGLISH ACADEMY**
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
**புதிய உயர் கல்லூரி**
விபரங்களுக்கு :0773212711 (7379)


## ஆட்டோ விபத்து சாரதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கட்டுப்பாட்டை இழந்த ஆட்டோ மதிலுடன்மோதிவிபத்துக்குள்ளானதில் ஆட்டோ சாரதி படுகாயமடைந்தார்.

இரு ஆட்டோக்கள் ஒன்றுடன் ஒன்று மோத முற்பட்ட சமயம் அதிலிருந்து தப்புவதற்கு எத்தனித்த போது இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.



நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் பலாலி வீதியும் அம்மன் வீதியும் இணையும் சந்தியில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த சாரதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஏ-4,8)

## குடி மகன்களுக்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் பயணிகளிடம் அட்டகாசம் புரிந்த 9 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 9 பேரும் யாழ். நீதிமன்றில் தலா 2ஆயிரத்து 500 ரூபாய் வீதம் 22 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் செலுத்தினர்.

யாழ்.குருநகர் பகுதியி[illegible] வீதியில் பயணிப்போருக்கு இ[illegible]யூறு ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் இவ் 9 பேரும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஏ-4)

## மின்தடைப்படும்

உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டும், வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டி இருப்பதாலும் வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை, 29 ஆம் திகதி புதன் கிழமை, மற்றும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, முதலாம் திகதி வியாழக்கிழமை மற்றும் 3 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை6.00மணிவரை கரந்தன், நீர் வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப் பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவப்பீடபிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம், சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், குப்பிளான், மயிலங்காடு, காங்கேசன்துறை உயர்பாதுகாப்புவலயப் பகுதி ஆகிய இடங்களிலும்,

4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00மணிவரைகொட்டடி, நாவாந் துறை, மீனாட்சிபுரம், காக்கை தீவு, யாழ். பிரதான வீதியில் பண்ணை முதல் பஸ்ரியன் சந்தி வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஏ)


**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



*அன்புடையீர்!*
*கடந்த 28.01.2012 அன்று சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம்*

**அமரர் சுப்பிரமணியம் குலசிங்கம்**

*அவர்களின்*

*31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 25.02.2012 சனிக்கிழமை பாலியாற்றிலும் வீட்டுக் கிருத்தியம் 27.02.2012 திங்கட்கிழமை எமது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*எமது குடும்ப குல விளக்கின் மரணச் செய்தி அறிந்து பலவழிகளிலும் உதவிகளைப் புரிந்த அனைத்து உள்ளங்களிற்கும் எமது நன்றி கலந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

இல. 179, பாண்டியன் குளம்,
நட்டாங்கண்டல். (C-5904)

இங்ஙனம்
குடும்பத்தினர்



**அவசர கலந்துரையாடல்**

யாழ் மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் 26.02.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யா/நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதுடன் பதிவுகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ் மாவட்ட முற்போக்கு பட்டதாரிகள் சங்கம்

(C-5907)



**VACANCIES IN JAFFNA**
**யாழில் பதவி வெற்றிடங்கள்**

தொலைத்தொடர்பாடல், இலத்திரனியல், குடிசார் (Telecommunication, Electrical & Civil) இயந்திரவியல் போன்ற நிர்மாணத் துறைகளில் 26 வருட அனுபவமும், சர்வதேச தர நிர்ணய நிறுவனத்தின், ISO 9001:2008 சான்றிதழும் பெற்ற எமது நிறுவனத்தில், தொலைத் தொடர்பு வெளிக்கள உபகரண (Telecom Out Side Plant (OSP)) யாழ்ப்பாண பிரிவில் பணியாற்றுவதற்கு செயலூக்கமுள்ள (Dynamic) சுய உந்தலுடன் தொழில்புரியக் கூடிய (Self Motivated) தகுதி வாய்ந்த ஆளணிகளுக்கு பின்வரும் பதவிநிலைகளில் வெற்றிடங்களுண்டு.

**செயற்றிட்ட முகாமையாளர் (Project Manager)**
BSc Eng. அல்லது அதற்கு சமனான வேறு ஏதும் பிரிவில் பல்கலைக்கழக பட்டம் பெற்ற [illegible]-50 வயதெல்லையைக் கொண்ட, குறைந்தது 5 வருட உறுதிப்படுத்தப்பட்ட முகாமைத்துவ மட்ட (Managerial Level) துறைசார் அனுபவமும் கொண்ட, தலைமைத்துவப் பண்புகளுடன் கூடிய மிகச் சிறந்த தகுதி வாய்ந்தவர்கள்.

**தொழிநுட்ப உத்தியோகத்தர் (Technical Officer)**
மேற்பார்வை அனுபவத்துடன் கூடிய (Supervision Experience) தேசிய தொழி நுட்ப சான்றிதழ் (National Certificate in Technology (NCT)) அல்லது அதற்கு சமனான கல்வித்தகமையுடையவர்கள். தொலைத்தொடர்பு வெளியக உபகரண (OSP) முன்னனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும். வயதெல்லை :- 25-50

**தொழிநுட்பவியலாளர் (Technician)**
க.பொ.த (G.C.E (O/L) சாதாரண தரப் பரீட்சையில் சித்தி எய்தியவர்கள். தொழில் சார் பயிற்சியளிக்கப்படும். மின்கம்பியிடல் (Electrical Wiring) துறையில் முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

**தரவுப் பதிவு இயக்குநர் (Data Entry Operator)**
க.பொ.த உயர்தர (G.C.E (A/L) பரீட்சையில் சித்தி பெற்ற Ms Office Packages இனை மிகச் சரளமாக கையாளக்கூடிய சிறந்த அறிவை பெற்றிருத்தல் வேண்டும். தவறின்மையுடன் (Accuracy) தரவுகளை உள்வீடு செய்யும் திறன் அவசியம்.

**பாரந்தூக்கியுடன் கூடிய கனரக வாகன, சாரதி (Driver for Boom Truck)**
பார ஊர்திகளை செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரத்தினை (Heavy Vehicle Driving Licence) அவசியம் கொண்டிருத்தல் வேண்டும். தேவையேற்படின் பாரம் தூக்கியை இயக்குவதற்கான பயிற்சி வழங்கப்படும்

கவர்ச்சியான ஊதியங்கள் பேசித் தீர்மானிக்கப்படும். தகுதியானவர்கள் தங்களது சுயவிபரக் கோவையை (CV) இவ் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 தினங்களுக்குள் கிடைக்கத்தக்கவாறு தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.

**Group Manager (HRD & Admin)**
Luminex (Private) Limited
#24, New Galle Road, Moratuwa
**Fax : 011-2642999 E-mail luminex@slt.lK**

(7562)

## இன்று ஒரு தகவல்

# சொர்க்கம் என்ன விலை?

ஓர் ஊரிலே ஒருவர் இருந்தார். அவர் அடிக்கடி, "தனக்கு எல்லாம் முடியும்" என்று சொல்வார்.

''எதனாலே அப்படிச் சொல்கிறீர்?'' என்று கேட்டால், என்னிடம் பணம் இருக்கிறது... அதனாலே அப்படிச் சொல்கிறேன்! என்பார்.

"பணம் இருந்தால் எல்லாம் முடியுமா?"

" எல்லாம் முடியும்... முடியாது என்ற வார்த்தையே என் அகராதியிலே இல்லை...! பணம் இருந்தால் சொர்க்கத்தையே விலைக்கு வாங்கலாம்!"

இது அவருடைய திடமான நம்பிக்கை. அந்த நம்பிக்கை நடைமுறைக்குச் சாத்தியமாகவே தோன்றியது.

''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?'' என்பது பழமொழி.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையும்? என்பது அவனுடைய அனுபவமொழி. எப்படி என்று கேட்டால் அதற்கு ஒரு செயல் விளக்கமே செய்துகாட்டுவான்.

எங்கேயாவது ஒரு அலுவலக வாசலுக்கு அழைத்துக் கொண்டு போய், காவலாளியிடம் ஐந்து ரூபாயை எடுத்துக் கொடுப்பான். அதை அவன் வாங்கிக்கொண்டு, "உள்ளே போங்க சேர்" என்று கதவைத் திறந்து விடுவான்.

உடனே இவன் மறுபடியும் ஐம்பது ரூபாயை எடுத்து அவனிடம் கொடுத்து "இதையும் வைத்துக்கொள்!" என்பார்.

அவன் ஐம்பது ரூபாவைப் பார்த்ததும் முதுகு பூராகவும் வளை ந்து பணிவாக 'வணக்கம்' என்று கூறி உள்ளே அனுப்புவான்.

"ஐந்து ரூபாவில் வளையாத இவன் உடம்பு ஐம்பது ரூபாவில் வளைந்தது பார்த்தாயா? அதனால்தான் சொல்கிறேன்... ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையும்!"

இப்படியாக வாழ்ந்து கொண்டிருந்தவன்... ஒருநாள் திடீரென்று இறந்து போனான். சொர்க்க வாசலில் போய் நின்றான். அங்கே ஒரு காவலாளி நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்து அலட்சியமாக, "நான் ஒரு பெரிய மனிதன் வந்திருக்கிறேன்... கதவைத் திறந்துவிடு...!" என்றான். காவலாளி தயங்கினான்.

"நுழைவுச் சீட்டு இருக்கிறதா?" என்றான்.

"நுழைவுச்சீட்டா... அது எதற்கு... இதை வைத்துக்கொள்... இதை விட அது என்ன பெரியதா?"

இப்படிக் கூறிவிட்டு, தன் சட்டைப் பையில் கையை விட்டு வழக்கம் போல், ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினான்.

"எதற்கு இது?"

" என்ன இப்படி கேட்கிறாய்!'' உனக்குத்தான் இது... வைத்துக் கொள்... ஏதாவது வாங்கிச் சாப்பிடு! இப்போது... கதவைத் திறந்துவிடு!"

காவலாளி சிரித்தான். "இதெல்லாம் உங்கள் ஊர் வழக்கம்... பூலோக நடைமுறை... இலஞ்சம் கொடுப்பது... காரியம் சாதிக்கிறது... இதுவெல்லாம் இங்கே நடைமுறைக்குச் சாத்தியமாகாத விடயம்!"

"எவ்வளவு கொடுத்தாலும் நீங்கள் உள்ளே நுழைய முடியாது...!"

"அப்படியென்றால், நான் எப்படித்தான் உள்ளே போவது?"

''அனுமதிச்சீட்டு வேண்டும்... அல்லது அதற்கான தகுதி வேண்டும்... அது உங்களிடம் இருக்கிறதா?"

"என்னப்பா சொல்கிறாய்?"

"சொர்க்கத்தில் நுழைவதற்கு தகுதி பெறக்கூடியளவிற்கு என்ன நன்மை செய்திருக்கிறாய்?"

இவன் யோசித்துப் பார்த்தான்.

நீண்டநேரம் யோசித்துவிட்டு, அவனுக்கு மெல்ல ஞாபகம் வந்தது.

"ஒரு தடவை...ஓர் ஏழைச் சிறுவனுக்கு 50 ரூபாய் தருமம் செய்தேன். இன்னொரு தடவை ஒரு வயதான அம்மாவுக்கு 25 ரூபா காசு கொடுத்தேன்!"

இதைக் காவலாளியிடம் கூறினான். இதைக் கேட்டதும் காவ லாளி யோசித்து விட்டு! "சிறிது நேரம் இங்கேயே இரு... உள்ளே போய் உத்தரவு கேட்டுவிட்டு வருகிறேன்" என்றான்.

உள்ளே ஓடினான். சிறிதுநேரம் சென்ற பின் திரும்பி வந்தான்.

"எப்படி?" என்று ஆர்வமாகக் கேட்டான்.

"நீங்கள் தருமம் செய்த 75 ரூபாய் பணத்தையும் உன்னிடம் உங்களை நரகத்திற்கு அனுப்பி வைக்கச் சொல்லி விட்டார்!" எனது பணத்தை வைத்துக்கொள் என்று கூறி பணத்தை நீட்டினான்.

அந்தக் காசைக் கண்டதும் இவன் வாசலில் மயங்கி விழுந்தான்.

இன்றைய கால பக்தர்கள் சிறிது யோசித்துப் பார்க்க வேண்டும். பணம் கொடுத்து பகவானிடம் காரியம் சாதிக்க நினைப்பதற்கு பெயர் பக்தி அல்ல.

' சொர்க்க வாசலில் காவலாளி கேட்டானே அனுமதிச்சீட்டு. அது என்ன தெரியுமா?

அந்த அனுமதிச் சீட்டின் பெயர் புண்ணியம்! அதாவது நாங்கள் செய்து வருகிற நல்ல காரியங்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கஞ்சா வகைத்தூளை வைத்திருந்த நபர்களுக்கு அபராதம் விதிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி பகுதியில் கஞ்சா வகைத்தூளை பயன்படுத்திய மூவருக்கு 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உடுப்பிட்டி பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் வர்த்தகர் ஒருவரும் அதைப்பாவித்த கம்பர் மலையைச் சேர்ந்த இருவரும் வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த புதன்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தகேசரம் முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதவான் வர்த்தகருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் மற்றைய இருவருக்கும் 80 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (அ-3-24)

## விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் பட்டதாரி பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு தெரிவித்துள்ளனர்.

மேலும் விண்ணப்பங்களை அனுப்பும் கடிதவுறையின் மேல்மூலையில் பட்டதாரிப் பயிலுநர்களின் ஆட்சேர்ப்பு எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

நேரடியாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என யாழ்.மாவட்ட செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.மோகனேஸ்வரன் அறிவித்துள்ளார். (அ-7)

## நிர்வாகத் தெரிவு

(பொற்பதி)

வெற்றிலைக்கேணி கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும் நேற்றுக் காலை 11 மணியளவில் இடம்பெற்றது.

இதில் புதிய தலைவராக எஸ்.லிங்கேஸ்வரன், உபதலைவராக எஸ்.யூதாதேயு, செயலாளராக எஸ்.ஜெயறமேஸ், உபசெயலாளராக கே.ஜெயராஜ், பொருளாளராக எஸ்.பொன்னையா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும் நிர்வாகசபை உறுப்பினர்கள் இருவர் தெரிவுசெய்யப்பட்டனர். (அ-3-64)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 40 |
| தக்காளி | 10 | 20 | 15 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 30 | 20 | 25 |
| கரட் | 50 | 60 | 50 |
| பூசணி | 35 | 30 | 30 |
| புடோல் | 20 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 35 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 80 |
| பாகற்காய் | 60 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | - | 40 | 50 |
| பயற்றங்காய் | 100 | 120 | 130 |
| லீக்ஸ் | 70 | 80 | 60 |
| பீற்றூட் | 25 | 30 | 40 |
| கறிமிளகாய் | 70 | 60 | 50 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 500 |
| போஞ்சி | 40 | 50 | 30 |
| கத்தரிதம்புள்ள | 35 | 40 | 20 |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 15 |
| தேசிக்காய் | 30 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 20-35 | 20 | 25 |
| வெங்காயப்பூ | 30 | 90 | 55 |

## இராசி பலன்

25.02.2012
(மாசி 13, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
திருதியை காலை 7.58 மணிவரை
ரேவதி முழுவதும்
இராகுகாலம் 9.29-10.59 மணிவரை
சுபநேரம் 3.29-4.59 மணிவரை
சதுர்த்தி விரதம்

**மேடம்** காரிய அலைச்சல்கள் ஏற்படும், சயனசுகக்குறைவான நாள், சுப செலவுகள் ஏற்படலாம், பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருள் சேர்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள், உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் சம்பவங்கள் நடைபெறலாம்.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்பட்டு கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள், வீட்டை விருத்தி செய்யும் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** தொழிலில் புதிய திட்டங்கள் மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிங்கம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, கௌரவக்குறைவான நாள், நட்பொன்று பகையாகலாம்.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினருடன் குதூகலப்பயணமொன்று உருவாகலாம், விருந்துகளில் கலந்து கொள்ளும் சூழ்நிலை உருவாகலாம்.

**துலாம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள், விருந்தினர் வருகை ஏற்படலாம், உடல் நலம் சீராகும், கௌரவமான நாள், எடுத்த காரியங்கள் கைகூடும்.

**விருச்சிகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும், செயலை செய்கையாக்கி காட்டுவீர்கள், சொத்துக்களால் நன்மையுண்டு, செய்தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள்.

**தனுசு** தாராளமாக செலவுசெய்து மகிழும் நாள், நண்பர்களால் நல்ல காரியங்கள் நடைபெறலாம், தொழில் ரீதியாக புதிய விருத்திகள் ஏற்படலாம்.

**மகரம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், சிலர் தொழில் ரீதியாக உங்களிடம் உதவி கேட்டு வரலாம், பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், மரியாதைக்குரிய நாள்.

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், பொருளாதார நிலை உயரும், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மீனம்** வாக்கு சாதுரியத்தால் வளம் காணும் நாள், மாலை நேரப் பயணம் மகிழ்ச்சி தரும், தேவையற்ற கற்பனைகள் அதிகரிக்கும், பெரிய மனிதர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு.

வளவன்

# குற்றமற்றவரென வாதாடிய நபர் விடுதலை செய்யப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

நான் சுற்றவாளி என 6 வருடங்களுக்கும் மேலாக நீதிமன்றில் வாதாடிய நபரினை கடந்த 21ஆம் திகதி குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2005ஆம் ஆண்டு கோண்டாவில் மேற்கு கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றின் மதிலினை இடித்து தரைமட்டமாக்கினார் என்றும் இதனால் தனக்கு 50 ஆயிரம் நட்டம் ஏற்பட்டது என்றும் குறித்த நபருக்கு எதிராக சட்டத்தரணி ஒருவர் யாழ்.நீதிமன்றில் வழக்குத் தொடுத்திருந்தார்.

இதில் குறித்த நபர் குற்றத்தினை ஒப்புக்கொள்ளாமல் தான் நிரபராதி என்றும் தான் இச்செயலைச் செய்திருக்கவில்லை என்றும் 6 வருடங்களாக வாதாடி வந்துள்ளார்.

இந்நிலையில்குறித்த வழக்கு நீதிமன்றில் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்தினம்எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் குறித்த நபர் குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்டு சுற்றவாளி என விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கில் முறைப்பாட்டாளர் சார்பாக சட்டத்தரணி திருமதி இளங்கோவனும் எதிராளி சார்பாக சட்டத்தரணி லிங்கா துரைராஜாவும் ஆஜராகியிருந்தனர். (அ-2-4)

# இசை வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் மாணவர்களின் நலன் கருதி நடத்தப்படுகின்ற இசை வகுப்புக்கள் வாரத்தில் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் மாலை 3.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

எனவே இதில் மாணவர்கள் பங்குபற்றி பயன்பெறுமாறு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் கே.சிறிமோஹனன் கேட்டுள்ளார். (அ)

# விழிப்புணர்வு கருத்தரங்கு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபையின் சரசாலை பொதுநூலகத்தின் சுகாதார விழிப்புணர்வு கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நூலக மண்டபத்தில் நூலகர் இ.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சமூக உளவியல் தாக்கமும் அதில் இருந்தான விடுதலையும் மற்றும் காசநோயின் தாக்கமும் கட்டுப்பாடும் என்ற தலைப்புக்களில் பொதுச்சுகாதார பரிசோதகர்களான க.சி.தவசிறோசன், இ.தளிர்ராஜ் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன் பெறுமாறு நூலகர் அறிவித்துள்ளார். (அ-3-29)

# வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(கரவெட்டி)

மந்திகையிலிருந்து வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு செல்லும் வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையால் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது என அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி வீதியானது வடமராட்சி கிழக்கிற்கு செல்லும் பிரதானவீதி எனவும் இவ்வீதியால் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் பயணம் செய்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

# ஆயுள்வேத வைத்தியசாலையை மருதங்கேணியில் அமைக்க முடிவு

(கரவெட்டி)

மாமுனையில் அமைக்கப்பட இருந்த ஆயுள்வேத வைத்தியசாலையை மருதங்கேணியில் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபை செயற்குழுக்கூட்டம் நேற்று காலை 10 மணிக்கு பிரதேச சபைத் தவிசாளர் பு.சஞ்சீவன் தலைமையில் நடைபெற்றபோதே மேற்குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் இக்கூட்டத்தில் பிரதேசசபையின் புனரமைக்கப்படாத வீதிகளையும் மற்றும் மந்திகை ஆலடிச் சந்தை கட்டடத்தையும் புனரமைக்க நெல்சிப் நிறுவனம் 200 இலட்சம் ரூபாவை நிதியுதவி செய்வதென கூறப்பட்டதாக தவிசாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

அத்துடன் மருதங்கேணியில் கொல்களம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மிக விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் கடந்த காலங்களில் சபையில் தீர்மானிக்கப்பட்ட வேலைத்திட்டங்களை மிக விரைவில் நடைமுறைப்படுத்தி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென சபை உறுப்பினர்களால் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (அ-3-24)

# பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் விசேட பொதுச் சபைக்கூட்டம் எதிர்வரும் மார்ச்மாதம் 2ஆம் திகதி காலை 10.30 மணிக்கு சக்கோட்டை பொதுநோக்கு மண்டபத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.சிவகுமார்தலைமையில்நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், சிறப்பு விருந்தினராக யாழ்.கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.இரவீந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இக்கூட்டத்திற்கு அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-10)

* * * * * *

(பொற்பதி)

கட்டைக்காடு சென் மேரிஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-3-64)

# கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்விவலயத்தில் ஆங்கிலப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது. (அ-3-10)

# வாய்த்தர்க்கம் தடியடியில் முடிந்தது

(யாழ்ப்பாணம்)

தந்தை- மகன் வாய்த்தகராறு விபரீத மாக முடிந்ததில் மகன் தந்தையை கட்டையால் தாக்கியதில் தந்தை தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தாவடிப்பகுதியில் நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில் தாவடியைச்சேர்ந்த பி.தர்மலிங்கம் (வயது 60) என்பவரே காயமடைந்தவராவார். (அ-2-4)




# கபடி போட்டிக்கு தெரிவு



(யாழ்ப்பாணம்)

கிரிடா சக்தி விளையாட்டுத்திட்டத்தின் கீழ் பத்தொன்பது வயதுக்குட்பட்ட கபடிப் போட்டிக்கு அகில இலங்கைத் தேசிய அணிக்கு யாழ். வேலாயுதம் மகா வித்தியாலய மாணவன் செல்வன் மகாலிங்கம் கௌதமன் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என பாடசாலை அதிபர் எஸ். திரவியராசா அறிவித்துள்ளார்.

தேசிய மட்ட பாடசாலை கபடி அணிக்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவான இரு மாணவர்களில் இவரும் ஒருவராவார். (அ-7)

# கலை நிலா அரங்கில் 'அனைத்தும் அவரே'

(யாழ்ப்பாணம்)


யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் பயில்கின்ற மாணவர்களின் கலைத்திறன்களை வெளிக்கொணரும் நோக்கில் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகின்ற கலைநிலா அரங்க நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளதாக திருமறைக்கலாமன்றம் அறிவித்துள்ளது.

இந்நிகழ்வில் கல்லூரி மாணவர்களின் நடனங்கள், பாட்டு, ஓர்கன் இசை போன்றவற்றுடன் சிறப்பு நிகழ்ச்சியாக திருமறைக் கலாமன்றத்தின் நாட்டுக்கூத்துக் பிரிவின் தயாரிப்பில் அனைத்தும் அவரே என்ற தென்மோடி நாட்டுக்கூத்து மேடையேற்றப்படவுள்ளது.

வேதாகமத்திலுள்ள நீதித்தலைவராகிய யோபுவின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட இக்கூத்தை அண்ணாவியார் அ. பாலதாஸ் எழுத அண்ணாவியார் அ.பேக்மன் ஜெயராசா நெறியாள்கை செய்துள்ளார். (அ)

# மெத்தைகள் அன்பளிப்பு


உசன் கந்தசுவாமி ஆலயத்தினரால் விழிப்புலனற்றோர் சங்கத்தின்கைதடிதொழில் பூங்காவுக்கு 20 படுக்கை மெத்தைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில வைத்து வழங்கப்படவுள்ளது என சங்கத்தின் தலைவர் வி.கனகசபை தெரிவித்துள்ளார். தொழில் பூங்காவில் தங்கியிருக்கும் விழிப்புலனற்றோரின் தேவைக்கு இப் படுக்கை மெத்தைகள் வழங்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-7)


கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய ஆறுமுகநாவலர் சிறுவர்களுக்கான நூல்வெளியீட்டு விழா அண்மையில் யாழ்ப்பாணம் அன்பொளி கல்வியகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் [illegible] இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் திருமதி த.தர்மரத்தினம் மங்கள விளக்கேற்றுவதையும் நூலின் முதற்பிரதியை வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் இணைந்து வெளியிட உச்சநீமன்றக் கணக்காளர் வே.கலைச்செல்வன் பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களை[illegible] படங்களில் காணலாம். (படங்கள்: அலுவலகச் செய்தியாளர்)

# இராணுவத்தின் 'யாழ்' புகைப்படக் கண்காட்சியை பாதுகாப்பு செயலாளர் திறந்து வைத்தார்






(யாழ்ப்பாணம்)

'யாழ்' புகைப்படக்கண்காட்சியை நேற்று பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயத்தை மேற்கொண்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தார்.

யாழ். பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் சிவில் நிர்வாகக் காரியாலத்தின் ஏற்பாட்டில் 'யாழ்' புகைப்படக் கண்காட்சி பொது நூலக கேட்போர் கூட்டத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாதுகாப்புச் செயலர் நாடாவெட்டி திறந்து வைத்தார்.

இவருடன் திருமதி கோத்தபாய ராஜபக்ஷ, இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க மற்றும் படைப்பிரிவு அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு கண்காட்சியை பார்வையிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் இக் கண்காட்சியில் புகைப் படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

பாதுகாப்பு படைப்பிரிவினரால் எடுக்கப்பட்ட சுமார் 400 இற்கும் அதிகமான புகைப்படங்கள் இதில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இன்று சனிக்கிழமையும் நாளையும் இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. இக் கண்காட்சியை பார்வையிடுவதற்கான அனுமதி இலவசம். எனவே பொதுமக்கள் கண்காட்சியை வந்து பார்வையிடலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இன்றைய தினம் பிரதம விருந்தினராக இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரியவும் நாளையதினம் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பொதுமக்களுக்கும் பாதுகாப்பு படைப் பிரிவினருக்குமான புரிந்துணர்வை வலுப்படுத்தும் வகையில் இக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது என படைத்தலைமையகம் அறிவித்துள்ளது. குறிப்பிடத்தக்கது. (அ-4-6)

(படங்கள்:- உ.சாளீன், எஸ்.கரன்)

## சட்டவிரோதமாக பசுக்களை கடத்திய எட்டுப்பேர் கைது

(கொழும்பு)

புத்தளம் வனாத்தவில்லு பகுதியில் சட்ட விரோதமாக பசுக்களை லொறிகளில் ஏற்றிச் சென்ற எட்டுப்பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பசுக்கள் ஏற்றிச் செல்லப்பட்ட எட்டு லொறிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த லொறிகளில் 96 மாடுகள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேக நபர்கள் நேற்று புத்தளம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ-2)

## ஒட்டுசுட்டான் கோட்டத்தின் பெருவிளையாட்டு போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகள்

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற பெரு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரம் ஒட்டுசுட்டான் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த. பங்கயச் செல்வனால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் வெற்றியீட்டிய முதல் மூன்று பாடசாலைகளின் விபரம் வருமாறு,

**வலைப்பந்தாட்டப்போட்டி**

**15 வயதுப்பிரிவு- பெண்கள்**

மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, மு/ முத்தையன் கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை, மு/ மாங்குளம் மகா வித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு- பெண்கள்**

மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, மு/ முத்தையன் கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை, மு/ ஒலுமடு அ.த.க. பாடசாலை.

**19 வயதுப்பிரிவு- பெண்கள்**

மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, மு/ ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்,மு/ ஒலுமடு அ.த.க. பாடசாலை

**கரப்பந்தாட்டப்போட்டி**

**15 வயதுப்பிரிவு ஆண்கள்**

மு/ முத்தையன் கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை, மு/ ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், மு/ முத்தையன் கட்டு வலதுகரை அ.த.க. பாடசாலை,

**17 வயதுப்பிரிவு- ஆண்கள்**

மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, மு/ ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்,மு/ முத்தையன் கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை,

**19 வயதுப்பிரிவு- ஆண்கள்**

மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, மு/ திருமுறிகண்டி இந்து வித்தியாலயம், மு/ முத்தையன் கட்டு வலதுகரை அ.த.க. பாடசாலை.

**15 வயதுப்பிரிவு- பெண்கள்**

மு/ முத்தையன் கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை, மு/கூழாமுறிப்பு அ.த.க. பாடசாலை, மு/ மாங்குளம் மகா வித்தியாலயம்

**17 வயதுப்பிரிவு- பெண்கள்**

மு/ மாங்குளம் மகா வித்தியாலயம், மு/ ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், மு/ முத்தையன் கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை.

**19 வயதுப்பிரிவு- பெண்கள்**

மு/ மாங்குளம் மகா வித்தியாலயம், மு/ கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, மு/ ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம். (அ-3-15)

## நீதிமன்றத்தால் அபராதம்

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை பிரதேசத்தில் அனுமதிப்பத்திரம் இன்றி அரச சாராயம் விற்பனை செய்த இருவருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் கடந்த புதன்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

நவிண்டில் பகுதியில் ஒருவரும் கம்பர் மலைப் பகுதியை சேர்ந்த ஒருவரும் வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதவான் இருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (அ-3-24)

## அக்ரே ஆறு உடைப்பெடுத்து வெள்ளம்; பொலிவியாவில் அவசரநிலை பிரகடனம்



தென்அமெரிக்காவில் உள்ள பொலிவியா நாட்டில் கடும் மழை பெய்து வருகின்றது. இதனால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. அமேசன் ஆற்றின் துணை நதியான அக்ரோ ஆறு உடைந்து ஊருக்குள் வெள்ளம் புகுந்து விட்டது.

இதனால் நாட்டின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில் மிதக்கின்றன. இதில் 9 ஆயிரம் வீடுகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளது. 50 பேருக்கும் மேற்பட்டோர் வெள்ளத்தில் சிக்கி பலியாகி உள்ளனர்.

வெள்ள நிலைமை தொடர்ந்து மோசமாக உள்ளது. இதனால் நாட்டில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பக்கத்தில் உள்ள பெரு, பிரேசில் நாட்டிலும் வெள்ள நிலைமை மோசமாக உள்ளது. (அ-2)

## ஐ.நா. பேரவையில் இலங்கை எதிர்நோக்கும் சவால்கள் குறித்து அரச ஆதரவு செயற்பாடுகள்

### ஊடக அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனீவாவில் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மனித உரிமை பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கை எதிர்கொள்ளவுள்ள சவால்கள் மற்றும் அபாயங்கள் குறித்து மக்களை தெளிவுபடுத்தும் வகையில் அன்றைய தினம் கொழும்பை பிரதான மாக கொண்டு நாட்டின் அனைத்து தொகுதிகளிலும் அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் மக்கள் இயக்க செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது.

நாட்டு மக்கள் திரண்டு வந்து அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் என பதில் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

அத்துடன் எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவும் ஏப்ரல் 5 ஆம் திகதி அனைத்து கிராமசேவகர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட மூன்று குடும்பங்களுக்கு வீட்டுத்தோட்டங்கள் குறித்து அறிவுறுத்தும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஜெனீவா ஐ.நா. முன்றலில் அணிதிரள தமிழகம் அழைப்பு

## உரிமைக்காக குரல் கொடுப்போம்




பெப்ரவரி 27 ஆம் நாள் தொட ங்கவிருக்கின்ற ஜெனீவா ஐ.நா. மனித உரிமை சபைக்கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணையை வலியுறுத்தி புலம்பெயர் தமிழர்களை ஐ.நா. முன்றலில் அணிதிரளுமாறு தமிழகத்தில் இருந்து செந்தமிழன் சீமான் அறைகூவல் விடுத்துள்ளார்.

ஜெனீவாவை நோக்கிய நடை பயணங்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ள சீமான் பெப்ரவரி 27 ஆம் திகதி முதல் இடம்பெற விருக்கின்ற ஐ.நா. மனித உரிமைச் சபையை நோக்கி சர்வதேச விசாரணையின் அவசியத்தை வலியுறுத்தி எமது உரிமைக்கான குரலை ஓங்கி ஒலிக்க அனைவரும் அணிதிரள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

எமக்கான சுவாசத்தை நாமே சுவாசிப்பது போல எமது விடுதலையை நாமே போராடிப் பெற்றுக் கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ள அவர் ஓடாத மானும் போராடாத இனமும் வென்றெடுத்ததாக சரித்திரம் இல்லை எனும் புதுவை இரத்தினதுரையின் வரிகளுக்கமைய அனைவரும் எழுந்து ஆர்ப்பரித்து ஐ.நா. முன்றலில் அணிதிரளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## அநீதியை தட்டிக் கேட்போம்



எதிர்வரும் 27 ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகும் மனித உரிமை மாநாட்டின் பொழுது தமிழர்கள் அனைவரும் ஒன்று திரண்டு குரல் எழுப்ப வேண்டும் என தமிழ் உணர்வாளரும் ஈழத்தமிழருக்காக எப்போதும் குரல் கொடுப்பவருமான நடிகர் சத்தியராஜ் அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகும் மனித உரிமை மாநாட்டின் பொழுது சர்வதேச சுயாதீன விசாரணையை வலியுறுத்தியும் இலங்கை தீவில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியை கோரியும் தமிழர்கள் அனைவரும் ஒன்று திரண்டு குரல் எழுப்ப வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசுக்கு எதிரான ஆதரவை அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகள் தெரிவித்துள்ள இந்த வேளையில் அதற்கு வலுச்சேர்க்கின்ற வகையில் தமிழர்களாகிய நாம் எமது எழுச்சியை காட்ட வேண்டியது அவசியமாகின்றது. அந்த எழுச்சியே அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் ஒரு உத்வேகத்தை கொடுக்கும்.

அந்த எழுச்சியை நாம் காட்ட வேண்டுமானால் நமக்குள் இருக்கும் பேதங்களை கிளைகள் எல்லாவற்றையும் மறந்து ஒற்றைக் குடையின் கீழ் தமிழர்களின் தாகம் தமிழீழ தாயகம் எனும் ஒற்றை வார்த்தைக்காக எல்லா பேதங்களையும் மறந்து பெரியளவில் ஒன்று கூட வேண்டும்.

அவ்வாறு கூடும் கூட்டத்தை பார்க்கும் போதுதான் உலக நாடுகளின் கவனம் நம் பக்கம் திரும்பும். எனவே, எல்லோருடைய கவனத்தையும் நம்பக்கம் திருப்ப வேண்டும் என்றால் நமது ஒற்றுமையும் ஒன்று கூடும் கூட்டத்தின் அளவுமே அதனை ஏற்படுத்தும்.

மேலும் அனைவரினது கவனமும் நம்பக்கம் திரும்பும் போது தான் தமிழர்களின் தாகம் எனும் எமது இலட்சியம் வெற்றி பெறும் என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

(அ-7)

# நீதிமன்ற நியாயாதிக்கம் குறித்த சிக்கல்களை ஆராய விசேட குழு

நீதிமன்ற நியாயாதிக்கம் தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்களை ஆராய்வதற்காக விசேட குழுவொன்றை நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் நியமித்துள்ளார்.

உயர்நீதியரசர் காமினி அமரதுங்கவை தலைவராக கொண்ட இக்குழுவில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் ஜயந்த பதிரண மற்றும் நீதி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பியுமந்தி பீரிஸ் ஆகியோர் உறுப்பினராக உள்ளனர்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சிப்லி அஸீஸ் ஆகியோருடன் கலந்தாலோசித்த பின்னரே நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் இக்குழுவை நியமித்துள்ளார்.(அ-2)


ஸ்ரீ கந்தசாமி கோவில்

உசன் மிருசுவில்



மஹா உன்னத பாஞ்சன்ய சகித
108 வலம்புரி சங்காபிஷேக
ஸ்கந்த ஹோமப் பெருவிழா -26.02.2012

உசன் கந்தசாமி கோவில் பிரதமகுருக்கள்
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில்
அருள்வாக்குச் சித்தர்
குகஸ்ரீ இரத்தின கேதீஸ்வர சுவாமிகள்
தலைமையில் பல சிவாச்சாரியர்கள்
கலந்து சிறப்பிப்பார்கள்.

- ஸ்கந்த கானங்கள் என்னும் இறுவெட்டு (CD) வெளியீடும் இடம்பெறும்.
- www.ussanjaffna.com.என்னும் இணையத்தளத்தில் கோவில் நிகழ்ச்சிகளைப் பார்வையிடலாம்.
- யாழ்.பிரதான பஸ் நிலையத்திலிருந்து உசன் கந்தசாமி கோயில் வரை தட இல.769 இ.போ.ச தனியார் சிற்றூர்தி போக்குவரத்துச் சேவையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(C-5903)

விளம்பர அனுசரணை:- தில்லையம்பதி மோட்டோர்ஸ்
இல.114, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
Dealers in:Agriculture Electric water pumps , hugo power Tools, Engineering Tool, Generators,Machines & spare parts
phone:-021 222 5710
Fax:-021 222 4542


# ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்

## அரசிற்கு இதைத்தவிர வேறுவழியில்லை என்கிறார் மனோ

ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஏற்பட்டுள்ள சவால்கள் தொடர்பில் அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையை பெற தவறிவிட்டது. மறுபக்கத்தில் அரசாங்கத்தின் சில பங்காளிக் கட்சிகள் மனித உரிமை விவகாரம் முழுவதையும் மேற்கத்தேய நாடுகளின் சதி என்று குரல் எழுப்ப தொடங்கி விட்டன. அரசாங்கத்திற்கு இருக்கும் கடைசி ஆயுதம் கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக் குழுவின் அறிக்கைதான். ஆனால், இந்த உள்ளூர் தீவிரவாதிகளுக்கு பயந்து அந்த அறிக்கையைக் கூட ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க முடியாது என அரசாங்கம் அடம்பிடிக்கிறது. இந்தக் காரணங்களால் இன்று அரசாங்கம் உலகத்தின் நம்பிக்கையைப் பெற தவறி விட்டது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா.செயலாளரின் அறிக்கைக்கு பதிலடியாக கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவை இந்த அரசாங்கம்தான் நியமித்தது. இன்று அரசாங்கத்தில் இருக்கும் சில தீவிரவாதிகளுக்கு இந்த உண்மை மறந்துவிட்டது. இந்த ஆணைக்குழுவையும் அதன் அறிக்கையையும் எதிர்க்கட்சிகள் நியமித்து தயாரித்ததைப் போல் இவர்கள் இன்று கூப்பாடு போடுகிறார்கள். அதேபோல் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவை புலம் பெயர்ந்த தமிழர்கள் நடத்தி வருவதைப் போல் சிங்கள மக்களுக்கு காட்டுவதற்கும் முயல்கிறார்கள்.

கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக் குழு அறிக்கையை சமர்ப்பித்து அதில் சொல்லப்பட்டுள்ள சிபாரிசுகளை குறிப்பிட்டு திட்டவட்டமான காலவரையறைக்குள் நடைமுறைப்படுத்துகிறோம் என ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவிற்கு உத்தரவாதம் அளிப்பதை தவிர இன்று இந்த அரசாங்கத்துக்கு வேறு வழி கிடையாது. ஆனால் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவிற்கு காலவரையறைக்குள் நிறைவேற்றுகின்றோம் என உத்தரவாதம் அளிப்பதென்பது இலங்கையிலே தமிழ் கட்சிகளுக்கு உத்தரவாதம் அளிப்பது என்பதுபோல் இல்லை என்பது அடிப்படை உண்மை. கையொப்பம் இட்டுவிட்டு அதை பின்னர் கிழித்துப் போட முடியாது. உத்தரவாதம் அளித்துவிட்டால் பின்னர் குறிப்பிட்ட காலவரையறை முடிந்தும் அடுத்த நாளே உலகம் வந்து கதவை தட்டும். அது மட்டுமல்ல நடைமுறையாக்கப்படும் என்று சொல்லப்பட்ட காலம் முழுக்க ஐ.நா. சபை அதை கண்காணிக்கும்.

இவற்றை அறிந்துதானோ என்னவோ அந்த அறிக்கையை ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க அரசாங்கம் பின்னடிக்கின்றது. அது தொடர்பில் காலவரையறையுடன் கூடிய உத்தரவாதம் அளிக்கவும் தயங்குகிறது.

பொதுமக்களுக்கு மரணம், காயம் ஏற்படுத்தப்பட்டமை, சரண் அடைந்ததன் பின்னர் காணாமல் போனமை தொடர்பில் இராணுவத்தின் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், சனல் நான்கு தொலைக்காட்சித்தொடர், நாடு முழுக்க காணாமல் போனோர் விவகாரம் ஆகியவை தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. தடுத்து வைக்கப்பட்டோர் பற்றிய விபரங்கள் குடும்ப அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் அரசு ஆதரவு ஆயுத குழுக்கள் கலைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

(அ-2)





பாடசாலை மாணவர்களுக்கு
மாபெரும் விலைக் கழிவு

கடந்த 30 ஆண்டுகளாக யாழ். நகர் மக்களின் தரச்சிறப்புமிக்க காலுறைகள்(SOCKS)
SILVER SHIELD SOCKS
பாடசாலை மாணவர்களுக்கும் அலுவலக ஊழியர்களுக்கும் சிறியோர் முதல் பெரியோர் வரை சகல தரத்திலும் சகல அளவுகளிலும் பெற்றுக்கொள்ள



குறிப்பு:- பாடசாலைகளுக்கும், மொத்த வியாபாரிகளுக்கும் மேலதிக கழிவு வழங்கப்படும்.

ஸ்ரீ முருகன்



303, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5392
(சி-5130)

# மாற்றம் என்பது மனிதனால் மாற்ற முடியாதது. அதற்கு நீங்கள் உங்களை தயார்ப்படுத்தியே ஆகவேண்டும்!!!




மனித வாழ்க்கையில் பல மாற்றங்கள் வியத்தகு கற்பனைகளாலும் அக்கற்பனைகளூடாக வெளிவந்த கண்டுபிடிப்புக்களாலும ஏற்படுத்தப்பட்டன. உதாரணமாக பறவைகள் போல் மனிதர்களும் பறந்தால் என்ற ரைட்சகோதரர்களின் கற்பனை விமானம் என்ற கண்டுபிடிப்பாகியது. பல வருடங்களிற்கு முதல் கணனி என்பது கூட மனித மூளைக்கு நிகரான இயந்திரம் என்ற கற்பனை கணனியாக உருவெடுத்தது 30 வருடங்களிற்கு முன் ஒரு கணனி வைத்திருப்பது என்பது எமக்கு கற்பனைக்கு அப்பாற்பட்டதாகியது. ஆனால் இன்று அது விளையாட்டுப் பொருளாகிவிட்டது. ஆக இன்றிலிருந்து 20 வருடங்கள் முன்னோக்கிப் பார்த்தால் எமது வீட்டில் ஒரு ரோபோ இருப்பது கற்பனையாகத்தெரியலாம். ஆனால் அதுதான் சத்தியம். ஆழ உற்று நோக்கினால் 30 வருடங்களிற்கு முன்பு நாம் வாழ்ந்த வாழ்வியல் மாறி இப்போது அது நவீனப்பட்டுவிட்டது. உணவு முறையும் பெயர்களும் ஒரு விஞ்ஞானியை 10 வயதில் உருவாக்கும் முயற்சியில் enfogrow, Complan with memory charges, Junior Horlicks இப்படி அடிக்கிக்கொண்டு போகலாம் அவற்றில் சொல்லப்படும் விற்றமின்களை விட, ஆக நாம் குழந்தைகள் உணவிலும் ஓர் மாற்றம், பாவனைப் பொருட்கள் T.V, Mobile 5 வயது பிள்ளையின் வேகத்தைப் போல் நம்மால் இயக்க முடியாது. விளையாட்டுப் பொருட்கள், Micro soft X box360,Joystick ஏதும் இன்றி உடல் அசைவுகளின் மூலம் விளையாட முடியும். கணனிகள் Intel இன் புதிய Mother Board (invention) கண்டுபிடிப்பு முயற்சி மனதில் நினைப்பதை செய்யும் கணனி, இலத்திரனியல் சாதனங்கள் எம்கண்ணசைவுக்கு கட்டுப்படும் என்பது கண்டுபிடிப்பாளர்களின் கட்டியம். திரைப்படங்கள் கற்பனை சக்தியின் எல்லையைக் தாண்டிவிட்டது. அனகொன்டா முதல் யுஎயவயச வரை. ஆக 2030 செல்லபிராணியாக சுஜாதாவின் ஜினோவாகலம். எனவே இன்றைய இளைஞர்களுக்கும் பெற்றோர்களுக்கும் IDM சாவகச்சேரி சொல்லவிளையும் செய்தி. மாற்றம் என்பது மனிதனால் மாற்ற முடியாதது. அதற்கு நீங்கள் உங்களை தயார்ப்படுத்தியே ஆகவேண்டும். அல்லது உங்கள் குழந்தையின் அல்லது பேரக்குழந்தையின் Life style வாழ்வியல் உங்களிற்கு அப்பாற்பட்டாதகிவிடும். எனவே தொழில்நுட்பக்கல்வியை உதாசீனம் செய்யாதீர்கள். அவற்றின் அவசியத்தை எதிர்காலத்தில் நின்று யோசியுங்கள். சிலவேளை பரீட்சையில் எதிர்காலத்தில் Google தேடுபொறி ஒரு பொறிமுறையாகலாம். ஆதாரமாக Apple iBook. (அப்பிளின் இணையப்பக்கத்திற்கோ Youtube தளத்திற்கோ சென்று பார்வையிடவும்.)

மாற்றத்திற்கு முதல் வித்தாக IDM சாவகச்சேரி கிளையினை மேலும் நவீனப்படுத்தி தென்மராட்சி பிரதேச மக்களின் அமோக வரவேற்பினால் சேவை வசதிகளை விஸ்தரித்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில் No. 267, Kandy Road, Chavakachchari என்ற புதிய முகவரியில் சேவை விஸ்தீரினம் செய்து வருங்காலத்தை இலகுவாக எதிர்கொள்ளும் வகையில் பல பாடத்திட்டங்களை மேலதிகமாக இணைத்து மெருகூட்டியுள்ளது Step into (Pvt) Ltd.

Step into "முன்னேறு" என்பது பொருள் மாணவர்களை மாத்திரமன்றி மானிடரையும் "முன்னேறு" என்று முன்னேற்றும் முனைப்பில் உருவாகிய ஒரு நிறுவனம். மனித முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியம் நற்பண்பு.அப்பண்பு கல்விஊடாகவே உருவாகிறது. ஆகவேதான் Step into நிறுவனம் தனது முதல் சேவையாக கல்வியை தெரிவு செய்து இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக்கல்வி மற்றும் வணிகமுகாமைத்துவகல்வி நெறிகளில் தலைசிறந்த IDM இனை தெரிவுசெய்து சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பட்டக்கல்விநெறிகளையும் டிப்ளோமா கல்விநெறிகளையும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களுடன் தென்மாரட்சி பிரதேசத்திற்கு கடந்த 3 வருடங்களாக சேவை வழங்கிவருகிறது.

இச்சேவைகளை மேலும் வளமூட்டி Step into (Pvt) Ltd, IDM சாவகச்சேரி கிளையில் கீழ்வரும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மற்றும் வணிக முகாமைத்துவகல்வி நெறிகளில் பல பிரிவுகளை மாணவர்களுக்கு வழங்கி வருகிறது.

## Degree Foundation Programmes

International Certificate in Computing
International Certificate in Business Management
International Diploma in Computing
International Diploma in Business Management
Diploma in Multimedia
Diploma in PC Assembling,
Advanced Diploma in Computer Networks

## School of Multimedia Engineering

Certificate in 3D Modelling & Animation
Certificate in Desktop Publishing
Certificate in Audio & Video Editing
Certificate in Video Editing
Flash Basics
Adobe Photoshop
3D Modelling with MAYA
Macromedia Dreamweaver
Corel Draw
Adobe Premier
Adobe After Effects
Adobe Illustrator
AutoCAD

## School of Network Engineering

CCNA

## Higher Diploma Programmes

IHD in Software Development (EdHat)
IHD in Computer Networks (EdHat)
IHD in Business Management (EdHat)

## School of Software Engineering

C Language
C#.Net
Java
C++
ASP.Net
VB.Net

## Centre for Administrative Studies

Certificate in Computer Application (MS Office)
eCitizen
Advanced Excel
MS Project
DICAP
QuickBooks 2008
MYOB 12
ACCPAC Simply Accounting
Sage
Tally
Web Designing
O/L IT
Certificate in Business English
Certificate in Software Engineering

இதற்கு மேலதிகமாக தகமை வாய்ந்த முதுமானி மற்றும் இளநிலைமானி பூர்த்தி செய்த விரிவுரையாளர்களின் மூலம் பாடநெறி விரிவுரைகளை வழங்குகிறது. அத்துடன் அவ்விரிவுரைகள் மற்றும் பாடநெறிகளின் தரத்தினை உறுதிசெய்யும் பொருட்டு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் சமூக ஆவலர்களை உள்ளடக்கிய புத்திஜீவிகள் சபை அமைக்கப்பட்டு தரக்கட்டுப்பாடு பேணப்படுகிறது.

f Like www.facebook.com/IDMCHAVACAMPUS

# இலங்கை- அமெ.க்கு இடையே முறுகல் நிலை ஏற்படும் அபாயம்

(கொழும்பு)

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஒரு இராஜதந்திர முறுகல் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனி உரிமைகள் 19 ஆவது அமர்வில் அமெரிக்காவினால் கொண்டு வரப்படவுள்ள பிரேரணையை தோற்கடிக்க இலங்கைக்கு உதவ வேண்டும் என்று இலங்கை உறுப்பு நாடுகளிடம் கோரியுள்ளமையை அடுத்தே இம் முறுகல் நிலை தோன்றியுள்ளது.

ஜெனீவாவில் உள்ள இலங்கையின் நிரந்தர பிரதிநிதி தாமரா குணநாயகம், அமெரிக்காவின் பிரேரணைக்கு எதிராக செயற்படுமாறும் உறுப்பு நாடுகளுக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். இலங்கை அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்பை அமெரிக்கா கொண்டிருக்கிறது. ஆயினும் அமெரிக்கா புதிய பிரச்சினையை உருவாக்க முயற்சிக்கிறது என்று தாமரா குணநாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு அவதூறு ஏற்படும் வகையில் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கை காரணமாக தேவையற்ற பிரச்சினைகள் எழக்கூடும். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளை தகர்க்கும் வகையிலேயே ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டு வரப்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-7)

# சனல் 4 தொலைக்காட்சிக்கு விசேட விருதுகள்!

பிரிட்டனில் சனல் 4 தொலைக்காட்சி ஊடக நிறுவனத்திற்கு விசேட விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. றோயல் டெலிவிசன் சேசய்டீ என்னும் அமைப்பினால் இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை தொடர்பான காணொளி உள்ளிட்ட சனல் 4 ஊடகத்தின் படைப்புக்களுக்காக விருது வழங்கப்பட்டுள்ளது.

சோமாலியர்களின் ஒலிம்பிக் கனவு தொடர்பாக சனல் 4 ஊடகவியலாளர் ஜமால் ஒஸ்மானின் காணொளிக்கு விசேட விருது வழக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்களைத் தாண்டி பயிற்சியில் ஈடுபட்டு வரும் மெய்வல்லுந வீரர்கள் பற்றிய ஆவணப்படமாக இந்தக் காணொளி அமைந்துள்ளது.

சனல் 4 ஊடக நிறுவனத்திற்கு மொத்தமாக மூன்று விருதுகள் வழங்கப்பட்டன. (அ-2)

# சிலாபம் மீனவர்களின் பகிஷ்கரிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது

(புத்தளம்)

எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து சிலாபம் மீனவர்கள் மேற்கொண்டிருந்த மீன்பிடித் தொழிலுக்கு கடலுக்குச் செல்வதில்லை என்ற பகிஷ்கரிப்பு நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. சிலாபம் கத்தோலிக்க ஆயர் தலைமையில் அண்மையில் சிலாபம் ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையினை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இப் பேச்சுவார்த்தையில் வடமேல் மாகாண கடற்றொழில் அமைச்சர் சனத் நிஷாந்த சிலாபம் பிரதேச செயலாளர் நிலந்தி பெர்னாண்டோ ஆகியோருடன் சிலாபம் பிரதேச மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளும் சிலாபம் நகரசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அடுத்த ஆறு தினங்களுக்கு வெளியில் இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிப் படகுகளின் உரிமையாளர்களுக்கு ஒரு நாளைக்கு 30 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்குவதற்கு இதன்போது வடமேல் மாகாண அமைச்சர் இணக்கம் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் இடம்பெறவுள்ள சந்திப்பின் பின்னர் இதற்கு மேலும் சலுகைகளை வழங்க எதிர்பார்ப்பதாகவும் மாகாண அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்திவிட்டு மீண்டும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக கடலுக்குச் செல்ல முடிவு செய்துள்ளதாக சிலாபம் மீனவச் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# இணக்கம் காணப்பட்ட விடயங்களுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படவில்லை

## போராட்டம் என்கிறது தாதியர் சங்கம்

(கொழும்பு)

அரச தாதிய உத்தியோகத்தர்கள் எதிர் நோக்கும் பிரச்சினை தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது இணக்கம் காணப்பட்ட விடயங்கள் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று அரச தாதிய உத்தியோகத்தர் சங்கம் அறிவித்துள்ளது.

எனவே, மீண்டும் தொழிற்சங்க போராட்டத்தை மேற்கொள்ளும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப் பிரிய மேலும் தெரிவித்துள்ளதாவது,

தாதியர் சேவைகள் தொடர்பாக 12 பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டு அவற்றை தீர்க்குமாறு வலியுறுத்தி நாடு பூராகவும் உள்ள அரச வைத்தியசாலைகளில் கடந்த 2, 9 ஆம் திகதிகளில் எமது சங்கம் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தியது.

இதன் பின்னர் சுகாதார அமைச்சரோடு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு இணக்கப்பாடு காணப்பட்டது. ஆனால், அதற்கமைவான சுற்றறிக்கைகளுக்கு அரச சேவைகள் ஆணைக்குழு அங்கீகரித்தது இரண்டு வாரங்கள் சென்ற போதும் அவற்றை சுகாதாரத் துறை அதிகாரிகள் வெளியிடவில்லை.

எனவே,எமது பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காததால் எதிர்வரும் 28 ஆம் திகதி சுகாதார அமைச்சின் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# சில அமைச்சுக்களின் செலவீனங்களை 9 வீதத்தால் குறைக்க அரசு நடவடிக்கை

சில அமைச்சுக்களின் செலவீனங்களை 9 வீதத்தால் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நிர்வாகம் மற்றும் ஏனைய செலவீனங்கள் இவ்வாறு குறைக்கப்படவுள்ளதாக கொழும்பில் இன்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமைச்சரவை பதில் பேச்சாளரும் அமைச்சருமான லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் வருடாந்த வருமானம் ஆயிரம் பில்லியன் ரூபாவிலிருந்து 140 பில்லியன் ரூபா நிவாரணங்களுக்கென ஒதுக்கப்படுவதாக அரசாங்கம் தெரிவிக்கிறது.

அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட எரிபொருள் மானியத்திற்கு மாதாந்தம் 25 கோடி ரூபா செலவிட நேரிட்டுள்ளதாக லக்ஸ்மன் யாப்பா மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# இப்படியும் பாதுகாப்பு அறிவுறுத்தல்!

(கொழும்பு)




வாகன சாரதியொருவர் வாகனம் செலு த்தும் போது கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய மூன்று விடயங்களை மையப்படுத்தி மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்திற்கு முன்னால் சுகாதார அமைச்சினால் மூன்று பதாகைகள் தொங்கவிடப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.


ஹெல்மட் அணியுங்கள், உயிரை காப்பாற்றுங்கள், வீதியில் கையடக்க தொலைபேசி அழைக்கும் ஒலி உயிர்ப்பலி, ஆசனப் பட்டிகளை அணியுங்கள், பாதுகாப்பான பயணத்தை ஆரம்பியுங்கள் ஆகிய மூன்று விடயங்களையும் வாகனம் செலுத்தும்போது அவதானித்து வீதி விபத்துக்களை தவிர்த்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு சுகாதார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளதை காணக்கூடியதாகவுள்ளது. (அ-2)

# செயலமர்வு

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாட சாலைகளில் கடமையாற்றும் உடற்கல்விப் பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறு தினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப் பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் பாட சாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

நடப்பாண்டில் நடைமுறைப்படுத்தப்படவு ள்ள உடற்கல்வி பாடம் தொடர்பான செயற் றிட்டங்கள் தொடர்பாகவும் இவ்வாண்டு வலய மட்ட ரீதியில் நடைபெறவுள்ள பெருவிளையாட்டுக்கள், மெய்வல்லுநர் போட்டிகள் தொட ர்பான முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் உடற்கல்வி ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ள ஆவன செய்யுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-3-15)






அல்வாய்கலையகத்தில் அவை 38 நிகழ்வில் எழுத்தாளர் கே.ஆர். டேவிற்றின் இலக்கிய அனுபவம் குறித்த கலந்துரையாடலும் கலாபூஷணம் விருது பெற்றமைக்கான பாராட்டு விழா நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் பாராட்டுரை நிகழ்த்துவதையும் திரு.திருமதி கே.ஆர். டேவிற் தம்பதியின ருக்கு ஓய்வு பெற்ற தென்மராட்சி பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராஜலிங்கம் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

# இரண்டாம் உலக யுத்தம்


## ஒரு மீள்பார்வை 51



ஜேர்மன் படையால், கைது செய்யப்பட்ட சோவியத்துருப்புகள் புகையிரதத்தில் ஜேர்மனிக்கு, கொண்டு செல்லப்படுகின்றனர். முகாமிற்கு கொண்டு செல்லப்பட்ட பல மில்லியன் கணக்கான சோவியத் கைதிகளில் அதிகமானோர் உயிருடன் திரும்பவில்லை


இவர்கள் சந்திக்க நேரிட்டது.

சோவியத் மக்கள் அனைவரையும் தன்னைச் சுற்றி அணிதிரட்டி இராணுவ அணிகளை ஒருங்கிணைத்து வீரச்செயல்களைப் புரிய போர்வீரர்களுக்கு ஊக்கமளித்த கம்யூனிஸ்ட் கட்சியின் மிகப் பெரும் இராணுவ-ஸ்தாபன அமைப்புப்பணி மற்றும் இராணுவ சித்தாந்தப் பணியின் பயனாகத்தான் மாஸ்கோ அருகே மகத்தான வெற்றியை அடைவது சாத்தியமாயிற்று. சோவியத் மக்களால், கட்சியின் தலைமையின் கீழ், பாசிச ஜேர்மனி, தாய்நாட்டைத் திடீரென தாக்கியதால் ஏற்பட்ட



ஜேர்மன்படையினர்ஸ்மெலேன்ஸ்க் பிரதேசத்திலுள்ள வெலிஸ் நகரப்பகுதியில் 5 சோவியத் பொதுமக்களை தூக்கிலிடுகின்றனர் (1941 செப்ரம்பர்)

கொடிய விளைவுகளை அகற்றி, கடுமையான, உக்கிரமான போராட்டத்தில் சக்திகளின் சமன்நிலையை மாற்ற முடிந்தது.



கைதான ருஷ்ய சேனை ஒன்றின் தலைவரை ஜேர்மன் அலுவலகர்கள் விசாரிக்கின்றனர்.(1941-24-ஒக்டோபர்)

கட்டுக்கோப்பாலும் தாங்கி நிற்கும் திறமையாலும் பெரும்பலமுடைய எதிரியின் தாக்குதல்களை இவர்களால் முறியடிக்க முடிந்தது. தன் பங்கிற்கு இவ்வெற்றி, மக்களின் இராணுவத்தின் தார்மீக மனநிலையை உயர்த்துவதற்கு மதிப்பிட முடியா, முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. மாஸ்கோ அருகே அடையப் பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியானது, புதிய வீரதீரச்செயல்களுக்கு மக்களை ஊக்கிவித்தது. எதிரி கண்டிப்பாக முறியடிக்கப்படுவான் என்னும் நம்பிக்கையைப் பலப்படுத்தியது. என்று லி.இ.பிரேஸ்னெவ் குறிப்பிட்டார்.

கப்படுவதைப்போல துயர நிகழ்ச்சிகள் அல்ல. மாறாக வீரஞ்செறிந்த சம்பவங்கள்தான், பாசிச கொலை பாதகர்களுக்கு எதிரான இளம் சோஷலிச அரசின் மகத்தான போராட்டத்தில் முக்கியமானவையாக இருந்தன.

யுத்தத்தின் ஆரம்பத்தில் இவ்வளவு சிக்கலான கடினமான சூழ்நிலையில் இருந்து ஓர் அரசு இவ்வளவு துரோகமான, வலிமையான எதிரியின்மீது இந்த அளவு உறுதியான வெற்றி அடைந்ததற்கு வரலாற்றில் ஈடு இணையே கிடையாது.

சோவியத் யூனியனின் 1941 ஆம் ஆண்டிலேயே, தான் ஒரு பலமான நாடு என்று காட்டியது. எந்த ஒரு மேலை நாட்டாலும், வேறெந்த சமூக, அரசு அமைப்பாலும் முடியாததை சோவியத் யூனியன் செய்தது. ஆக்கிரமிப்பாளனின் பாதையைத் தடுத்து நிறுத்தியது, எதிரியின் திட்டங்களை சீர்குலைத்தது, எதிரிக்குப் பெருமளவு ஆட்சேதத்தையும் பொருட்சேதத்தையும் ஏற்படுத்தியது, இறுதியாக, பிளிட்ஸ்கிரிக் சித்தாந்தத்தை முடிவாகக் குழிதோண்டி புதைக்கும் முகமாக மாஸ்கோ அருகே எதிரியின் முக்கிய படைத்திரட்டை முறியடித்தது, இவை

தற்செயலான தோல்வி மற்றும் ஹிட்லரின் மரணத்துக்கு ஒப்பான தவறுகள் ஆகியவற்றைப் பற்றியே ஏராளமான வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. நிச்சயமாக இவை அனைத்தும் ஆதாரமற்ற கற்பனைகளாகும். வரலாற்று உண்மைகளையும் ஆவணங்களையும் நாம் அணுகியதுமே, இக்கற்பனைகளின் செயற்கைத்தன்மை வெளிப்படுகிறது.

மின்னல்வேக யுத்த திட்டத்தின் தோல்விக்கான காரணங்களை ஆராயும்போது பூர்ஷ்வா வரலாற்றாசிரியர்களிடம் ஒரு பொதுவான போக்கைக் காணலாம். உண்மைக் காரணங்களை திரித்துக்கூற அல்லது இவற்றைப்பற்றி மௌனம் சாதிக்கும் முயற்சி, இவற்றிற்குப் பதிலாக சகல விதமான கற்பனைக் கூற்றுக்களைக் கூறுவது, வேர்மஹ்டை, இதன் போர்க் கலையை, எல்லாவற்றிற்கும் மேலாக பிளிட்ஸ்கிரிக் சித்தாந்தத்தை, நியாயப்படுத்துவது முதலியன இப்போக்கிற்கு உரித்தான அம்சங்களாகும்.

நவீன சூழ்நிலைகளில் பிளிட்கிரிக் சித்தாந்தம். எந்தவார்த்தைகளினாலும் மூடிமறைக்கப்பட்டிருந்தாலும் தனது அரசியல் சாரத்தை மாற்றவில்லை. இது ஆக்கிரமிப்பு யுத்த சித்தாந்தமாகத்தான் இருந்தது, இப்போதும் இருந்து வருகிறது.

மாஸ்கோ அருகே பாசிச ஜேர்மனியத் துருப்புகள் முறியடிக்கப்பட்டதானது, ஹிட்லர் போர்த் தந்திரத்தின் ஆதாரமின்மையை மட்டுமின்றி, பாசிசஜேர்மனியின் தலைவர்களின் கொள்கை முழுவதன் அதிசாகசத் தன்மையையும் அம்பலப்படுத்தியது. ஹிட்லர் போர்த்தந்திரவாதிகளின் முக்கியதவறு என்னவெனில் இவர்கள் செஞ்சேனைக்கு எதிராக மட்டுமே யுத்தம் நடத்த எண்ணினார்கள். ஆனால், சோவியத் மக்கள் அனைவரின் எதிர்ப்பையும்

## 'ஜேர்மனி, ஜப்பான் ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பு மின்னல் வேக யுத்தம்' என்ற ஹிட்லர் போர்த்தந்திரத்தின் தோல்வி

சோவியத் ஊக்களும் இராணுவத் தலைநகர வாயில்களின் அருகே உயிரோட்டமுள்ள சோவியத் நாட்டுப் பற்றின் மிகச்சிறந்த உதாரணங்களைக் காட்டினர். போர்முனையில் காட்டிய மிகப்பெரும் வீரத்தீரங்களாலும் உள்நாட்டில் வெளிப்படுத்திய மகத்தான உழைப்பாலும் உயர்ந்த



பனி காரணமாக போக்குவரத்து தடைப்பட்டதால் போதிய உணவு வந்து சேராமையால் மொஸ்கோவிற்கு அருகிலுள்ள தமது நிலைகளிலிருந்து வெளியேறும் ஜேர்மனி துருப்புகள் (1941-நவம்பர்)

1941 ஆம் ஆண்டு சோவியத் மக்களுக்கும் இராணுவத்திற்கும் பெரிதும் கடினமான யுத்த ஆண்டாக இருந்தது. இந்த ஆண்டில் திடீர் சம்பவங்களும் பேரிழப்புக்களும் பெரும் நாசங்களும் நிறைந்திருந்தன. கடுமையான போராட்டம் மிகவும் கூர்மையடைந்து, போராட்ட இழை அதிக பட்சம் இழுக்கப்பட்டிருந்தபோது மிகக் கடுமையான நெருக்கடி நிலைகள் இந்த ஆண்டுடன் தொடர்பு கொண்டிருந்தன. ஆனால், 1941 ஆம் ஆண்டு சோவியத் நாட்டைப் பொறுத்தமட்டில் வீரஞ் செறிந்த சம்பவங்கள் நிறைந்த ஆண்டாகவும் இருந்தது. சிலசமயங்களில் இலக்கியத்தில் சித்தரிக்



ருஷ்யாவிலுள்ள ஸ்ரெறிஷா எனும் இடத்தில் ஓய்விலுள்ள ஜேர்மன் பொறியியல் பகுதித் துருப்புகள்


யனைத்தும் பெரும் சர்வதேச எதிரொலியை உண்டாக்கியது. இரண்டாம் உலகயுத்தத்தின் பொதுப் போக்கில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தியது. வரவிருந்த மகத்தான வெற்றிகளுக்கான உறுதியான அஸ்திவாரத்தை அமைத்தது.

(தொடரும்)

# வடபகுதி வேளாண்மையும் அது சார்ந்த முதலீடுகளும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

18- IV



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம் இனிய உறவுகளே!**

வடபகுதி அபிவிருத்திக்குள் கிராமங்களை முன்னிலைப்படுத்தி அவற்றினது அபிவிருத்தி முழுமையாக முன்னெடுக்கப்பட்டால் மாத்திரமே இதுகாலும் நெருக்கடிக்குள் சிக்குண்டு பலவற்றையும் இழந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கான அபிவிருத்தியாக அது அமையும். இப்பிரதேசத்து மக்களினது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப இந்த அபிவிருத்தி வழி செய்து கொடுக்கவேண்டும். மக்களினுடைய சிந்தனைக்குள்ளிருந்து இது வெளிப்படல் வேண்டும். இது விடயத்தில் வடபுலத்து கல்வியாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் சிந்திக்க வேண்டியது அவசியம். இது அவர்களுக்கான கடமையும் கூட.

அபிவிருத்தி மற்றும் முதலீடுகள் பற்றிய விவாதங்களிலும் கலந்துரையாடல்களிலும் புத்திஜீவிகள் பங்குபற்றி தமது கருத்துரைகளை, அனுபவத்தை பகிர்ந்து கொள்வது அவசியம். ஏதோ வந்தோம் என்னவோ செய்தோம், தானுண்டு தன் வேலையென்று இல்லாது அனைவரும் சேர்ந்து எமது பிரதேசத்து அபிவிருத்தி பற்றியும் அதற்கான எமது பங்களிப்பு பற்றியும் சிந்தித்து ஆக்கபூர்வமான தேசத்தை வளமாக்கும் செயற்பாடுகளில் இணைந்து செயற்படுவது நல்லது. இதிலும் இப்பிரதேசத்து வளம், இங்குள்ள வேலைவாய்ப்பு, மனித வளமேம்பாடு, அவற்றினது முக்கியத்துவம் என அனைத்திலுமே கரிசனை கொள்வதும் விரும்பத்தக்கது.

வழக்கமான இழுபறி, அடிதடி கூட்டங்களாக அல்லாது பிராந்தியஅபிவிருத்திக்கான பொறுமையான பொறுப்புள்ள கருத்துப் பரிமாறல்களாக இருக்க வேண்டும்.

இது பற்றி பலரும் கூடிப் பேசுவதும் அதன்மூலமாக அண்மையில் கூடிய கல்விமான்கள் சிலர் அறிவுசார் சமூகம் ஒன்றினது தேவைபற்றி கருத்து பரிமாறியிருந்தனர். இதுவொரு வரவேற்கத்தக்க விடயம். முழுக்க முழுக்க வடபுலத்தினது ஆக்கபூர்வமான எண்ணங்களுக்கான திறவுகோலாக இந்த அறிவுசார் சமூகத்தின் பங்களிப்பு இருப்பது நல்லது என பலரும் எதிர்பார்த்திருக்கின்றனர்.

நல்ல வழிகாட்டியாக தேசத்தினது அபிவிருத்திக்கு அச்சாணியாக அறிவுசார் சமூகத்தின் பங்களிப்பு இருத்தல் என்றுமே விரும்பத்தக்கதாகும். இதுவொரு வரலாற்று கடமையுங்கூட. அரசியலின் சாடையும் அதனது வாடையும் இங்கே கலக்கக்கூடாது.

இந்த அறிவுசார் சமூகம் அல்லது அறிவியல் சமூகம் அனைத்து நிலைகளிலுள்ளவர்களையும் ஒன்றிணைத்த ஒரு சமூக வலைக் கட்டமைப்பாக பரிணமிக்க வேண்டும். ஒவ்வொரு நகரத்திலும் இன்னும் பிரதேசம், கிராம மட்டத்திலும் உருவாக்கப்பட்டு அதற்குரிய கருத்து சுதந்திரத்துடன் செயற்பட வேண்டும். நான் ராசா, நீர் மந்திரி என்ற பேதங்களில்லாது அனைவருக்கும் உரிமை பகிர்ந்தளிக்கப்படும் நேரத்திலும் அந்த உரிமை பாதுகாக்கப்படவும் வேண்டும். ஒவ்வொருவரும் தன்னலம் மறந்து ஒன்றிணைந்தால் இது சாத்தியமே.

### வேளாண் பெருமக்களை ஒன்றிணைக்கும் முயற்சி

வேளாண் துறையின் அபிவிருத்தி அது சார்ந்த கைத்தொழிலுடன் இணைந்தே முன்னெடுக்கப்படுதல் அவசியமாகும்.

இங்கே எங்களூர் வேளாண் பெருமக்களை அந்தந்தப் பகுதியில் ஒன்றிணைப்பது அவர்களது உற்பத்திக்கும் சந்தைப்படுத்தலுக்கும் உத்தரவாதத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும். இது விடயத்தில் ஏற்கனவே விவசாய சம்மேளனங்கள் குறிப்பாக வாழைச் செய்கையாளர் சங்கம் மற்றும் வெங்காய உற்பத்தியாளர் சங்கம் என தற்சமயம் நடைமுறையிலிருப்பினும் இன்னும் இவற்றை வலுவான கட்டமைப்புக்களாக மாற்றிட வேண்டும்.

இன்னும் பனை, தென்னை அபி விருத்தி கூட்டுறவு சமாசத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ள உற்பத்திக்குழுக்களை இன்னும் வலுப்பெறச்செய்து அவர்களது உற்பத்தியினை தரமுயர்த்துவதுடன் அவர்களது வாழ்க்கை மேம்பாட்டுக்கான வழி முறைகளும் காணப்படவேண்டும்.

வேளாண்பெருமக்களை கிராமத்து பண்ணை முறைகளுக்குள் உள்வாங்குவதனூடாக அவர்களது வேளாண் செய்கைக்கு வலுவேற்றுவதன்மூலம் அதிலிருந்து பெறப்படும் உணவை மதிப்பேற்றஞ் செய்து வேளாண் சார் கைத்தொழில் செயற்பாட்டிற்கு வழி சமைக்கலாம். இங்கே தரமேம்பாடு, தரமுயர்த்தல், பொதிசெய்தல் என்பன உலகத்தரத்துக்கு உயர வேண்டும். இல்லாதுவிடில் எமது பிரதேசத்தின் மேலைத்தேய மோகத்தையும் விருப்பையுமறிந்து வெளிநாட்டுப் பொருட்கள் தினுசுதினுசாக எங்களூர் கடைகளை நிரப்பும்போது அவற்றுடன் எங்களூர் பொருட்கள் போட்டியிடமுடியாது இறுதியில் உற்பத்தியே சுருங்கிவிடும்.

இடர்காலத்தின் போது இங்கிருந்த வளங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டு மென்பானங்கள் ஏ9 பாதை திறந்து வெளிநாட்டுக்காற்று வசந்தமாக வடபகுதிக்குள் வீசத் தொடங்கியவுடன் அப்படியே அடங்கிப்போனதை நினைவில் கொள்ளல் தகும். ஆனாலும் தற்போதைய விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியை எங்களூர் உற்பத்திப் பொருட்களுக்குள் நிச்சயம் உள்வாங்கியே ஆகவேண்டும். இதற்கான தொழிற்பயிற்சி, நிறுவனத்தின் தேவை இங்கே முன்னிலைப்படுத்தப் படுகின்றது. இதுபற்றி கல்வியியலாளர்கள் இன்னும் சிந்திக்கவேண்டும். விரைந்து செயற்படவும் வேண்டும்.

வேளாண் துறையில் முதலீடு செய்ய முன்வருபவர்களுக்கு வேளாண் பண்ணைகளை அமைப்பதற்கான வழிகளை பரிந்துரைக்கலாம். வேளாண் பண்ணைகளை அமைப்பதன் மூலமாக அங்கே கட்டுப்பாடான ஆனால் உயர்தரத்துடனான விளைபொருட்களாக உற்பத்தி செய்ய வழியுண்டு. மேலும் ஒருங்கிணைந்த வேளாண்மை செய்கை முறையை முழுமையாகவே நடைமுறைப்படுத்த முடியும்.

இங்கொரு விடயத்தையும் கவனத்திற்கொள்ளவேண்டும். உற்பத்தியாகும் வேளாண் பொருட்கள் அப்படியே ஏற்றுமதி செய்யவேண்டுமாயின் அவை சேதன வேளாண்மைப் பொருட்களாக இருந்தால் அவற்றில் E.coli மற்றும் சல்மொனெல்லா போன்ற உணவுத் தொற்றுக்கான நுண்ணங்கிகளின் பிரசன்னம் இல்லாதிருக்கவேண்டும்.

இந்தநிலையிலேயே செய்கை பண்ணப்படும் பயிர்கள் உயிர்ச்சக்தி வேளாண்மை (Biodynamic Farming) மூலமாக உற்பத்திசெய்யப்பட வேண்டும்.

இது ஒருவகையில் சேதன வேளாண்மையை ஒத்ததாக இருப்பினும் இயற்கையாகவுள்ள உயிர்ச்சக்தியினது உன்னதமான பயன்பாடு இங்கே உறுதி செய்யப்படும் எனலாம். அசேதன இரசாயனமின்றி விவசாயம் இல்லை என்ற காலம்போய் உயிர்ச்சக்தி வேளாண்மையில் இனி நம்முலகம் இயங்கவேண்டிய காலம் வந்து கொண்டிருக்கின்றது.

உணவுற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதேநேரத்தில் நஞ்சற்ற உணவுக்கும் சத்தான நிறையுணவுக்கும் முக்கியத்துவம் கொடுத்தேயாக வேண்டும்.

அபவிருத்திக்கான முதலீடு அனைத்து மக்களையும் இணைத்துச் செல்ல வேண்டும். இதில் எம் உறவுகள் கேட்ட, தேடிய அனைத்தும் கிடைத்திட வேண்டும். (வளரும்)

# எரிபொருள் விலையேற்றத்தினால் பெருந்தோட்ட மக்கள் பாதிப்பு

எரிபொருட்கள் விலையேற்றத்தால் மலையக பெருந்தோட்ட மக்கள் மற்றும் மீனவ சமூகம் பாரிய நெருக்கடிகளை சந்தித்துள்ளதோடு தமது வாழ்க்கையை நடத்துவதற்கும் திண்டாடுகின்றனர். எனவே இம்மக்கள் வாழ்வதற்கு ஏதுவான மானியத்தை வழங்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மத்திய மாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் கே. கே. பியதாச தெரிவித்துள்ளார்.

எரிபொருட்கள் விலையேற்றம் மற்றும் நாடு நகர திட்டமிடல் சட்ட மூலம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எரிபொருட்களின் விலைகளை குறைத்து மக்களுக்கு சலுகைகள் வழங்கப்படாவிட்டால் நாடு பூராகவும் ஆர்ப்பாட்டங்கள் வெடிக்கும்.

அண்மையில் எரிபொருட்களின் விலைகளை அதிகரித்ததால் மீண்டுமொருமுறை அத்தியாவசிய பொருட்களின் விலைகள், போக்குவரத்து கட்டணங்கள் அதிகரித்துள்ளன.

விசேடமாக டீசல், மண்ணெண்ணெய் விலையேற்றம் செல்வந்தர்களை பாதிக்காது. ஆனால் தோட்டத் தொழிலாளர்கள், மீனவர்களை இது மிகவும் பாதித்துள்ளது.

அரசாங்கம் எரிபொருட்களின் விலையை உயர்த்தி வறுமையில் வாடும் மக்களின் வயிற்றில் அடித்துள்ளது.

ஆனால் கடந்த காலங்களில் எரிபொருட்களின் விலைகள் உலக சந்தையில் குறைந்த போது இங்கு குறைக்கப்படவில்லை.

நாட்டின் பொருளாதார நிர்வாகத்தை சரியான முறையில் நகர்த்துவதற்கு அரசாங்கத்திடம் திட்டம் எதுவுமில்லை. இதனால் மக்கள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மட்டுமின்றி உள்நாட்டு வர்த்தகர்களும் வெளிநாடுகளுக்கு செல்லும் நிலை உருவாகியுள்ளது.

ரூபாயின் மதிப்பிறக்கத்தால் அனைத்து பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. மானியங்கள் வழங்குவதிலும் திட்டம் எதுவும் இல்லை.

மாதம் ரூபா 200 எரிபொருள் மானியம் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது போதுமானதாக இல்லை.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த ஒவ்வொரு கால கட்டத்திலும் ஐ.தே.கட்சியின் அரசாங்கங்களே நாட்டை மீட்டெடுத்தது.

நாடு, நகர திட்டமிடல் சட்டமூலம் ஆபத்தானது. மக்களின் காணிகளை பறிமுதல் செய்யும் அதிகாரத்தை மத்திய அரசாங்கத்திற்கு வழங்கும்.

இது பயங்கரமானது. மாகாண சபைகளின் அதிகாரங்களை பறிக்கும் இதற்கு அனைவரும் எதிர்ப்பினை வெளியிட வேண்டும் என்றார். (அ-2)



# சிறுவர் அரங்கம்

21

## அம்புலி மாமா கதைகள்

## நீ ஏன் மதிக்க வேண்டும்?

பிரம்மதத்தன் காசியை ஆண்ட போது போதிசத்வர் அவரது அமைச்சராக இருந்தார். ஒருமுறை பிரம்மதத்தனுக்குத் தன் மகன் மீது ஏதோ ஒரு காரணத்தால் கோபம் ஏற்பட்டு விட்டது. அதனால் அவனை நாட்டை விட்டே வெளியேற்றி விட்டான்.



அரசகுமாரனும் தன் மனைவியுடன் அங்கிருந்து புறப்பட்டு போய் பல நாடுகளில் அலைந்து திரிந்து பல துன்பங்களை அனுபவித்தான்.

சில வருடங்களுக்குப் பின் பிரம்மதத்தன் இறந்து போனான். அதைக் கேட்டதும் அவனது மகன் அயல் நாட்டிலிருந்து புறப்பட்டு காசியை நோக்கி நடந்து வரலானான். அவனது மனைவியால் அவனுக்குச் சமமாக வேகமாக நடக்க முடியவில்லை இருவருக்கும் பசி எடுத்தது.

அவர்கள் ஒரு ஊரை அடைந்த போது அந்த ஊர்க்காரர்கள் அவர்களைப் பார்த்து "ஐயோ பாவம் ரொம்பவும் களைத்து போய் இருக்கிறீர்களே. இங்கேயே சாப்பிட்டுவிட்டு கையில் சிறிது கட்டி எடுத்துக் கொண்டு போகிறீர்களா?" என்றனர்.

அரசகுமாரனோ "சாப்பிடுவதற்கு நேரமில்லை சிறிது கட்டிக்கொடுங்கள். எடுத்துக் கொண்டு போகிறோம்" எனக் கூறித் தன் மனைவியை ஓரிடத்தில் சற்று நேரம் உட்கார்ந்திருக்கச் சொன்னான். பின்பு உணவு கொடுப்பதாகச் சொன்னவன் வீட்டிற்கு அவன் போனான்.அந்த வீட்டுக்காரனும் இருவரும் சாப்பிடும் அளவிற்கு உணவை இலையில் கட்டிக் கொடுத்து அனுப்பினான்.

நான் நித்திய கடன்களை முடித்து விட்டு வருகிறேன் எனக்கூறி அவளை அனுப்பி விட்டு அவள் போனதும் அவன் உணவுப் பொட்டலத்தை பிரித்து எல்லாவற்றையும் தானே சாப்பிட்டான்.பின்பு வெறும் இலைகளை பொட்டலம் போலச் செய்து எடுத்துக் கொண்டு அவன் மனைவி இருந்த இடத்தை அடைந்தான்.

அவளிடம் அவன் பொட்டலத்தைக் கொடுப்பது போல நடித்து திடீரென்று "ஆ!என்ன மோசம்!நமக்கு உணவு கொடுப்பதாகச் சொல்லி விட்டு வெறும் இலைகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்களே!" என்று அப் பொட்டலத்தைப் பிரித்தான்.

அவனது மனைவி உண்மையை புரிந்து கொண்டு விட்டாள்.ஆனாலும் கணவனுக்கு மரியாதை காட்ட வேண்டும் என்பதற்காக எதுவும் பேசாமல் இருந்தாள். இன்னும் சில நாட்கள் நடந்து சென்று முடிவில் ஒருவாறாக காசியை அடைந்தார்கள்.



அரசகுமாரன் நேராக அரண்மனைக்குப் போய் தான் வந்திருப்பதை கூறி பட்டாபிஷேகத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து சிம்மாசனத்தில் அமர்ந்தும் விட்டான்.

அரசனான பின்பு- அவன் தன் மனைவியைப் பற்றி சற்றும் கவலைப்படவில்லை. அதனால் அவள் முன்போலக் கவலைப்பட்டுக்கொண்டே இருக்கலானாள். அரசனின் அமைச்சரான போதிசத்வர் ராணி எப்போதும் கவலையுடன் இருப்பதைக் கவனித்து அவளிடம் சென்று "அம்மணி அரசர் தமக்கு நல்ல காலம் வந்ததற்காக எனக்கு ஏராளமான பரிசுகள் அளித்தார். ஆனால் நீங்கள் ஒரு பரிசு கூட அளிக்கவில்லையே" என்று கேட்டார்.

அதற்கு ராணியும் "ஐயா!நான் பெயருக்குத் தான் ராணியாக இருக்கிறேனே ஒழிய எனக்கும் அந்தப்புரத்தில் பணிபுரியும் பெண்களுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை" என்று தன் மனதில் உள்ளவற்றை கூறி அதுதான் "போகட்டும் இப்போதாவது நான் சாப்பிட்டேனா சௌகரியமாக இருக்கிறேனோ என்று அவர் என்னிடம் கேட்கலமல்லவா" எனக் கூறி கண்ணீர் வடித்தாள்.



போதிசத்வரும் "மகாராணி நடந்ததை மறந்து விடுங்கள். உங்கள் துயரத்தை உங்களிடமிருந்தே கேட்டு அறிய வேண்டும் என்று தான் நான் இங்கு வந்தேன். நான் நாளை தர்பாரில் உங்களிடம் கேள்வி கேட்கிறேன். இதே பதிலை நாளை நீங்கள் சொல்லுங்கள். உங்கள் கவலையைப் போக்கச் செய்கிறேன்" என்று ஆறுதல் கூறி விட்டுச் சென்றார்.

மறுநாள் தர்பாருக்கு ராணியும் வந்தாள். அப்போது போதிசத்வர் ராணியிடம் "அரசியார் பட்டத்திற்கு வந்ததும் ஏழைப் பணியாளர்களான எங்களை கவனிக்கவில்லையே" என்று கேட்டார். உடனே அவள் தன் கணவனின் செயலைப் பற்றி கூறினாள். தான் அவளுக்கு உணவு கூடக்கொடுக்காமல் திருட்டுத்தனமாக சாப்பிட்ட விடயம் அனைவர் முன்பும் வெளிப்பட்டதும் அரசனுக்கு அவமானமாக் போயிற்று.

உடனே போதிசத்வர் "ராணியாரே! அரசர் உங்களை மதிக்கிறதில்லை என்பது தெளிவாகிவிட்டது. பின் ஏன் அவரோடு இருக்க வேண்டும்?" எனக் கூறி ஒரு சமஸ்கிருத சுலோகத்தையும் கூறினார். அதன் கருத்து பின்வருமாறு, "விட்டுப் போகிறவனை விட்டுவிடு, அவனது நட்பையும் தொடர்பையும் விரும்பாதே. மதியாத ஒருவனை நீயும் மதிக்காதே. பறவைகள், பழங்கள் இல்லாத மரங்களை விட்டுப் பறந்து வேறு பழம் கொடுக்கும் மரத்தில் போய் வசிக்கின்றன. உலகம் பரந்து கிடக்கிறது அதில் உனக்கா இடம் இல்லை?"

இப்படி போதிசத்வர் கூறியதும் பிரம்மதத்தனின் மகன் போதிசத்வரின் கால்களில் விழுந்து "அமைச்சரே! என்னை மன்னியுங்கள். நான் என் அகம்பாவத்தால் குருடனாகிவிட்டேன். இனி என் மனைவியை கண்ணியமுடன் நடத்துவேன்" எனக் கூறி கண்ணீர் வடித்தான். பின்னர் அவன் தன் மனைவியோடு சுகமாக வாழலானான்.

# குருவைத்தேடி...



ஆன்மீகம் 05

**கேள்வி:** உடல் மற்றும் மனதின் எதிர்ப்புகள் இருந்தாலும், உள்தன்மையின் ஏக்கம் தீவிரமாகும் போது ஒருகுரு தலையிட்டு, விடுதலையைத் தருவாரா?

**சத்குரு:** என்னோடு இருப்பவர்கள், குறிப்பாக முழுநேரமும் இங்கே இருப்பதன் காரணம் அவர்களால் அல்ல. பலமுறை



இங்கிருந்து தப்பிச் செல்ல திட்டமிட்டிருக்கிறீர்கள். ஆனால் உங்களுக்குள் உள்ள ஏதோ ஒன்று இந்த திசையில் உங்களை தொடர்ந்து இழுத்து வந்திருக்கிறது. அப்படியானால் இதைஒரு குருதான் செய்கிறாரா?

அவருக்கு இப்படிச் செய்வதில் விருப்பம் தான். ஆனால், அவர் காத்திருக்கிறார். ஏனென்றால் உங்கள் மனம், உங்கள் உடல், உங்களுடைய தர்க்க அறிவு, உங்களுடைய அகங்காரம் இவை தான் உங்களின் முக்கிய அம்சங்களாக இருக்கின்றன. அவற்றோடு வலுக்கட்டாயமாக ஏதேனும் செய்ய முயற்சித்தால் அது கசப்பைத் தான் தரும் அல்லது நீங்கள் உடைந்து போய் விடுவீர்கள். எனவே, இந்த அம்சங்கள் தானாகவே உடைந்து போவதற்காக நாம் காத்திருக்கிறோம்." மிகவும் சிறிய வழிகளில் இந்த தலையீடு, அவ்வப்போது இருக்கிறதுதான். ஆனால், ஒரு உயிரை முழுமையாக விடுதலை செய்வதைப்பற்றி நீங்கள் பேசுகிறீர்கள் என்றால், உங்களிடம் உள்ள அந்த அம்சங்கள் உடைந்து போனால் மட்டுமே முடியும்.

ஒரு பழம் கனிந்திருக்கும் போதுதான் ஒரு விரலால் தொட்டால்கூட அந்தப்பழம் கீழே விழுந்துவிடும். ஆனால், அதை நீங்கள் வலுக்கட்டாயமாக பறித்தால் அது மரத்தையும் பழத்தையும் பாதிக்கிறது. அது இன்னும் கனிந்து தயாராக வில்லை. போதுமான அளவு கனிந்திருக்கும்போது, அந்தப்பழம் உங்கள் கைக்கு வருவது மிகவும் சுலபமாக இருக்கும். அதுவரை தவணை முறையில் தான் சிலவற்றைக் கையாண்டாக வேண்டும். ஒரேகணத்தில் நிகழக்கூடியதை, வாழ்க்கை முழுவதும் நீட்டிப்பது மிகவும் துரதிஷ்டவசமானது. ஒரு குருவிற்கு அது மிகவும் அவலமான விடயம். ஒரு கணத்தில் நிகழ வேண்டிய ஒரு விடயம் வாழ்க்கை முழுவதும் நிகழ்கிறது. ஏனென்றால், நாம் உங்களை தவணை முறைகளில் தான் அணுகவேண்டியுள்ளது.

**கேள்வி:** ஒரு குழப்பமான ஆத்மசாதகர் தன்னுடைய குருவைத் தேடி அலைவதைப்போலஅந்த சாதகரின் ஏக்கம் தீவிரமடையும் போது, குரு ஆத்மசாதகரை கண்டுகொள்ளும் சூழ்நிலைகள் உள்ளனவா?

**சத்குரு:** ஆம். எப்போதுமே அப்படித்தான் நடக்கிறது. ஒரு குரு என்பவர் ஒரு சாத்தியம். அவர் ஒரு மனிதரல்ல. நான் என்னை வேலை செய்யும் ஒரு கருவியாக உருவாக்கிக் கொண்டிருக்கிறேன். போதுமானளவு நற்பன்புகள், போதுமானளவு புத்தி சாலித்தனம், போதுமானளவு பைத்தியக்காரத்தனம், எல்லாவற்றையும் கலந்து என்னை நான் உருவாக்கிக்

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

கொண்டு இருக்கிறேன். மிகவும் கவனமாக உருவாக்கப்பட்ட கருவி இது. எனவே, என்னைப்பற்றி நீங்கள் எந்த முடிவிற்கும் வரமுடியாது. என்னைப் பற்றி ஏதேனும் ஒரு முடிவிற்கு நீங்கள் வந்து விட்டால், நான் ஒரு உபயோகமான கருவியாக இருக்க முடியாது. என்னை ஒரு கடவுளாக நீங்கள் அடையாளப் படுத்திவிட்டால், நீங்கள் வேறுபல அம்சங்களை இழப்பீர்கள். என்னை ஒரு நல்ல மனிதர் இல்லை என்று நீங்கள் அடையாளப்படுத்தினால், முற்றிலும் பலவற்றை இழந்து விடுவீர்கள். எந்தவிதத்தில் நீங்கள் என்னை அடையாளப்படுத்தினாலும், பல சாத்தியங்களை நீங்கள் இழப்பீர்கள். ஏனென்றால், தொடர்ந்து பார்க்காவிட்டால் அது தேடுதலே அல்ல. முடிவுக்கு வந்துவிட்டால் நீங்கள் நின்று விடுவீர்கள். எந்த ஒன்றைப் பற்றியும் நீங்கள் எந்த முடிவை வைத்திருந்தாலும், தேடுதல் என்பது நின்று போகிறது என்றுதான் அர்த்தம். இல்லையா? எனவே, நீங்கள் எந்தவிதமான முடிவுக்கும் வரமுடியாத விதமான கருவியாக என்னை நான் உருவாக்கிக் கொண்டிருக்கிறேன்.

(தொடரும்)

## பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வைத்தியசாலைகள் இணைந்து ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஊதியம் அதிகரிக்க வேண்டும், வாழ்க்கைச் செலவை குறைத்து தமது கஷ்டங்களை குறைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை அரசாங்கத்திடம் வலியுறுத்தும் முகமாக ஸ்ரீலங்கா தேசிய வைத்தியசாலை களுபோவில. ஜயவர்த்தனபுர, கராப்பிட்டிய, கண்டி, அநுராதபுரம், குருநாகலை வைத்தியசாலைகள் அடங்கலான நாட்டின் பல வைத்தியசாலைகள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டன.

இவ்வாரம் தேசிய தொழிற்சங்க நிலையத்தினால் நடத்தப்பட்டு வரும் பல ஆர்ப்பாட்டங்களில் ஒரு பகுதியே நேற்று முன்தினம் இந்த ஆர்ப்பாட்டங்கள் ஆகும்.

இதன்போது தேசிய தொழிற்சங்க நிலையத்தின் ஏற்பாட்டாளரான சமந்த கோறளராச்சி, அரசாங்க ஊழியர்களின் சம்பளம் 10,000 ரூபாவால் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை 40 சதவீதத்தால் உயர்த்த வேண்டும் எனவும் தொழிற்சங்கங்கள் வலியுறுத்தியுள்ளதாக தெரிவித்தார். (அ-2)

## மன்னார் விதவைப் பெண்களுக்கு சத்துணவு பொதி வழங்கப்பட்டது

மன்னார் மாவட்டத்தில் கணவனை இழந்த குடும்பப் பெண்களுக்கு தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை சத்துணவுப்பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன்.

மன்னார் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கணவனை இழந்து குடும்பத்தை பராமரித்து வரும் 40 பெண்களுக்கே மேற்படி பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.நேற்று காலை 9 மணியளவில் மன்னார் திருமறைகலாமன்றத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது. (அ-2)

## புலிகளுக்கு பயந்த காலம் போய் மஹிந்தவுக்கு பயப்படும் காலமிது

### சட்டத்தரணி கிஷாலி கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு பயந்த காலம் போய் மஹிந்த அரசின் குடும்ப ஆட்சிக்கு பயப்பட வேண்டிய காலம் ஏற்பட்டு உள்ளது எனஇலங்கையின் தைரியசாலிப் பெண்ணாக 2007 ஆம் ஆண்டு சர்வதேச விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சட்டத்தரணி கிஷாலி பின்ரோ ஜெயவர்த்தன அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து 2010 ஆண்டு பெப்ரவரி 17 ஆம் திகதி அமெரிக்க வெளியுறவு அமைச்சுக்கு அனுப்பப்பட்ட இராஜதந்திர ஆவணம் ஒன்றில் இருந்து விக்கிலீக்ஸ் மூலம் இவ் விபரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவர் தூதரக அதிகாரிகளுக்கு முக்கியமாக குறிப்பிட்டுள்ளதாவது,

புலிகளுக்கு பயந்த காலம் போய் மஹிந்த அரசின் குடும்ப ஆட்சிக்கும் பயப்பட வேண்டி ஏற்பட்டு உள்ளது. இது ஆபத்தான நிலை. அவருக்கு பின்பும் ராஜபக்ஷ குடும்பத்தின் ஆட்சி நிலைத்து நிற்க வேண்டும் என்று மஹிந்த பேரவாப்படுகின்றார். குடும்ப ஆட்சியானது நாட்டின் நல்லாட்சியை குழி தோண்டி புதைத்து விடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## புதுவாழ்வின் அடையாளமே திருச்சிலுவை



"என்னைப்பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கி கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (மத்16:24) என்கிறார் இறைமகன் இயேசு. கிறிஸ்தவர்களின் வாழ்க்கைப் பயணத்தில் சிலுவை என்ற வெற்றியின் சின்னம் நடப்பட்டிருக்கும். துன்பம் என்ற பாதையில் நடக்கும் மனித உள்ளம், துயரம் என்ற சோர்வால் வாடும் போதும் கவலையால் உடல் நடுக்கமுற்று தள்ளாடும் போதும் உறவினர்கள் நண்பர்களால் மறக்கப்பட்டு கைவிடப்பட்ட போதும் தோல்வியை சந்தித்து வேதனையின் விளிம்பில் நிற்கும் போதும் உள்ளத்திற்கு ஆறுதலும் அரவணைப்பும் கொடுக்கும் நிழல்தான் சிலுவை. விரக்தியடைந்த மனத்திற்கு வீசும் தென்றலாக சிக்கல்கள் நிறைந்த மனிதனுக்கு வாழ்வைக் காட்டும் நிழலாக காட்சி தருவதே சிலுவை. சிலுவையில் உயர்த்தப்பட்ட இறைமகனை உற்று நோக்கினால் மனுக்குலம் முழுவதும் மீட்படைவர் என்ற நம்பிக்கையின் மூலம் சிலுவை புதுவாழ்வின் அடையாளமாயிற்று.

**அருட் சகோதரர் றமேஸ் அ.ம.தி**

வாழ்க்கை என்பது ஒரு வாய்ப்பு. அதை சரியான முறையில் அமைத்துக் கொள்வது மனிதர்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். வாழ்வு என்பது ஒரு புதிர். பல சவால்களைக் கடந்து கடமையை நிறைவேற்ற பயணிக்கின்ற ஒரு பாதை எனவும் வரையறுத்துக் கொள்ள முடியும். மனிதர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் ஒரு சமூக அமைப்பில் இருப்பதால் பல காரணங்களுக்காக சிலரையும் சில காரணங்களுக்காக பலரையும் சார்ந்து வாழும் நிலையை பார்க்க முடியும்.

நாங்கள் பெற்றுக் கொண்ட வாழ்வை எமது விருப்பப்படி வாழ எமக்கு பூரண சுதந்திரம் உண்டு. அதே வேளையில் பிறருடைய விருப்பத்திற்கு கட்டுப்பட்டு அவர்களுக்காக வாழும் மனிதர்களும் உண்டு.

மேலாக இறைவனின் விருப்பத்திற்கும் அவரது திட்டத்திற்கும் கட்டுப்பட்டு வாழும் வாழ்வு உன்னதமானது. இறைவனின் விருப்பப்படி வாழ முற்படும் போது இயேசுவின் சிலுவையின் வழி வாழ்வை அமைத்துக் கொள்வதே உண்மை வாழ்வாகும்.

# போர்க்குற்றச்சாட்டுக்கள் விடயத்தில் பொன்சேகாவை காப்பாற்ற தயார்

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீது போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டால் அவரைப் பாதுகாக்கத் தயார் என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா வெறும் ஓர் குற்றச் செயலுக்காக சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றார்.

போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வழக்குத் தொடரப்பட்டால் அரசாங்கம் பொன்சேகாவை பாதுகாக்கும்.

நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் நோக்கில் சர்வதேச சமூகம் குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றது.

இந்த சூழ்ச்சி திட்டங்களுக்கு அரசாங்கம் இடமளிக்காது எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார். (அ-2-7)

# போர்க்குற்றச்சாட்டு விசாரணையை வலியுறுத்த நோர்வேயும் இணைகிறது

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போரில் பொதுமக்கள் கொல்லப்பட்டது குறித்து விசாரணை நடத்தக் கோரும் நாடுகளுடன் நோர்வேயும் இணைந்து கொண்டுள்ளது.

போரின் இறுதிக்கட்டத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு பொறுப்புக் கூறுவதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தை ஆதரிக்கப் போவதாக நோர்வேயும் அறிவித்துள்ளது.

நோர்வேயில் இருந்து வெளியாகும் அப்ரென்போஸ்ரன் நாளேட்டுக்கு நோர்வே அமைச்சரும் இலங்கை சமாதான முயற்சிகளில் நடுநிலையாளராகப் பங்கேற்றவருமான எரிக் சொல்ஹெய்ம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மேலும் இலங்கை அரசாங்கம் போரை வென்றுவிட்டது. ஆனால், இப்போது அமைதியை வெல்ல வேண்டிய தேவை அரசுக்கு உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (அ-2)

# அவுஸ்.இல் மனைவியை கொன்றவர் கைது

மனைவியை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட இலங்கையர் நேற்று அவஸ்திரேலிய பேர்த் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

பேர்த்தின் புறநகரான Willetton என்ற இடத்தில் உள்ள வீட்டில் நேற்று முன்தினம் பிற்பகல் 46 வயதான பெண் ஒருவரின் சடலம் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அக் கொலை தொடர்பில் பெண்ணின் 50 வயதான கணவர் கைது செய்யப்பட்டார்.

இலங்கையைச் சேர்ந்த இந்த குடும்பம் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் குடியேறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு இரு மகள்கள் உள்ளனர். ஒருவர் 12 வயதைக் கொண்ட மாணவி எனவும் மற்றவர் மருத்துவ மாணவி என்றும் அவுஸ்திரேலிய சனல் 10 ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

(அ-2)

# கின்னஸில் இடம்பெறுவதற்கான சாகச நிகழ்வில் இலங்கையர்

## கொழும்பில் நடைபெற்றது

(கொழும்பு)

கைவிரல்களால் 1.5 தொன் நிறையுடைய வாகனத்தை செலுத்துதல் மற்றும் 10 வான்களை கட்டி பற்களால் இழுத்தல் போன்ற சாதனைகளை நிகழ்த்தி உலக கின்னஸ் சாதனை புத்தகத்தில் பெயர் பதிக்க இலங்கையயொருவர் முயற்சியெடுத்துள்ளார்.

இந்நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையில் தொழில் புரியும் ஜனக காஞ்சன என்பவரே இந்த உலக கின்னஸ் சாதனையை மேற்கொள்ளவுள்ளார்.

வலது கை விரல்களால் 1.5 தொன் எடையுள்ள வாகனத்தை செலுத்தி உலகில் பலமுள்ள விரல்களுடைய நபர் தானென்றும் உலகில் பலமுள்ள பற்கள் இருக்கும் மனிதன் தான் என்பதையும் நிரூபிப்பதற்காக 10 வான்களை ஒன்றாக கட்டி சங்கிலியால் இழுக்கும் சாகசத்தையும் நிகழ்த்தவுள்ளார்.

துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தலைமை யில் இந்நிகழ்வு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(அ-2)




★ 1797-வில்லியம் டேட் தலைமையிலான 1000-1500 போர்வீரர்களைக் கொண்ட படைகள் தமது பிரித்தானியா மீதான கடைசிப் படையெடுப்பை அடுத்து சரணடைந்தன.

★ 1836-சாமுவேல் கோல்ட் சுழல் துப்பாக்கிக்கான அமெரிக்கக் காப்புரிமத்தைப் பெற்றார்.

★ 1837-தோமஸ் டெவன்போர்ட் மின்சாரத்தில் இயங்கும் மோட்டருக்கான அமெரிக்கக் காப்புரிமத்தைப் பெற்றார்.

★ 1921-ஜோர்ஜியாவின் தலைநகர் திபிலீவி ரஷ்யாவின் கம்யூனிஸ்ட் படைகளினால் கைப்பற்றப்பட்டது.

★ 1925-சோவியத்ஒன்றியத்திற்கும் ஜப்பானுக்கும் இடையில் தூதரக உறவு ஆரம்பிக்கப்பட்டது.

★ 1932-அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியின் குடியுரிமையைப் பெற்றார்.

★ 1945-இரண்டாம் உலகப்போர்: துருக்கி, ஜேர்மனி மீது போரை அறிவித்தது.

★ 1948-செக்கோசிலாவாக்கியாவின் ஆட்சியை அந்நாட்டு கம்யூனிஸ்ட்கட்சி கைப்பற்றியது.

★ 1956-சோவியத்தலைவர் நிக்கிட்டா குருசேவ் ஜோசப்ஸ்டாலினின் ஆட்சிக் கால நிர்வாகத்தைக் கண்டனம் செய்தார்.

★ 1980-சூரினாமில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது.

★ 1986-பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸ் மக்கள் புரட்சியை அடுத்து ஆட்சியை கைவிட்டு நாட்டை விட்டு வெளியேறினார். கொர சோன் அக்கீனோ ஜனாதிபதியா னார்.

★ 1988-மாதிரி அணுவாயுதத்தைச் சுமந்து சென்ற இந்தியாவின் முதல் ஏவுகணை பிருதிவி ஏவப்பட்டது.

★ 1991-வளைகுடாப் போர் ஈராக்கிய ஸ்கட் ஏவுகணை ஒன்று சவுதி அரேபியாவின் டாஹாரான் நரைல் அமெரிக்க இராணுவத் தளத்தில் வீழ்ந்து வெடித்ததில் 28 அமெரிக்க இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

★ 1992-அசர்பைஜானின் நகர்னோ - கரபாக் பகுதியில் ஆர்மோனிய இராணுவத்தினர் 613 குடிமக்கள் உயிரிழந்தனர்.

★ 1994-மேற்குக்கரை நகரான ஹெப்ரோனில் மசூதி ஒன்றில் இஸ்ரேலியரான பருக் கோஸ்ட்டெயின் என்பவர் சுட்டதில் 29 பாலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். 125 பேர் காயமடைந்தனர். ஆத்திரமடைந்த பாலஸ்தீனர்கள் கொலையாளியை அடித்துக் கொன்றனர். இதனையடுத்து நிகழ்ந்த வன்முறைகளில்26 பாலஸ்தீனர்களும் 9 இஸ்ரேலியர்களும் உயிரிழந்தனர்.

★ 2006-உலகின் மக்கள் தொகை 6.5 பில்லியனை தாண்டியது.

★ 2007- ஈசாவின் ரோசெட்டா விண்ணுளவி (Rosetta Space Probe) முதன்முதலாகச் செவ்வாய்க்கோளை 150 மைல் உயரத்தில் மிக அருகே. சுற்றிவந்து அதன் சுழல் வீச்சில் (Mars Fly-by) அப்பால் எறியப்பட்டது.

### பிறப்பு

★ 1982-தனுஷ், தமிழ் திரைப்பட நடிகள்

### இறப்புக்கள்

★ 1950-ஜோர்ஜ் மினோட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1885)

★ 1971-தியோடர் சிவெட்பேர்க் , நோபல் பரிசு பெற்ற சுவீடன் வேதியியல்லாளர் (பி.1884)


★ 1999- கிளென் சீபோர்க், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர் (பி.1912)

★ 2001-சேர்டொனால்ட் பிறட்டன், அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் (பி.1908)

### சிறப்பு நாள்கள்

தவைத் -தேசிய தினம்


பிலிப்பைன்ஸ் -மக்கள் எழுச்சி தினம் (1986)



★ 1915- சிங் கப்பூரின் முன்னாள் வெளியுறவுதுறை அமைச்சர்எஸ்.ராஜரத்தினம் (இ.2006)

# அதிசய உலகம்...

## கீபோட், மவுஸ், ஸ்பீக்கர் பொருத்தப்பட்ட நவீன ஜீன்ஸ்



கணனி கண்டுபிடிக்கப்பட்ட காலங்களில் அவற்றின் பருமன் மிகவும் பெரியதாக காணப்பட்டதால் அவற்றினைப் பராமரிப்பதற்கு தனியாக அறைகள் தேவைப்பட்டன.

காலப்போக்கில் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக அவற்றின் பருமன் சடுதியாக குறைவடைந்து இன்று தாம் செல்லும் இடத்திற்கு எடுத்துச் செல்லக் கூடிய லப்டொப், பாம்ரொப் போன்ற மிகச்சிறிய அளவுகளில் வந்துவிட்டன.


ஆனால், தற்போது நாம் அணியும் ஜீன்ஸ்களில் (நீளக்காற்சட்டை) கணனித் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தும் அளவிற்கு தேவை அதிகரித்துவிட்டது போலும் அதையும் அற்புதமாக வடிவமைத்து விட்டார்கள்.

## மரங்களினால் உருவாக்கப்பட்ட கண்ணைக்கவரும் உருவங்கள்

செயற்கை அழகைவிட இயற்கை அழகே அனைவரையும் கொள்ளை கொள்ளும் என்பதை நிரூபிக்கும் விதமாக மரங்களை பயன்படுத்தி இயற்கையில் காணப்படும் உயிரினங்கள் மிகவும் தத்ரூபமாக வடிவமைக்கப் பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாட்டை மேற்கொள்வதன் மூலம் எமது சுற்றாடலின் வனப்பை அதிகரிக்கச் செய்வதுடன் சூழல் வெப்பநிலை அதிகரிப்பை தடுத்தல், வளிமண்டலத்தின் ஒட்சிசன் , காபனீரொட்சைட் சமநிலை என்பவற்றையும் சீராகப் பேணலாம்.



## பெண்ணாக மாறிய ஐந்து வயது சிறுவன்



இங்கிலாந்தில் உள்ள லண்டனை சேர்ந்தவர் டாரென். இவரது மனைவி தெரசா. அவர்களது மூத்த மகன் ஷாஜெரி ஜாக் ஏவெரி (வயது5). இவர்களுக்கு அலெக்ஸ் என்ற மற்றொரு மகனும் இருக்கின்றான்.

ஷாஜெரியின் 3 ஆவது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. அப்போது அவன் தான் ஆண் அல்ல பெண் என்பதை உணர்ந்தான். தனது பெற்றோரிடம் நான் பெண் குழந்தை என கூறி அடம்பிடித்தான்.

ஆண் குழந்தைகள் விளையாடும் பொம்மையை தூக்கி எறிந்து விட்டு பெண் குழந்தைகளுக்கான பொம்மையை எடுத்து விளையாட தொடங்கினான். அவனின் இந்த நடவடிக்கைகள் பெற்றோருக்கு அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியது. உடனே அவனை மனோதத்துவ மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றனர். அவனை பரிசோதித்த மருத்துவர் அவன் ஆண் குழந்தையாக இருந்தாலும் பெண் குழந்தை என அவனது மூளையும் மனதும் சொல்கிறது. எனவே, அவன் மனதளவில் பெண் குழந்தைதான் என்று தெரிவித்தார். அதை தொடர்ந்து அவன் தனது 5 வயதில் பெண்ணாகவே மாறினான். மேலும் பெண்களுக்குரிய ஆடைகள்,அணிகலன்கள் அணிந்து வருகின்றான்.


## பான் கேக்கினை கீழே விழாதவாறு அடுக்கி உலக சாதனை




அவுஸ்திரேலியாவில் கோதுமைமா,முட்டை, பால் இவற்றை பயன்படுத்தி செய்யப்படும் தட்டையான வடிவமுடைய கேக்(பான்கேக்) மிகவும் பிரபல்யமானதாக காணப்படுகிறது.

மேலும் இதற்காக சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அங்கு இடம்பெறும் பான்கேக் பந்தயத்தில் கலந்து கொள்வார்கள். இதில் விநோதமான விடயம் என்னவென்றால் அவுஸ்திரேலியர்களுக்கு இந்த பான் கேக்கிற்கும் கோதுமைமா, முட்டை, பால் பயன்படுத்துவதுபற்றி இதுவரையில் தெரியாது என்பதாகும். இம்முறை இந்த பந்தயத்தின் போது 76 சென்ரிமீற்றர்கள் வரை பான்கேக்கை கீழே விழாதவாறு ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி வைத்து உலக சாதனை படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுவரையில் 61 சென்ரிமீற்றார் உயரத்திற்கு அடுக்கியமையே சாதனையாக இருந்தது.

## காருடன் சமாந்தரமாக பறக்கும் மனிதன்




சிறுவர்களுக்கான படங்களில் தோன்றி அசத்தும் சுப்பர் மனிதனைப் பார்த்து ரசித்திருப்பீர்கள். பார்க்கும் போதே நாமும் இவ்வாறு பறந்தால் எப்படி இருக்கும்? என உங்களில் பலர் கற்பனை செய்தும் பார்த்திருப்பீர்கள்.


இங்கும் ஒருவர் அவ்வாறு எண்ணியதாலோ என்னவோ சுப்பர் மனிதன் போன்று ஓடும் காருக்கு சமாந்தரமாக பறந்து வித்தை காட்டுகின்றார்.

இதைப் பார்க்கும் போது மெய்சிலிர்க்க வைக்கின்றது.

## இரண்டு தலைகளை உடைய உயிரினங்கள்



# விளையாட்டு நிகழ்வுகள்...





நவாலி ஸ்தான அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மெய்வல்லுநர் போட்டி நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் மாணவர்களின் இடைவேளை நிகழ்வினையும் வெற்றி பெற்ற இல்லத்திற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப்பணிப்பாளர் எஸ். சிவானந்தராஜா கேடயத்தினை வழங்குவதையும் படங்களில் காணலாம்.







யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வு இடம் பெறுவதையும் வெற்றியீட்டிய இல்லத்திற்கான கேடயத்தினை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கல்விகாருண்யன் ஈ.எஸ்.பி .நாகரத்தினம் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.




யா/ தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்வினையும் படங்களில் காணலாம்.


யா/ பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் தீ. ச.திரவியராஜா தலைமையுரையாற்றுவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், மாணவர்களின் கயிறு இழுத்தல் போட்டியினையும் திருமதி ஜெயலக்சுமி சிவாகிருஷ்ணமூர்த்தி வெற்றியீட்டிய மாணவர் ஒருவருக்கு வெற்றிக் கிண்ணம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.


# கொடுத்தவர்கள் திருப்பிக் கேட்டால்...?

2ஜி ஸ்பெக்ரம் வழக்கில் பெரிய வெடி குண்டு வைத்துவிட்டது உச்சநீதி மன்றம். அதுவும் தனது நீதிபரி பாலனத்தில் இருந்து ஓய்வு பெறும் தினத்தில் நீதிபதி கங்குலி (நீதிபதி சிங்வீயுடன் சேர்ந்து!) அளித்திருக் கும் தீர்ப்பு, "நான் ஓய்வு பெற்றுப்போனால் வழக்கு ஒழுங்காய் நடந்து உண்மைக் குற்ற வாளிகள் தண்டிக்கப்படவேண்டும்." என் பதை உறுதிப்படுத்துவதாக அமைந்தது!

2ஜி வழக்கில் முன்கதை அனைத்தும் வாசகர்கள் அனைவரும் விலாவாரியாக அறிந்த விடயங்கள்தான். இந்தியக் கஜா னாவுக்கு வந்து சேரவேண்டிய சொத்தை, சில தனிமனிதர்கள் மற்றும் நிறுவனங்கள் தங்களது சொந்த சேமிப்புக்குத் திருப்பிய வகையில், பல்லாயிரம் கோடி ரூபாய் பணம் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டது. சுமார் 1.76 இலட்சம் கோடிரூபாய் இதன் இழப்பீட்டு மதிப்பு என்று மத்திய கணக்கு மற்றும் தணிக் கைத் துறையின் அறிக்கை சொன்னது.

இது தொடர்பாக குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்த சி.பி.ஐ. சுமார் 23 ஆயிரம் கோடி ரூபாய் பணம் இதில் கைமாறியுள் ளது என்று குற்றம் சாட்டியது. இதை விசா ரிக்க நீதிபதி ஷைனி கொண்ட, தனி நீதி மன்றம் அமைக்கப்பபட்டது. ஆ.ராசா உள் ளிட்ட 14 பேர் கைதானார்கள். இந்தியாவை யும் தாண்டி உலகம் முழுக்க மீடியாக்களின் கவனத்தை இந்த வழக்கு ஈர்த்தது. ஆ.ராசா, கனிமொழி, கலைஞர் ரி.வி.சரத்குமார் ஆகி யோர் கைதானார்கள். தமிழகத்தை இது


ஏ.கே.கங்குலி


சிங்வீ

பரபரப்பாக்கியது. ஆ.ராசா மற்றும் அவரது செயலாளர் சித்தாந்த பருவா ஆகிய இரு வர் நீங்கலாக, மற்றவர்கள் அனைவரும் ஜாமீனில் வந்துவிட்டார்கள்.

இது தொடர்பான விசாரணை டெல்லி பாட்டியாலா நீதிமன்றத்தில் தொடர்ந்து நடந்து வருகிறது.

இந்த நிலையில்தான், உச்சநீதி மன்றத் தில் சுப்பிரமணியன் சுவாமியும் பொதுநல வழக்கு மையத்தின் மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷணும் சில மனுக்களைத் தாக் கல் செய்தார்கள்.

சி.பி.ஐ. இந்த வழக்கை பாரபட்சம் அற்ற நிலையில் நடத்தவில்லை என்பது தான் முக்கியமான குற்றச்சாட்டு. சி.எஸ்.சிங்வீ, ஏ.கே.கங்குலி ஆகிய இரண்டு நீதிபதிக ளும் தான் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக

**ஜூனியர் விகடன்**

இந்த வழக்கை முழுமையாக விசாரித்த வர்கள். அவர்களுக்கு முன்பாக இதன் விசாரணைகள் முடிந்து கடந்த இரண்டாம் திகதி தீர்ப்பை அளித்தனர். நீதிபதி ஏ.கே. கங்குலி, 2ஆம் திகதி தனது பணியில் இருந்து ஓய்வுபெறுவதால், அதுவே இந்த வழக்கின் தீர்ப்புத் திகதியாகவும் ஆனது.

இதுவரை வழவழா கொழகொழா என்று போய்க் கொண்டிருந்த 2ஜி வழக்கு, உச்ச நீதி மன்றம் அளித்துள்ள இந்த தீர்ப்பின் மூலம் இறுக்கம் பெற்றுள்ளது. கைதுப் படலம், வழக்கு விசாரணை என்று ஒரு பக்கம நடந்து வந்தாலும், 2ஜி உரிமங்க ளைப் பெற்ற கம்பனிகள் எதற்கும் இது வரை எந்தப்பாதிப்பும் ஏற்படவில்லை. ராசா பதவி விலகியதைத் தொடர்ந்து தொலைத் தொடர்பு அமைச்சரான கபில்சிபல், அனைத்து உரிமங்களையும் ரத்து செய்யப்படும் என்று நாள் பிரஸ்மீட்டில் அறிவித்தார்.

அடுத்த வாரமே பல்டி அடித்து... அனைத்து நிறுவனங்களும் அபராதத் தொகையை செலுத்தினால் போதும். உரிமங்கள் தொட ரும் என்றார். அதன் பிறகு, இது ஒரு ஊழலே இல்லை; யாருக்கும் நஷ்டம் இல்லை; தவறு எதுவும் நடக்கவில்லை என்றார். ஆனால், உச்சநீதிமன்றம் இந்த விடயங்களுக்கு நெத் தியடியைக் கொடுத்தது.

2ஜி ஸ்பெக்ட்ரத்துக்கான 122 உரிமங் களையும் ரத்து செய்யவேண்டும். இந்தக் காலகட்டத்தில் ஏல முறையில் டிராய் புதிய உரிமங்களை வழங்க வேண்டும். யுனிடெக் ஒயர்லெஸ், ஸ்வான் டெலிகாம் மற்றும் டாடா டெலிகாம் நிறுவனங்களுக்கு தலா 5 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்படுகிறது. லூப், எஸ்-டெல், அலையன்ஸ் மற்றும் சிஸ்டெமா ஷியாம் ஆகிய நிறுவனங்களுக்கு தலா 50 இலட்சம் அபராதம் விதிக்கப்படும் என்று நீதிபதிகள் அறிவித்தது, ஸ்பெக்ரம் வழக்கில் மிகமுக்கியமான திருப்பம்.

வீடியோகான் 21 உரிமங்கள், யுனினார் 22, ஐடியா 9, லூப்பின் 21, எஸ்-டெல் 6, சிஸ்டெமா 21, டாடா3, ஸ்வான் 13, அலை யன்ஸ் 2 ஆகிய உரிமங்கள் இப்போது இரத்து செய்யப்பட்டுள்ளன. இதை சி.பி.ஐ- யே எதிர்பார்க்கவில்லை. இந்த நிறுவனங்கள் தங்களின் தங்களின் உரிமங்களை அப் படியே வைத்துக்கொள்ளவில்லை. வெளி நாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய் துள்ளன. இந்த நிறுவனங்கள் பல்வேறு வழிமுறைகளில் இந்த உரிமங்களைப் பெற் றுள்ளன. சி.பி.ஐ. கணக்கின்படி, சுமார் 23 ஆயிரம் கோடி கைமாறியுள்ளது. உரிமங்கள் இரத்து ஆன நிலையில் இந்த நிறுவனங்கள் கொடுத்ததைத் திருப்பிக் கேட்டால் என்னா கும்? என்று உள்விவரங்களை அறிந்தவர் கள் மலைப்புடன் பேசுகிறார்கள்.

"ராசா கைதானது முதல் சுப்பிரமணியன் சுமாமி ஒரு விடயத்தை திரும்பத்திரும்ப சொல்லி வருகிறார். மிகமோசமான பலரது கைகள் இதற்குள் இருப்பதால் ராசா இனி ஜக்கிர தையாக இருக்கவேண்டும். அவர் சிறைக் குள் இருப்பதுதான் அவருக்கு பாதுகாப்பா னது" என்று சொன்னார். இப்போது உரிமங் களும் இரத்தானதால், அந்த நிறுவனங்க ளின் கோபம் இன்னும் அதிகமாகும். இந்த உரிமங்களைப் பெறுவதற்கு அவர்கள் கை விட்டுக் கொடுத்தது எல்லாம் வீணாய் போகும்! கொடுத்ததைப் பங்குதாரர்கள் அத்தனை பேரிடமும் கேட்டுத்திரும்ப வாங்க முடியாது ஆனால், இந்த லேவாதேவியை முன்னின்று செய்தவர் யாரோ... அவரே மொத்தப்பங்குக் கும் பொறுப்பு ஏற்க வேண்டிய சூழ்நிலை வரும். முடியாமல் போனால், விளைவுகள் எப்படியும் ஆகும் என்று சிலர் சொல்ல ஆரம் பித்துள்ளனர்.

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை மத் திய தொலைத்தொடர்புத் துறை எந்த மாதிரி எதிர்கொள்ளப்போகிறது ஏன்பதை வைத்தே அடுத்த கட்டப் பரபரப்பு நகர்வுகள் டெல்லி யில் இருக்கும்.

**சிதம்பரம் தலை தப்புமா?**

மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம் பரம், வருடந்தோறும் டெல்லி பத்திரிகையா ளர்களுக்கும் (தமிழ்ப்பத்திரிகையாளர்க ளுக்கு அல்ல) தனக்கு நெருக்கமானவர்களுக்கும் பொங்கல் விருந்து கொடுப்பார் இந்த ஆண்டு ஏனோ அவர் யாரையும் அழைக் கவில்லை.

ஏனென்றால், 2011 ஆம் ஆண்டு தொடக் கத்தில் செய்தி நாயகனாக ஆ.ராசா இருந் தார். 2012 இல் சிதம்பரம் அந்த இடத்தைப் பிடித்து விட்டார். 2ஜி விவகாரத்தில் சிதம்பரம் குற்றவாளியா... இல்லையா? என்று, பெப்ர வரி 4ஆம் திகதிசிறப்பு நீதிமன்றம் முடிவு சொல்ல இருந்ததால், இந்த டென்சனில் தான் பொங்கல் கொடுப்பதை மறந்தே போய் விட்டார்.

"ஆ. ராசா எந்த அளவுக்கு குற்றம் புரிந்து நீதிமன்றத்தில் குற்றவாளியாக நிற்கிறாரோ ... அதே அளவுக்கு சிதம்பரமும் குற்றம் புரிந்த வர்தான். நான் கொடுத்துள்ள ஆதாரங்கள், ஆவணங்களில் இதற்கான முகாந்திரங்கள் நிறையவேஇருக்கின்றன. ஆ.ராசாவும் சிதம் பரமும் கூட்டு சேர்ந்து இந்தக் குற்றங்களைச் செய்துஉள்ளனர். இதற்காகஅவர்கள் 2003ஆம் ஆண்டு ஆக்டோபர்மாத அமைச்சரவை முடிவைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

2008 நவம்பர் 4ஆம் திகதி ராசாவும் சிதம்பரமும் சேர்ந்து பிரதமரை சந்தித்து, கூட்டுமுடிவு எடுக்கப்பட்டதை தெரிவித்துள் ளனர். இதனால், ஸ்பெக்ரம் உரிமம் விலை நிர்ணயிப்பதில் இரண்டுபேரும் உள்நோக் கத்தோடு முழு சம்மதத்துடன்தான் கூட்டு முடிவாக எடுத்துள்ளனர். இதைத்தான் கடந்த ஆண்டு மார்ச் மாதம் பிரணாப் முகர்ஜியின் சம்மதத்துடன் நிதி அமைச்சகம், பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பிய தகவலில் உறுதி செய்தது" என்று சுப்பிரமணியசுவாமி சொல்லி இருக்கிறார்.

நீதிமன்ற வளாகத்தில் பத்திரிகையாளர் களிடம் பேசிய சுவாமி, "என்னுடைய வாதத் தில் நீதிமன்றம் திருப்தி அடைந்திருக்கும் என்றே நினைக்கிறேன். வருகிற 4ஆம் திகதி இந்த விவகாரத்தில் நல்ல செய்தியை நாடு கேட்க இருக்கிறது. இந்த விவகாரத்தில் ஆ.ராசா, சொட்டே மாஸ்டர் என்றால் சிதம்பரம், படே மாஸ்டர் அல்லது மாஸ்டர் மைண்ட். அதைத் தான் வெளியே கொண்டுவந்து இருக்கிறேன்" என்றார் நம்பிக்கையுடன்.


இதைத் தொடர்ந்து கடந்த 2 ஆம் திகதி உச்ச நீதிமன்னறத்தில் நீதிபதி சிங்வீ, கங்குலி ஆகிய இருவரும் சேர்ந்து அளித்த தீர்ப்பில் சிதம்பரம் குறித்த தங்களது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்தினார்கள்.

2ஜி வழக்கில் ப.சிதம்பரத்தைச் சேர்க்க லாமா என்பது குறித்து இதற்கென அமைக் கப்பட்டுள்ள தனி நீதிமன்றம் முடிவு எடுக் கட்டும் என்பதுதான் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு. தனி நீதிமன்றம் இதுதொடர்பாக தனது விசாரணையை முடித்துவிட்டு பெப்ரவரி 4ஆம் திகதி தீர்ப்பு என்று ஏற்கனவே சொல்லியி ருந்த நிலையில்,புதுக்கருத்து எதையும் உச்ச நீதிமன்றம் சொல்லவில்லை.

**ஊழல் அரசியல்வாதிகள் இனி நிம்மதி யாக இருக்க முடியாது!**

2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் மத்திய தொலைத் தொடர்பு அமைச்சராக இருக்கும் ஆ.ராசா தவறு செய்துள்ளார். அவர் மீது வழக்கு பதிவு செய்வதற்கு அனுமதி தரவேண் டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு சுப்பிரமணியன் சுவாமி கடிதம் அனுப்பி னார். அதற்கு ஒன்றரை ஆண்டுகளாக எந் தப்பதிலும் தராமல் வைத்திருந்தார். மன் மோகன்சிங். உச்சநீதிமன்றத்திற்குச் சென்று தான் இதற்கான அனுமதியை சுவாமியால் வாங்க முடிந்தது. எனவே, புதிய வழக்கு ஒன்றை உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கில்தான் கடந்த 31 ஆம் திகதி


ஆ.ராசா

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கி உள்ளது.

ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான வர்கள் மீது வழக்குத்தொடர, குறிப்பிட்ட காலவரம்புக்குள் (அதிகபட்சம் நான்கு மாதங்கள்) அனுமதி வழங்க வேண்டும் என்று தீர்ப்பு கூறியதோடு, ஆ.ராசா குறித்த சுவாமியின் கடிதத்துக்கு பிரதமர் அலுவல கம் சரியான நடவடிக்கைகளையும் யோச னைகளையும் வைக்காதது குறித்தும் குறை கூறியுள்ளது.


இந்த விவகாரம் குறித்து மத்திய அமை ச்சரவைச் செயலகத்தின் செயலாளராக (உ.பி.கேடர் ஐ.ஏ.எஸ். அதிகாரி) பல பிரதமர் களுடன் பணிபுரிந்து டி.எஸ்.ஆர். சுப்பிர மணியத்திடம் பேசினோம்.

குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு களின்படி (பிரிவு:197) எந்த அரசு ஊழியர் மீதும் வழக்குத் தொடர்வதற்கு, முன் அனு மதி தேவை அதே போன்று ஊழல் தடுப்புச் சட்டம் மூலம் மேல் மட்ட உயர் அதிகாரிகள் மீது வழக்கு தொடரவும் அனுமதி தேவை. குறிப்பாக, அரசின் புலனாய்வுத்துறை (சி.பி.ஐ. அமுலாக்கப்பிரிவு) போன்றவை, இணைச் செயலாளர்களுக்கு மேல் உள்ள அதிகாரிகள் மீது வழக்குத் தொடர்வதற்கும் அரசின் முன் அனுமதியைப் பெறவேண் டும் அனுமதி கிடைக்கவில்லையென்றால், வழக்குப்போட முடியாது. அதனால், ஊழல் புரியும் அரசு ஊழியர்கள் பாதுகாப்பாக இருந்தனர்.

ஆ.ராசாமீது வழக்குத்தொடர பிரதமர் அனுமதிக்காத நிலையிலேயே நீதிமன்றத் துக்குச் சென்றார் சுவாமி. அவர் அப்படிப் போகவில்லை என்றால், 50 வருடங்கள் ஆனாலும், ஆ. ராசா மீது வழக்கு தொடரப் பட்டிருக்காது. அவர் சிறைக்குப் போயிருக்க மாட்டார்.

இந்தத் தீர்ப்பின்படி, எந்தக் குடிமகனுக் கும் அரசாங்கத்துக்கும் அரசாங்கத்திடம் புகார் கொடுக்க உரிமை உண்டு. அமைச் சராகவோ, பொது ஊழியராகவோ இருப் பவர் தவறு செய்தால் அவர் மீது வழக்குத் தொடர அனுமதி கேட்கலாம். இந்த அனு மதியை நான்கு மாதங்களுக்குள் சம்பந்தப் பட்டவர்கள் தந்தாக வேண்டும்.

புகார் உண்மையென்றால் அனுமதி கொடுக்கலாம். உண்மையில்லாத பட்சத்


சுப்பிரமணியன் சுவாமி

தில் யாருக்கும் அனுமதி கொடுக்க வேண் டிய அவசியம் இல்லை. ஆனால், சரியான காரணத்தைச் சொல்லியாக வேண்டும். நான்கு மாதங்கள்வரை எந்த முடிவையும் கூறவில்லை என்றால், அது அனுமதி கொடுக் கப்பட்டதாகவே கருதப்படும் என்றும் தீர்ப்பு கூறுகிறது. இனி, ஊழல் அரசியல்வாதிகள் நிம்மதியாக இருக்க முடியாது.

# வடக்குக்கிழக்கு மக்கள் அச்ச சூழலில் வாழ்வதையே அரசாங்கம் விரும்புகிறது

## அரியம் எம்.பி தெரிவிப்பு



வடக்குக்கிழக்கு வாழ் தமிழ்மக்கள் தொடர்ந்தும் அச்சமான சூழலில் வாழ்வதையே இலங்கை அரசு விரும்புகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

மட்/அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் யுத்தம் முடிவுற்றபின் இலங்கை முழுவதும் பூரண சமாதானம் நிலவுவதாகவும் சகல மக்களும் அச்சமின்றி வாழ்வதாகவும் இலங்கை அரசாங்கம் கூறிவருகின்றது.

இந்நிலையில் வடக்குக்கிழக்கில் வாழ்கின்ற தமிழ்மக்கள் தொடர்ந்தும் அச்ச சூழலில் வாழ்வதையே இலங்கை அரசு விரும்புகின்றது. இதன் வெளிப்பாடே கடந்த வருடம் உலாவிய கிரிஸ்பூதங்கள் மற்றும் இராணுவத்தினரால் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்ற பதிவு நடவடிக்கைகளாகும்.

கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு கல்லடி பிரதேசத்தில் இராணுவத்தினர் குடும்ப விபரங்களை பதிவு செய்வதுடன் அவர்களைப் புகைப்படமும் எடுக்கின்றனர்.

மேலும் அண்மைய நாட்களில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் அடிக்கடி கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இத்தகைய காரணங்களினால் அப்பிரதேச மக்கள் தொடர்ந்தும் பயத்துடன் வாழவேண்டிய சூழலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-2-7)

# ஹோட்டல் நிர்வாகத்திடம் நட்டஈடு கோரப்போகின்றாராம் கெஹலிய

(கொழும்பு)

ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அவுஸ்திரேலிய ஹோட்டல் நிர்வாகத்திடம் நட்டஈடு கோரத் தீர்மானித்துள்ளார்.

அவுஸ்திரேலிய ஹோட்டல் ஒன்றிலிருந்து கீழே விழுந்த அமைச்சர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இரண்டு கால்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அதற்காக நட்டஈடு கோரப் போவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். மருத்துவ செலவுகளை காப்புறுதி நிறுவனமொன்று பொறுப்பேற்றுக் கொண்டு வருகின்றது.

அமெரிக்க மருத்துவர் ஒருவரை அவுஸ்திரேலியாவிற்கு அழைப்பித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. மூன்றாம் மாடி பல்க்கனியில் இருந்து சுமார் 27 அடி கீழே விழுந்ததனால் இரண்டு கால்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஒரு காலில் மேலும் ஓர் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அமைச்சர் கெஹலிய தெரிவித்துள்ளார். (அ-2)

# ஆர்ப்பாட்ட வீடியோ காட்சிகளை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் வேறு கட்சிகளின் ஏற்பாட்டில் கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பான வீடியோக் காட்சி பிரதிகளை கொழும்பு குற்றவியல் பிரிவினரிடம் சமர்ப்பிக்குமாறு சிரச ஊடக வலையமைப்பு, சுவர்ணவாஹினி, தெரன, ஐ.ரி.என். ஆகிய ஊடக நிறுவனங்களின் செய்தி ஆசிரியர்களுக்கு கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது ஒழுங்கீனமான முறையில் நடந்து கொண்டவர்களை இனங்கண்டு கொள்ளும் முகமாகவே இந்த வீடியோ காட்சி பிரதிகளை சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ-2-7)

# தேர்தல் கலந்துரையாடலின் போது அழைப்புக்கடிதம் கிடைக்கவில்லை

## ஆளும்கட்சி வேட்பாளர் அதிருப்தி

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் முல்லைத்தீவில் நடைபெறவுள்ள புதுக்குடியிருப்பு கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல் தொடர்பாக வேட்பாளர்கள் மற்றும் அங்கீகாரமளிக்கப்பட்ட கட்சிகளின் அதிகாரங்களுக்கான கலந்துரையாடல் கூட்டத்திற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருக்கும் அழைப்புக் கடிதங்கள் கிடைக்கவில்லை என ஆளும் கட்சி வேட்பாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கடந்த புதன்கிழமை இக்கூட்டம் நடைபெற்றது. இதற்கு கொழும்பிலிருந்து உதவி தேர்தல் ஆணையாளர் எம்.முஹம்மதும் வருகை தந்திருந்தார்.

கூட்டம் நடைபெறுவதாகவும் தங்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்படாமை குறித்து ஐ.ம.சு.கூ. கட்சி வேட்பாளர்கள் ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் சதாசிவம் கனகரத்தினத்திடம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உடனடியாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகத்துடன் தொடர்பு கொண்டதாகவும் என்ன நடந்தது என்பது பற்றி அறிந்து கூறுவதாகவும் அரசாங்க அதிபர் தம்மிடம் கூறியதாக தெரிவித்தார்.

உதவித்தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரனுடன் தொடர்பு கொண்டு இது குறித்து கேட்டபோது, தாம் அனைத்து வேட்பாளர்களுக்கும் எழுத்து மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் அறிவித்ததாகவும் தேர்தல் நடைபெற முன்னரே இவ்வாறான நிலை முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது காணப்படுகின்றது எனவும் தெரிவித்தார். (அ-7)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த ஐரோ.ஒன்றியம் வலியுறுத்து

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் சமர்ப்பிக்கப்படுவதற்கு இன்னமும் சில நாட்களே உள்ள நிலையில் இலங்கை அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கோரியுள்ளது.

இது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை திறம்பட நடைமுறைப்படுத்தினால் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையில் முக்கியமான பங்களிப்பை செய்ய முடியும்.

இலங்கையில் இன முரண்பாட்டுக்கு மூலகாரணமாக தமிழ் மக்களின் உண்மையான குறைகளை தீர்ப்பதில் கடந்தகால அரசாங்கங்கள் தவறியுள்ளன என்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் கருத்தை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக் கொள்கின்றது.

எல்லாக் குழுக்கள் மற்றும் சமூகங்களிடையேயும் உண்மையான நல்லிணக்கம் அவசியம். அதை அடைவதற்கு கடந்தகால சம்பவங்கள் குறித்த நீதி விசாரணையும் பொறுப்புக் கூறுவதும் முக்கியமாகும்.

ஆயினும் நல்லிணக்க ஆணைக்குழு இலங்கைப் படையினராலும் விடுதலைப் புலிகளாலும் இழைத்திருக்கக்கூடிய குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த அழைப்பு விடுத்துள்ளது.

ஐ.நா நிபுணர் குழு அறிக்கை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை ஆகியன தொடர்பாக ஐ.நா. பொதுச் செயலாளர் மற்றும் பொருத்தமான ஐ.நா. அமைப்புக்களுடன் இணங்கிச் செயற்பட ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் இலங்கையை ஊக்குவிக்கும்.

மேலும் அனைத்துலக சமூகத்தில் இலங்கை ஒரு செயல் நிலையான நாடு. உண்மையான நல்லிணக்கத்தை நோக்கி உறுதியான அர்த்தமுள்ள நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அதன் திட்டத்தை உலகிற்கு காட்டுவதற்கு ஒருவாய்ப்பு கிடைத்துள்ளது. இவ்வாய்ப்பினை இலங்கை பயன்படுத்தும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (அ-7)

# நாகபட்டினம் மீனவரின் வலையில் மூன்று இயந்திரங்கள் சிக்கியது

## புலிகளுடையதா எனவும் விசாரணை

நாகை மீன்பிடித்துறைமுகத்தில் நேற்று முன்தினம் காலை அதிவேக படகு இயந்திரங்கள் மூன்று கிடப்பதாக சுங்கத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. உடனடியாக விரைந்த சுங்க அதிகாரிகள் அவற்றை கைப்பற்றி நாகபட்டின சுங்கத்துறை அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

இது குறித்து சுங்க அலுவலர்கள் கூறியதாவது,

நாகபட்டினம் அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த முத்துத்துரை என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது வலையில் மூன்று இயந்திரங்கள் சிக்கியுள்ளன. அவற்றை மீனவர்கள் கரைக்கு எடுத்து வந்துள்ளனர்.

இது குறித்து தகவல் கிடைத்தவுடன் படகு இயந்திரங்களை கைப்பற்றியுள்ளோம். இந்த 3 இயந்திரங்களும் 6 சிலிண்டர்கள் உடையது. 200 குதிரைவலு கொண்ட இந்த இயந்திரங்கள் சிறிய படகில் அதிவேகமாக செல்வதற்கு பயன்படுத்தப்படும்.

வெளிநாட்டு தயாரிப்பான இவ் இயந்திரங்கள் நமது நாட்டு மீனவர்கள் பயன்படுத்த வாய்ப்பில்லை.

இலங்கையில் நடந்த சண்டையின் போது விடுதலைப்புலிகளால் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனவும் நீண்ட நாட்களாக தண்ணீரில் இயந்திரங்கள் கிடந்துள்ளதால் அவைகளில் கடல் சிப்பிகள் படிந்துள்ளது. உடனடியாக எந்த நாட்டு தயாரிப்பு என்பது தெரியவில்லை. இது குறித்து விசாரித்து வருகின்றோம் என்றும் தெரிவித்துள்ளார். (அ-2-7)


# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.01.2011 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் 2012.03.24 (சனிக்கிழமை) முற்பகல் 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| காங்கேசன்துறை | மானிப்பாய் |
| யாழ்.பிரதான வீதி | மல்லாகம் |
| ஊர்காவற்றுறை | உரும்பிராய் |
| நெல்லியடி | புத்தூர் |
| அச்சுவேலி | பண்டத்தரிப்பு |
| சங்கானை | கோப்பாய் |
| சுன்னாகம் | கொடிகாமம் |
| சாவகச்சேரி | உடுப்பிட்டி |
| வல்வெட்டித்துறை | திருநெல்வேலி |
| யாழ். பல்கலைக்கழகம் | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-5902) 2012.02.23

# நெடுங்கேணியில் சிங்களக்குடியேற்றம் மேற்கொள்ள இரகசிய நடவடிக்கை



## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. குற்றச்சாட்டு

(வவுனியா)

**வவுனியா மாவட்டத்தின் வடக்கில் உள்ள நெடுங்கேணி பிரதேசத்தில் ஆயிரத்து 700 ஹெக்டேயர் பரப்பளவான பகுதியில் சிங்களக் குடியேற்றம் ஒன்றை மேற்கொள்வதற்கான இரகசிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். இந்தக் குடியேற்றத்திற்கு கிபில் ஓயா என பெயர் சூட்டப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.**

இது குறித்து ஊடகங்களுக்கு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நெடுங்கேணி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வெடிவைத்த கல்லு கிராமத்தின் காட்டுப் பகுதியில் உள்ள பிரதேசத்திலேயே இந்த சிங்கள குடியேற்றத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நெடுங்கேணி பிரதேசத்தில் நைனாமடுவில் இருந்து அனந்தர் புளியங்குளம் வீதியில் உள்ள அடர்ந்த காடு காணப்படுகின்றது. இது வெடிவைத்தகல்லு, மருதோடை, அனந்தர் புளியங்குளம் ஆகிய கிராமங்களை சார்ந்துள்ளது. இது வவுனியா மாவட்டத்தின் வடக்கு பிரதேசமாகிய நெடுங்கேணி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தமிழ்ப் பிரதேசத்தின் கீழ் உள்ள பகுதியாகும்.

இங்கு சிங்கள குடியேற்றம் மேற்கொள்ளப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை வலிந்து மேற்கொள்வது திட்டமிட்ட அரசியல் நோக்கம் கொண்ட செயல் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தை சிங்கள மயமாக்குகின்ற ஒரு முயற்சியாகும். இத்தகைய நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படும் என்ற காரணத்திற்காகவே அரசாங்கம் இரகசியமாக இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளில் இறங்கியிருக்கின்றது.

தமிழ்ப் பிரதேசங்களை சிங்கள மயமாக்கும் நடவடிக்கைகள் இந்த அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றது. நெடுங்கேணி பிரதேசத்தை சேர்ந்த கொக்கச்சான்குளம் என்ற இடத்தில் சிங்கள மக்கள் ஏற்கனவே குடியேற்றப்பட்டு சிங்கள மயமாக்கப்பட்டுள்ளது. நெடுங்கேணி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கென்ற் மற்றும் டொலர் பண்ணைகளும் சிங்கள குடியேற்றத்திற்காக அரசாங்கத்தினால் ஏற்கனவே அபகரிக்கப்பட்டுள்ளன.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெற்று மெனிக்பாம் முகாமில் தங்கியிருந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியிருந்த போதிலும் தனிக்கல்லு என்ற கிராமத்திற்குரிய வயல்காணிகளில் சிங்கள மக்கள் விவசாயம் செய்வதற்கு இராணுவம் அனுமதித்திருந்தது. தமது காணியில் விவசாயம் செய்வதற்காக உழவு இயந்திரங்களுடன் சென்ற ஊர் மக்களை இராணுவத்தினரும் சிங்கள விவசாயிகளும் விரட்டியடித்துள்ளனர்.

இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் எதிர்ப்பையும் தனது ஆட்சேபனையையும் தெரிவித்ததையடுத்து சர்ச்சைக்கு மத்தியில் தனிக்கல்லு கிராமத்தை சேர்ந்த தமிழ் விவசாயிகள் இவ்வருடம் அங்கு விவசாயம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்கள்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிராக நாங்கள் குரல் கொடுத்து ஜனாதிபதி கவனத்திற்கு கொண்டு வந்தோம். இது குறித்து ஜனாதிபதியால் விளக்கம் கேட்கப்பட்ட போது இந்தப் பிரதேசம் பல வருடங்களுக்கு முன்பே மகாவலி எல் வலயத்திற்கென அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டு அதற்கான சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருப்பதாக தெரிவித்துள்ள காணி ஆணைக்குழு இந்தக் காணிகளை தேவைப்படும் போது அரசாங்கத்தின் தேவைகளுக்காக பயன்படுத்துவோம் என தெரிவித்திருக்கின்றது. (அ-2)


## மோட்டார் போ.வ.திணைக்களத்தால் வாகன இலக்கத்தகடு விநியோகம்

யாழ்.மாவட்ட மோட்டார் வாகனங்களுக்கான இலக்கத்தகடுகள் மோட்டார் போக்குவரத்து திணைக்கள தலைமைச் செயலகத்தினால் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன் பரிசோதகர் ரி.சிவராஜா அறிவித்துள்ளார்.

கீழ் குறிப்பிடப்படும் இலக்கத்தகடுகளுக்கான வாகன உரிமையாளர்கள் இக்காரியாலயத்திற்கு அலுவலக நாட்களில் பி.ப.2 மணி தொடக்கம் பி.ப.4 மணி வரை உரியவர்கள் வாகன பதிவுப் புத்தகத்துடன் நேரடியாக வருகை தந்து பெற்றுக்கொள்ளலாமென அவர் கேட்டுள்ளார்.

வாகன இலக்கத்தகடுகளின் விபரம் வருமாறு,

GT-0366, GY-3926, JC-6227, KD-2392, KG-4640, MK-7763, PA-3526, QD-4136, QE-0770, QF-7957, QG-6056, QH-0450, QH-2601, QI-3206, QP-2087, TJ-7791, TZ-6632, YV-5182, YV-5657, YV-6392, YV-6414, YV-6416, YV-6484, YV-6609, YV-6635, YV-6650, YV-6804, YV-6873, YV-6882, YV-6888, YV-6891, YV-7356, YV-7358, YV-7360, YV-7387, YV-7388, YV-7391, YV-7978, GN-5509, GS-8614, HM-8338, JN-4638, MR-9359, PA-0363, PA-1532, TA-5647, TS-8186, TZ-3594, VA-2556, VS-7438, VU-6649, VY-0765, YV-4220, YV-4996, YV-5676, YV-5752, YV-5775, YV-5780,JP-0408, KC-7278, LE-6473, LE-6474, MG-5379, MT-7455, PR-6376, TR-2030, UH-0062, YV-0651, YV-0713, YV-1686, YV-1725, YV-1735, YV-1737, YV-1739, YV-1746, YV-2516, YV-2535, YV-2565, YV-2567, YV-2568, YV-2570, YV-2571, GV-1592, HQ-4359, HS-9475, HV-1428, HV-2698, QF-6358, YV-1387, YV-1388, YV-1392,-YV-1419, YV-1421, YV-1422, YV-1427, YV-1861, YV-2294, YV-2334, YV-2708, YV-2786, YV-2927, YV-3110, YV-3112, GX-4787, HH-7201, JU-1868, PA-2786, TL-4488, YV-5807, YV-5808, YV-6583, YV-6637, YV-7957, GO-3392, JD-6628, JG-2588, JZ-7868, LF-1248, LH-9494, QA-6681, US-0515, YV-2937, YV-3125, YV-3301, YV-4251, YV-4255, YV-4256, YV-4269, HL-1195, JJ-7817, LH-0545, QF-5403, UF-7778, XG-8499, YU-9271, YU-9280, YV-0170, YV-0506, YV-0723, YV-0725, YV-0727, YV-1258, YV-1272, YV-1276, JB-7200, LB-9758, LC-7395, MU-9320, QF-9880, QI-0658, UE-3639, UM-0095, VF-3695, VT-5855, VY-7298, WB-0623, YU-8530, YU-8544, YU-8546, YU-8552, YU-8596, YU-8597, YU-8598, YU-8661, YU-8684, YU-8974, YU-9195, YU-9311, YU-9313, YU-9329, YU-9332, YU-9986, YU-9987, YV-0691,GE-5435, GR-7193, HJ-2662, KS-0659, LC-6701, QH-9998, VJ-8255, XG-2379, YU-2900, YU-6724, YU-6794, YU-6812, YU-6905, YU-6928, YU-7059, YU-7264, YU-7355, YU-7355, YU-7380, YU-7410, YU-7446, YU-7451, YU-7485, YU-8353, YU-8355, YU-8364, YU-8371, YU-8375. (அ-2)




ஐக்கிய தேசிய கட்சியின் அநீதிக்கு எதிரான தேசிய இயக்கத்தினால் நேற்று இணையத்தளமொன்று நேற்றைய ஆரம்பித்து வைக்கப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்கவினால் இந்த இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் இந்நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இந்த அரசாங்கம் மக்களின் நலனை கருத்தில் கொள்ளவில்லை

### எதிர்க்கட்சி தலைவர் ரணில் குற்றச்சாட்டு

தர்மத்தின் தீவான இலங்கையை இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் அதர்மத்தின் தீவாக மாற்றியுள்ளது என ஐ.தே.கவின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். இலங்கையில் உள்ள தேராவாத மூன்று பீடங்களுக்கு மேலாக ஊழல் மோசடி விரயம் என்ற பீடங்களும் உருவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

புறக்கோட்டையிலுள்ள தேசிய தொழிலாளர் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் ஐ.தே.கட்சியின் இணையத்தளத்தை நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பித்து வைத்த உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனை தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இந்தியா, பங்களாதேஷ்,பாகிஸ்தான் உட்பட தெற்காசிய வலய நாடுகளை விட ஊழல் மோசடிகள், வீண் விரயங்கள் நிறைந்த நாடாக இலங்கை இடம்பிடித்துள்ளது.

மேலும் அரசாங்கம் எரிபொருட்கள், மின் கட்டணம், காஸ் உட்பட அனைத்தும் விலையேற்றப்பட்டுள்ளன. எதிர்வரும் நாட்களில் மேலும் பல பொருட்களின் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் அபாயம் எம்மை சூழ்ந்துள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்திருப்பதாக குற்றம் சாட்டும் போது அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மரக்கறி வகைகளின் விலைகள் குறைந்திருப்பதாக கூறுகின்றார். இவ்விலை குறைப்பு நிரந்தரமாக இருக்குமா இல்லை. இரண்டொரு தினங்களில் மாறிவிடும்.

சிலாபத்தில் கொலை செய்யப்பட்ட அன்டனி என்ற மீனவர் இன்று பிரபாகரனை விட கடுமையான பயங்கரவாதியாக வர்ணிக்கப்படுகின்றார். இங்கு ஊடக சுதந்திரம் இல்லை. வெள்ளை வான் கலாசாரம் தலைதூக்கியுள்ளது என குறிப்பிட்டார். (அ-2-7)

# நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை உறுதியாக செயற்பட வேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்து

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பேச்சாளர் மார்க் டோனர் நேற்று முன்தினம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை கொண்டு வரப்படுவதற்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றுக்கு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த மார்க் டோனர் நல்லிணக்க ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை என்று குற்றம் சுமத்தினார்.

சாதாரணமாக சிந்தித்தால் அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஆயத்தங்களை கூட இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்று டோனர் குற்றம் சுமத்தி யுள்ளார்.

இந்த நிலையில் எவ்வாறு இலங்கை அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப் போகின்றது என்று அவர் கேள்வி எழுப்பினார்.

எனவே தான் ஏனைய உறுப்பு நாடுகளுடன் இணைந்து இலங்கையின் நல்லிணக் கத்துக்கான ஆரம்பத்தை கொடுக்கும் முக மாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பிரேரணை கொண்டு வரப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரமாக கருத்துக்களை தெரிவிப்பதற்கு அனைத்து பிரஜைகளுக்கும் உள்ள உரிமைகளுக்கு மதிப்பளிக்குமாறு வெள்ளை மாளிகை இலங்கை அரசாங்கத்தை கேட்டுக் கொண்டுள்ளது.

இலங்கையின் இறைமை, நீதி, சிறந்த நிர்வாகம் மற்றும் ஜனநாயகம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை விடுவிக்குமாறு கோரி முன்வைக்கப்பட்டுள்ள மனுவுக்கே இவ்வறிக்கையை வெளியிட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட மனித உரிமைகள் அறிக்கையில் சரத் பொன்சேகா ஒரு அரசியல் சிறைக்கைதியாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளதாகவும் இதில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வழி நடத்தலில் அவரின் அரசியல் தலைவர்கள் தலைமையில் விடுதலைப் புலிகள் அமைப்பினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கைகள் தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் நிலவுகின்ற போதிலும் சரத் பொன்சேகாவை குற்றவாளியாக அடையாளப்படுத்தி அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை அந்த அறிக்கையின் மூலம் நினைவு கூரப் பட்டுள்ளது.

இதன் மூலம் இலங்கையின் சட்டம் மற்றும் சுதந்திரமாக கருத்துத் தெரிவிப்பதற்குள்ள உரிமைக்கு ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளதாக வெள்ளை மாளிகையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2-7)

# தொடர்ச்சியாக அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது

# அஜித்குமார எம்.பி. சபையில் முறைப்பாடு

## மக்கள் பிரதிநிதிக்கே இந்நிலையா என்று கேள்வி

(கொழும்பு)

அநாவசியமான முறையில் தனக்கு தொடர்ச்சியாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக சபையின் கவனத்திற்கு கொண்டு வந்து சபாநாயகரிடம் முறையிட்ட ஜனநாயக தேசியக்கூட்டணி எம்.பி. யான அஜித்குமார மக்கள் பிரதிநிதியொருவருக்கே இந்நிலை என்றால் சாதாரண குடிமகனின் நிலைமை என்ன என்று கேள்வியெழுப்பினார்.

இவ்விடயம் தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ளுமாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை வலியுறுத்தினார்.பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை சிறப்பு பிரச்சினை ஒன்றை எழுப்பி பேசுகையிலே அஜித்குமார எம்.பி மேற்கண்டவாறு முறையிட்டார்.அவர் இங்கு மேலும் கூறுகையில்,

கடந்த செவ்வாய்க்கிழமை காலியில் நான் கல்வி கற்ற பாடசாலைக்கு சென்ற இருவர் தாம் பொலிஸ் திணைக்களத்தை சார்ந்தவர்கள் எனக் கூறிக் கொண்டு குறித்த பாடசாலையின் அதிபரிடம் என்னைப் பற்றி விசாரணை நடத்தியுள்ளனர்.

கடந்த கால எனது பெறுபேறுகள் உள்ளிட்ட பல விடயங்கள் இங்கு விசாரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சிவில்உடையில் சென்று எனது விடயம் தொடர்பில் பாடசாலை அதிபரிடம் விசாரணைகளை மேற்கொள்வதற்கு நீதிமன்றத்தினதோ கல்வித் திணைக்களத்தினதோ அனுமதி பெற்றிருக்கவில்லை.

இது தொடர்பில் காலி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் பாடசாலை அமைந்துள்ள பிரிவுப் பொலிஸ் நிலைய அதிகாரி ஆகியோரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது அவ்வாறு விசாரணை நடத்துவதற்கு வந்த அதிகாரிகள் குறித்து தமக்கு தெரியாது என்றே தெரிவித்தனர்.

நான் யாழ்ப்பாணத்திற்கு சென்ற போதும் மெனிக்பாமுக்கு சென்ற போதும் இவ்வாறு அச்சுறுத்தப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டேன்.

இவ்வாறான செயற்பாடுகள் என் மீதான அச்சுறுத்தலை அதிகரித்திருக்கின்றன.இது ஒரு பாரிய பிரச்சினையாக இருக்கின்றது.

மேற்படி சம்பவங்கள் மூலம் அடிப்படை மற்றும் மனித உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன.

எனவே இது தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்தார். (அ-7)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் கலைவாணி இராமநாதன் அவர்கள் எழுதிய இந்திய மெய்யியற் சிந்தனையில் வேதாந்தம்- சித்தாந்தம் கூறும் கடவுட் கொள்கை மற்றும் பண்டிதர் த.சுப்பிரமணியம் எழுதிய சைவ புண்ணிய காலம் மறுபதிப்பு ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள சக்தி இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் வி.கயிலாசப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமெரிக்க ஹவாய் சைவ ஆதீன தவத்திரு ரிஷி தொண்டு நாத சுவாமிகளும் சிறப்பு விருந்தினராக மலேசியா இந்துக்கல்விக் கான மையத்தைச் சேர்ந்த வணக்கத்துக் குரிய குகநாத சுவாமிகளும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வெளியீட்டுரையை அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் கலாநிதி ஆறு திருமுருகன், ஏற்புரையினை பேராசிரியர் கலைவாணி இராமநாதனும் மறைந்த பண்டிதர் ந.சுப்பிரமணியம் அவர்களின் புதல்வியார் திருமதி உ.இரத்தினசிங்கமும் நிகழ்த்தவுள்ளனர். (ந-8)

# சகோதர பாசத்தை மறந்து சொத்துப்பிரச்சினை

(யாழ்ப்பாணம்)

சொத்துப் பிரச்சினை காரணமாக சகோதரரின் மனைவியை அறைக்குள் பூட்டி விட்டு சகோதரரோடு சண்டித்தனத்தில் ஈடுபட்டுள்ளார்.

இச்சம்பவம் பழைய பூங்கா வீதி சுண்டிக்குளியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது. இரு சகோதரர்களுக்கிடையில் நீண்ட காலமாக சொத்துப் பிரச்சினை காணப்பட்டு வந்துள்ளது.

குறித்த தினத்தில் சுண்டிக்குளியிலுள்ள சகோதரனின் வீட்டிற்குள் அடியாட்களோடு நுழைந்த நான்கு பேர் அவ்வீட்டின் குடும்பஸ்தரை தாக்க முயன்றுள்ளனர். கணவனை தாக்குவதனை தடுக்க முயன்ற மனைவியை அறையொன்றினுள் பூட்டிவிட்டு ரகளையில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் குறித்த குடும்பஸ்தர் விபத்து ஒன்றில் சிக்கி சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக யாழ்.பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ-4)

# Jaffna திரைப்படத்தில் பிரபல நடிகர் அப்ரஹாம்

தமிழீழ விடுதலைப்புலிகளை மையமாகக் கொண்ட திரைப்படமொன்றில் பாலிவூட்டின் பிரபல நடிகர் ஜோன் அப்ரஹாம் நடிக்கவுள்ளார்.

இந்தத் திரைப்படத்தை ஜோன் அப்ரஹாம் தயாரிக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. திரைப்படத்திற்கு Jaffna என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இத்திரைப்படத்தை பிரபல இயக்குநர் Shoojit Sircar இயக்க உள்ளார். ஜோன் அப்ரஹாம் இந்திய புலனாய்வு அதிகாரியாக நடிக்கவுள்ளார்.

பயங்கரவாதம் தொடர்பிலும் இந்த திரைப்படத்தில் பேசப்படும் எனவும் சம்பந்தப்பட்ட அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஜோன் அப்ரஹாம் இலங்கைக்கு அடிக்கடி விஜயம் செய்யவுள்ளார் எனக் குறிப்பிடப் படுகிறது. (அ-2-7)

# பெண்கள் அமைப்பில் இணையுமாறு ஷிராந்தி ராஜபக்ஷவிற்கு அழைப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனநாயக்க, முன்னாள் இராணுவதளபதி சரத்பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா, காணாமல் போயுள்ள ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட ஆகியோருடன் இன்னும் பல பெண்கள் இணைந்து உருவாக்கியுள்ள பெண்கள் அமைப்பு எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகியவற்றக்கு எதிரான தமது போராட்டத்தில் முதல் பெண்மணியான ஷிராந்தி ராஜபக்ஷவை இணையுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

தமது அரசியல் சமயம் என்பவற்றுக்கு அப்பால் ஒவ்வொரு பெண்ணும் இந்த இயக்கத்தில் சேர வேண்டுமென இந்த இயக்கத்தின் தலைவியான விசாக தர்மதாச அழைப்பு விடுத்துள்ளார்.

சடுதியான இந்த விலை அதிகரிப்புகள் மக்கள் வயிற்றிலடிப்பதாகும் என அனோமா பொன்சேகா கூறினார்.

தனது கணவனின் ஓய்வூதியம் பறிக்கப் பட்டுள்ளதால் தனக்கு வருமானம் ஏதும் இல்லையெனவும் அதனால் வாழ்க்கை செலவு அதிகரிப்பின் நெருக்குவாரத்தை தன்னால் விளங்க முடிகின்றது என அவர் கூறினார்.

மண்ணெண்ணெய் விலையேற்றம் பற்றி கடற்றொழிலாளர்களின் மனைவியர்கள் என்னிடம் கூறிய போது அவர்களின் சோகத்தை என்னால் காணமுடிந்தது. நாம் ஏன் அமைதியாக இருக்கின்றோம். நாம் துணிந்து பேச வேண்டிய காலம் வந்து விட்டது என அவர் கூறினார்.

(அ-2)

# பாலியல் குற்றங்கள் புரிபவர்களுக்கு இரசாயன முறையில் கசையடி

## ரஷ்ய மேல்சபை ஒப்புதல்

சிறுவர்களை பாலியல் பலாத்காரம் செய்யும் குற்றவாளிகளுக்கு இரசாயன மருந்து செலுத்தி காயடிக்க ரஷ்ய பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.


ஐரோப்பாவில் குறிப்பாக போலந்து, போர்த்துக்கல், பிரிட்டன் போன்ற நாடுகளில் பாலியல் குற்றவாளிகளுக்கு காயடிக்கும் தண்டனை அளிக்கப்படுகின்றது. சமீபத்தில் ஜேர்மன் நாட்டிலும் இந்த தண்டனை பரவலாக பின்பற்றப்படுகின்றது. இதற்கு ஐரோப்பிய குழு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே ரஷ்யாவில் கடந்த 2010 ஆம் ஆண்டில் சிறுவர்கள் அதிக அளவில் பாலியல் கொடுமைக்கு ஆளாகியுள்ளனர். அதிகரித்து வரும் இந்த குற்றத்தை கட்டுப்படுத்த சிறுவர்களை பாலியல் பலாத்காரம் செய்யும் குற்றவாளிகளுக்கு இரசாயன மருந்தை செலுத்தி காயடிக்க வைக்க ரஷ்ய பாராளுமன்றம் மேல்சபை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த குற்றம் தொடர்பாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள குற்றவாளிகள் தண்டனையை குறைக்க கோரினாலோ அல்லது பரோலில் செல்ல கோரிக்கை வைத்தாலோ அவர்களை காயடித்து தண்டனையை குறைக்கவும் புதிய சட்டத்திருத்த மசோதா வழி செய்துள்ளது.

ரஷ்யாவில் தற்போதைய பாலியல் குற்றங்களுக்கு மனநல சிகிச்சை மற்றும் அபராதம் அளிக்கும் நடைமுறை உள்ளது. இனி சிறுவர்களிடம் மேற்கொள்ளப்படும் பாலியல் குற்றங்களுக்கு இரசாயன முறையில் காயடித்தல், ஆயுள் தண்டனை ஆகிய தண்டனைகள் வழங்கப்படவுள்ளன. (அ-2)

# கார்குண்டு வெடிப்பில் 12 பேர் பலி;36 பேர் காயம்



## பாகிஸ்தானில் சம்பவம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பெஷாவர் நகர் பஸ் நிலையத்தில் கார்க்குண்டுவெடித்ததில் இரண்டு குழந்தைகள் உட்பட 12பேர் பலியாகினர். 36 பேர் படுகாயமடைந்தனர்.

பாகிஸ்தானின் பெஷாவர் நகர பேருந்து நிலைய வாசலில் 40 கிலோ வெடிமருந்து பதுக்கி வைக்கப்பட்டிருந்த கார் நிறுத்தப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் காலை இந்த கார்க்குண்டு வெடித்ததில் அங்கு நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் படுசேதமடைந்தன. கைபர் பக்துன்க்வா மாகாணத்துக்கு செல்வதற்காக காத்திருந்த பயணிகள் 12பேர் இந்தச் சம்பவத்தில் உடல் சிதறிப் பலியாகினர். இதில் பெண்கள் , குழந்தைகள் உட்பட 36பேர் காயமடைந்து உள்ளூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பேருந்து உள்ளிட்ட 15 வாகனங்கள் இந்த வெடிகுண்டுச்சம்பவத்தில் சேதமடைந்துள்ளன. இப்பகுதியில் போக்குவரத்து தடைசெய்யப்பட்டு பயங்கரவாதிகளைத்தேடும் பணி நடக்கிறது. இதுவரை இந்தச் சம்பவத்துக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. குண்டுவெடித்த இடத்தில் பெரிய பள்ளம் ஏற்பட்டுள்ளது. அருகிலிருந்த கட்டடங்களின் ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்கியுள்ளன. (அ-2)

# துனிசியாவில் உலக மாநாடு; சிரியா தடைகள் குறித்து விவாதிப்பு

(டமாஸ்கஸ்)

சிரியாவின் தற்போதைய நிலைமை குறித்து விவாதிப்பதற்காக உலக நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் உலக மாநாடு துனிசியாவில் நடைபெறவுள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துககு எதிராக கடந்தாண்டு மார்ச் மாதம் முதல் போராட்டம் நடந்து வருகின்றது.

இப்போராட்டத்தில் போராட்டக்காரர்களை இராணுவம் கொன்று குவிக்கிறது. இதுவரை நடந்த தாக்குதல்களில் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக ஐ.நா. அறிவித்துள்ளது.

சமீபத்தில் சிரியாவின் ஜனாதிபதி ஆசாத்துக்கு எதிரான தீர்மானம் ஐ.நா.வில் நிறைவேற்றப்பட்டுள்ளதை அடுத்து தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

சிரியாவுக்கு எதிரான உலக மாநாடு துனிசியாவில் நடைபெறவுள்ளது. இந்த கூட்டத்தில் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் அரபு கூட்டமைப்பு நாடுகள் உட்பட 70 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சேதமடைந்த பகுதிகளுக்கும் மனிதாபிமான அடிப்படையில் உதவிகள் செய்வது குறித்து விவாதிக்கப்படும்.

மேலும் சிரியாவுக்கு எதிராக பல்வேறு தடைகளை விதிப்பது குறித்தும் விவாதிக்கப்படும் என தெரிகிறது. இந்தக்கூட்டத்தில் கோபி அனான் சிரியாவில் தூதுவராக நியமிக்கப்படுவார். இவர் ஐ.நா. பொதுச் செயலாளராக பணியாற்றியவராவார்.

இது குறித்து ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சிரியாவில் தற்போது நடைபெற்று வரும் வன்முறைத்தாக்குதல்களை முடிவிற்கு கொண்டு வரவும் அமைதியை நிலைநாட்டவும் இந்த மாநாடு வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடந்த தாக்குதலில் ஒரு நாளில் மட்டும் 50 இலிருந்து 60 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கோபிஅனான் சிரிய தூதராக நியமனம்

சிரியாவில் நிலவிவரும் அரசியல் ஸ்திரமற்ற நிலைக்கு விரைவில் தீர்வு காண வேண்டும். மனித உரிமை மீறல் நிகழ்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதன் அடிப்படையில் ஐ.நா. சபை மற்றும் அரபு நாடுகள் சார்பில் சிரிய தூதராக கோபி அனான் நியமிக்கப்பட்டுள்ளார்.

73 வயதாகும் கோபி அனான் ஐ.நா. அமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)




துனிசியா தலைநகர் துனிசில் அந்நாட்டு செயலர் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் தொவ்சாமி அப்துலியை (வலது) குவைத் வெளியுறவுத்துறை அமைச்சர் சபா அல்– கலித் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.




# நான் ஒரு அப்பாவி; எக்குற்றமும் அறியேன்

## முபாரக் கெஞ்சல்



நான் ஒரு அப்பாவி. எந்த குற்றமும் செய்யவில்லை என எகிப்து ஜனாதிபதி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

எகிப்தில் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் அரசுக்கெதிராக மக்கள் புரட்சி ஏற்பட்டது. ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் மீது ஊழல், கொலை மற்றும் போர்க்குற்ற வழக்குகள் தொடரப்பட்டது.

கெய்ரோ நீதிமன்றில் விசாரணை நடந்து வருகின்றது. நேற்று முன்தினம் நடந்த விசாரணையில் ஜனாதிபதி சார்பில் அவரது வக்கீல் மெமோ ஒன்றை நேற்று முன்தினம் தாக்கல் செய்தார்.

அதில் என்மீதான குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை. நான் ஒரு அப்பாவி, எகிப்து நீதித்துறை மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. நான் நிரபராதி என்பதை நிரூபிப்பேன்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார். முபாரக் மீதான வழக்கில் குற்றம் நிரூபணமானால் அவருக்கு மரண தண்டனை கூட விதிக்கப்படலாம் என தக்ரிர் செய்தித்தாள் ஒன்று கட்டுரை வெளியிட்டுள்ளது. (அ-2)

# ஆப்கானில் விமானக்குண்டு வீச்சு; 15 தலிபான் தீவிரவாதிகள் பலி

பாகிஸ்தான் நாட்டின் வடமேற்குப் பகுதியில் ஆப்கான் எல்லை உள்ளது. இங்குள்ள மலைப்பகுதிகளில் தலிபான் தீவிரவாதிகள் தங்களின் முகாம்களை அமைத்துள்ளனர்.

இந்நிலையில் இங்கு தலிபான் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக உள்ளூர் புலனாய்வுத்துறையினரிடமிருந்து கிடைத்ததகவலின் பேரில் நேற்று முன்தினம் காலை பாகிஸ்தான் நாட்டின் இரு போர் விமானங்கள் அந்தப் பகுதிக்கு அனுப்பப்பட்டன.

இந்தப்போர்விமானங்கள் அங்குள்ள ஆப்கான் எல்லையின் ஒரக்சாய் பகுதியில் உள்ள 4 தீவிரவாத முகாம்களின் மீது குண்டுகளை வீசியது. இந்தத்தாக்குதலில் 15 தலிபான் தீவிரவாதிகள் பலியாகியுள்ளதாக மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-2)

# ஜாக்சனை நான் கொலை செய்யவில்லை

பிரபல பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜாக்சன் அதிக கடன் சுமை காரணமாக போதை மருந்து உட்கொண்டு இறந்தார் என அவருடைய மருத்துவர் கொன்ராட் முர்ரே தெரிவித்துள்ளார். ஜாக்சனின் மரணத்திற்கு அதிக போதை மருந்து தான் காரணம் எனக் கருதி இவரது மருத்துவர் கொன்ராட் முர்ரேவுக்கு கடந்தாண்டு நவம்பர் மாதம் 4 ஆண்டு சிறைத்தண்டனை அறிவிக்கப்பட்டது.இந்த தண்டனையை எதிர்த்து லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்ற நீதிபதியிடம் கொன்ராட் முர்ரே குறிப்பிடுகையில் , மைக்கல் ஜாக்சனை நான் கொலை செய்யவில்லை. அவருக்கு 440 மில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு கடன்சுமை இருந்தது.

இதன் காரணமாக தன்னுடைய எஸ்டேட் உட்பட பல்வேறு சொத்துக்கள் பறிபோவதை பொறுக்க முடியாமல் தானாகவே அவர் அதிக அளவு போதை மருந்து உட்கொண்டு இறந்தார். இதை விசாரணையின் போது நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். (அ-2)

மதியாதார் முற்றம் மிதியாதே என்று...
-ஔவையார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## மானமுள்ள மனிதனுக்கு ஔவை சொன்னது

மனித வாழ்வில் பணமும் பதவியுமே 'கோடி' பெறுமதியென்று நினைப்பவர்கள் ஏராளம். இத்தகைய நினைப்புடையவர்கள் பதவிக்காகவும் பணத்துக்காகவும் எதையும் இழக்கத் தயங்க மாட்டார்கள்.

இவர்கள் தொடர்பில் விழிப்பாக இருக்காத விடத்து நிலைமை மிகவும் மோசமாக மாறி விடும். பதவியையும். பணத்தையும் உயர்வாக மதிக்கின்றவர்களிடம் பண்பை எதிர்பார்ப்பது முடியாத காரியம்.

அவர்கள் இலக்கை அடைவதற்காக காலிலும் விழுவார்கள். சாதித்துவிட்டால் காலை வாரியும் விடுவார்கள். இத்தகையவர்களுக்காக தமிழ் மூதாட்டி ஔவைப்பிராட்டி அருமையாக அறிவுரை கூறியுள்ளார்.

அன்புக்குரிய மாந்தர்களே! பணமும் பதவியுமே கோடி பெறுமதியென்று நினைத்துவிடாதீர்கள் 'மதியாதார் முற்றம் மதித்தொருகால் மிதியாமை கோடிபெறும்' என்றார்.

மானமுள்ள மனிதர்களுக்கு ஔவை கூறிய இந்தவார்த்தை மிகவும் காத்திரமானது.

ஔவை கூறியதை இப்போது எதற்காக கூறுகிறீர்கள் என்று நீங்கள் கேட்கலாம்.

எல்லாம் சவேந்திர சில்வா படும் மரியாதைக் கேட்டை பார்த்தபின்னர்தான். மானமுள்ளவர்களுக்கு ஔவை கூறிய தத்துவத்தை எண்ணிப் பார்த்தேன்.

மானமுள்ளவர்கள் தேவையான இடத்தில் தங்களுக்குக் கிடைத்த பதவிகளையும் தூக்கி எறிந்துவிடுவார்கள். சில இடங்களில் பதவியில் இருப்பதை விட, பதவியை தூக்கியெறி வதுதான் கோடி மதிப்பைக் கொடுக்கும்.

எனினும் இந்த உண்மை சவேந்திர சில்வாவுக்கு புரியவேயில்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிகாக்கும் படைப்பிரிவின் ஆலோசனைக் குழுவுக்கு சவேந்திர சில்வா தெரிவு செய்யப்பட்டார்.

எனினும் வன்னிப் போரில் ஒரு படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக இருந்த சவேந்திர சில்வா போர்க்குற்றம் புரிந்தவர்.

எனவே அவரை ஐ.நா. சபையின் அமைதிப்படையின் ஆலோசனைக் குழுவில் சேர்க்கக் கூடாதுஎன மனிதவுரிமை அமைப்புகள் முதல் பல்வேறு பொது அமைப்புகள் வரை கோரிக்கை விட்டிருந்தன.

இந்த நிலையில் சவேந்திர சில்வா மானமுள்ளவராக இருந்தால் தனக்குத் தரப்பட்ட பதவியைத் தூக்கி எறிந்திருக்க வேண்டும்.

அவ்வாறு அவர் செய்திருப்பராயின் அது இலங்கை நாட்டவர்களுக்கே கௌரவமாக இருந்திருக்கும். ஆனால் அவர் அதனைச் செய்யவில்லை. சவேந்திர சில்வா தனக்கு வழங்கப்பட்ட பதவியைத் தூக்கி எறிந்திருப்பாராயின் அவரைப் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தியவர்கள் கூட சவேந்திர சில்வா மானமுள்ளவர் என்று மனதளவிலேனும் எண்ணியிருப்பர்.

இப்போது ஐ.நா. சபை அமைதிப்படையின் ஆலோசனைக் கூட்டத்தில் பங்குபற்ற சவேந்திர சில்வாவுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இன்னுந்தான் சவேந்திர சில்வாவுக்கு மானம், ரோசம் வரவில்லை.

அட! ஐயா! இனியாவது பதவியை தூக்கி எறி என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல ஆவது கூறியிருக்கலாம்.

என்ன செய்வது! ரோசம் கெட்டவன் இராசாவிலும் பெரியவன் என்ற தத்துவம் இலங்கையில் தாராளமாக கோலோச்சுகிறது.

## சைவ உண்மைகளை அறிய உதவும் சிவநெறி அடியார்கள் நூல்




சிவதொண்டன் நா.முருகையா அவர்கள் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் சகோதரியின் மகன். அவருடைய வழிகாட்டலில் வளர்ந்தமையால் சைவவாழ்வில் மிகுந்த படிப்புள்ளவர். சிவபுராணங்கள், நாயன்மார் வாழ்க்கை என்பவற்றில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர். சமயம் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டு நாயன்மார்களின் அற்புதங்கள் நிறைந்த வாழ்க்கை வரலாறுகளை சைவ சமூகத்தினர் அறிந்திருக்க வேண்டும் என்ற நோக்கில் அவை பற்றி நூல்கள் எழுதுபவர்.

சிவநெறி அடியார்கள் என்னும் இந்நூல் அடியார்கள் சிவநெறியில் செல்லும் போது ஏற்படும் ஆபத்துக்கள் சிவனருளால் நீக்கப்படுவதையும் உலகியல் வாழ்க்கையில் அவர்கள் சிறப்புக்களைப் பெறுவதுடன் ஈடிணையில்லா வீட்டின்பம்பெற்று பேரானந்தம் அடைவதையும் எடுத்துக்கூறுகின்றது.

இலகுதமிழில் சாதாரண அறிவுள்ளவர்களும் சைவசமய உண்மைகளை அறிந்து வாழ்வில் சிறப்படைய வழிகாட்டும் வகையில் இந்நூல் வழிசெய்கின்றது.

**திருமதி நாச்சியார் செல்வநாயகம்**
முதுநிலை விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வாழ்க வையகம் வாழ்க வளமுடன் என்ற உயரிய நோக்கத்தைக் கொண்ட சிவதொண்டன் முருகையா அவர்களின் சிவப்பணி போற்றுதலுக்குரியது.

## ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டால் அழுத்தங்கள் குறைவடையலாம்!

### த எக்கனமிஸ்ற் சஞ்சிகை சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் உண்மையான நல்லிணக்கத்தையும் ஜனநாயக ஆட்சியை உறுதிப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ துரிதப்படுத்தும் பட்சத்தில் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்க்ள் தொடர்பில் வெளித்தரப்பினர் தமது அழுத்தங்களை குறைக்கலாம் என பிரித்தானியாவை தளமாகக் கொண்ட வெளிவரும் த எக்கனமிஸ்ற் எனும் சஞ்சிகை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப்போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய விவகாரங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்று கொண்டுவரப்படவுள்ள நிலையில் இவ் ஊடகம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இவ் விவகாரம் தொடர்பில் அவ்வூடகத்தில் வெளிவந்துள்ள கட்டுரையின் முக்கிய விடயம் வருமாறு,

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கு எதிராக பல்வேறு விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் எதிர்வரும் 27ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் அரசாங்கத்தின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படலாம்.

இக் கூட்டத் தொடரின் போது இலங்கைக்கு எதிராக ஐரோப்பிய நாடுகளின் ஆதரவுடன் அமெரிக்கா தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் அரசாங்கம் மீது அழுத்தங்கள் ஏற்படுவதை நோக்காக கொண்டே இத் தீர்மானம் கொண்டுவரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் பொழுது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் வெளிவந்த வீடியோக்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்க மறுக்கிறார்.

இந் நிலையில் இக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக அரசாங்கம் இராணுவ நீதிமன்றத்தை உருவாக்கியுள்ளது.

ஆனால் இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமை ஆணைக்குழுவில் கொண்டுவரப்படவுள்ளதீர்மானமானது உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவை பயன்படுத்தி அரசாங்கம் மீது அழுத்தங்களைபிரயோகிப்பதன் ஊடாக ஏனைய பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்துமாறு கேட்பதற்கான ஒரு நகர்வாக கருதப்படுகின்றது.

தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாடுவதற்கான அனுமதி வழங்கப்படுதல், கருத்துச் சுதந்திரம், குடியியல் நிர்வாகத்தில்படைத்தரப்பின்தலையீடுகளைக் குறைத்தல், துணை ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளை முடக்குதல் மற்றும் படைத்தரப்பினரால் தனித்து மேற்கொள்ளப்பட்ட குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு தண்டனை வழங்குதல் போன்ற பரிந்துரைகளே அரசாங்கத்தால் நிறைவேற்றப்படவேண்டும் என அழுத்தம் கொடுக்கும் ஏனைய பரிந்துரைகளாகும்.

இலங்கைக்கு எதிராக ஐக்கியநாடுகள் சபை மனிதவுரிமை ஆணைக்குழுவில் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தை கியூபா, பாகிஸ்தான், ரஷ்யா, அல்ஜீரியா மற்றும் சீனா போன்ற நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இந் நிலையில் இலங்கையில் உண்மையான நல்லிணக்கத்தையும் ஜனநாயக ஆட்சியை உறுதிப்படுத்து வதற்குமான நடவடிக்கைகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ துரிதப்படுத்தும் பட்சத்தில் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமைகள் மீறல்கள் தொடர்பில் வெளித்தரப்பினர் தமது அழுத்தங்களை குறைக்கலாம் என தஎக்கனமிஸ்ற் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-11)

## கச்சதீவுக்கு விசேட படகுச்சேவை

(நெடுந்தீவு)

கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்தினை முன்னிட்டு எதிர்வரும் 3,4 ஆம் திகதிகளில் விசேட படகுச் சேவை மேற்கொள்ளப்படவுள்ளது.

காலை 9.30 மணிக்கு நெடுந்தீவு பல நோக்குச் கூட்டுறவுச்சங்க படகு, காலை 10.30 மணிக்கு நெடுந்தீவு அக்குவாட்டி படகு, 11.30 மணிக்கு கடற்றொழிலாளர் சங்க படகு, பிற்பகல் 12.30 மணிக்கு நெடுந்தீவு சென். அன்ரனிஸ் படகு என்ற ஒழுங்கில் படகுச் சேவை இடம்பெறும்.

மறுநாள் 4 ஆம் திகதி அதிகாலை 4.30 மணிக்கு நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்க படகுச் சேவை இடம்பெறும் என நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி அறிவித்துள்ளார். (அ-7)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### சுறுசுறுப்பாகத் திகழுங்கள்



நம்முடைய உடலையும் அறிவையும் ஞானத்தையும் பலவீனமாக்கும் எதையும் விஷம் என ஒதுக்கிடவேண்டும்.

பிறருடைய தவறு எவ்வளவு கெட்டதாக இருந்தாலும் அதுபற்றிப்பேசக்கூடாது. அப்படிச்செய்வதானால் நீங்கள் அவனுக்கு கேடு செய்வதுடன் உங்களுக்கும் கேடு ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

தன்னை அடக்கப்பழகிக் கொண்டவன் வேறு எதற்கும் வசப்படமாட்டான். அவனே உலகில் நன்றாக வாழத்தகுதியுள்ளவன்.

எதிலும் பரபரப்புத்தேவையில்லை. ஆனால் சுறுசுறுப்பு எப்போதும் தேவை.

கீழ்ப்படிதல், முயற்சியுடைமை, செயலாக்கம் ஆகிய மூன்றும் இருந்தால் ஒருவன் வெற்றிபெற்று முன்னேறுவதை எதனாலும் தடுக்கமுடியாது.

உலகத்தில் உயர்ந்த செயல்கள் அனைத்தையும் சாதித்தவர்கள் உங்களையும் என்னையும் போன்று மனிதர்களே. வீரம் மட்டுமிருந்தால் நம்மைப் போன்ற மனிதர்கள் எதையும் செய்துமுடிக்க முடியும்.

இயந்திரங்கள் மனித சமூகத்திற்குச் சுகத்தைக் கொடுத்தவையுமல்ல, கொடுக்கப்போவதுமில்லை.

# நைஜீரியாவில் வறுமையில் வாடிவரும் இந்தியர்கள்

கடந்த ஒரு ஆண்டு காலமாக நைஜீரியாவில் இந்தியர்கள் சம்பளமின்றி தவித்து வருகின்றனர். ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் சுமார் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர் அங்குள்ள இரும்பு தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர். அதே போல் பிரோமோத் குமார் மிட்டல் என்பவருக்கு சொந்தமான இரும்பு தொழிற்சாலையில் ஏராளமான இந்தியர்கள் பணியாற்றுகின்றனர். ஆனால், இவர்களுக்கு கடந்த ஒரு ஆண்டு காலமாக சம்பளம் வழங்காததால் பட்டினியால் வாடி வருகின்றனர்.


இது குறித்து நைஜீரியாவில் உள்ள இந்திய தூதரகம் மூலம் பிரதமர் வெளியுறவுத்துறை மற்றும் வெளிநாட்டு விவகாரத்துறை ஜனாதிபதி ஆகியோருக்கு கடிதம் அனுப்பி கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் தொழிலாளர்களின் செய்தி தொடர்பாளர் தினேஷ்யாதவ் தெரிவிக்கையில், தொழிலாளர்கள் வாழ்வதற்கு தேவையான அடிப்படை வசதிகளான போக்குவரத்து வசதி, உணவு வசதி, மின்சாரவசதி, பாதுகாப்பு, மருத்துவம் போன்ற வசதிகள் செய்துதரப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

(அ-2-7)

# இந்தியாவுடன் உறவை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது

## பாகிஸ்தான் தெரிவிப்பு



இந்தியாவுடன் உறவை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது என்று பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. இந்திய பாராளுமன்ற குழு லோக்சபை சபாநாயகர் மீராகுமார் தலைமையில் பாகிஸ்தானுக்கு சென்றுள்ளது. இந்திய குழுவுக்கு கடந்த 22 ஆம் திகதி இஸ்லாமாபாத்தில் வரவேற்பு வழங்கப்பட்டது.

வரவேற்பில் பாகிஸ்தான் நாட்டு தற்காலிக அதிகாரி பரூக் நாயக் பேசுகையில், இந்தியாவுடன் நல்லுறவை ஏற்படுத்த ஜனாதிபதி அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார். பாகிஸ்தான் கொள்கைகளும் இந்தியாவுடன் உறவை மேம்படுத்தும் வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் பரூக் கூறினார்.

இந்தியாவுடன் காஷ்மீர் உட்பட அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்க பேச்சுவார்த்தை நடத்துவதோடு நல்ல கருத்துக்களை பரிமாற்றம் செய்வதாலும் முடியும். இந்த பிராந்திய வளர்ச்சிக்கும் அமைதிக்கும் உதவும் வகையில் இந்தியா உட்பட அனைத்து அயல் நாடுகளுடன் நல்லுறவை வைத்துக்கொள்ள பாகிஸ்தான் தொடர்ந்து முயற்சிகள்ளை மேற்கொண்டு வருகிறது.

இந்தியா பாகிஸ்தான் இடையே உள்ள காஷ்மீர் மற்றும் தண்ணீர் பங்கீடு பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண இது ஒரு நல்லநேரம் என்றும் இதை இரு நாடுகளும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் நாயர் மேலும் கூறினார். பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி தற்போது வெளிநாட்டில் இருக்கிறார். அவர் தனிப்பட்ட முறையில் வெளிநாடு சென்றிருப்பதாக கூறப்படுகிறது. (அ-2)

# சுவிஸ் வங்கிகளில் பணம் செலுத்தப்படும்போது வருமான வரி குறித்து விசாரிக்க வேண்டும்

## கொள்கை தயாரிப்புக்குழு தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியா உள்ளிட்ட பிற நாட்டு மக்கள் சுவிஸ் வங்கிகளில் பணம் செலுத்தும் போது அவர்களது வருமானவரி கட்டுப்பாடுகள் குறித்து நன்கு விசாரிக்க வேண்டும் என்றும் கணக்கு காட்டாமல் வரும் கறுப்பு பணத்தை இனி ஏற்கக் கூடாது என்றும் சுவிட்சர்லாந்து நாட்டின் கொள்கைகளை தயாரிக்கும் உயர்மட்ட அமைப்பு முடிவெடுத்துள்ளது.


இரகசியங்களை பாதுகாக்கும் சக்தி வாய்ந்த வங்கிகளில் சுவிஸ் வங்கி முதலிடம் பெற்றுள்ளதாலும் இந்த வங்கியில் வரி குறித்த தகவல்கள் ஏதும் கேட்கப்படுவதில்லை என்பதாலும் பிற நாடுகளின் மிகப் பெரிய பணக்காரர்களை இதுவே ஈர்த்துள்ளது.

மேலும் சில தினங்களுக்கு முன் சி.பி.ஐ அதிகாரி ஒருவர் சுவிஸ் வங்கியில் இந்திய முதலீட்டாளர்கள் பதுக்கி வைத்திருக்கும் பணத்தின் மதிப்பை எண்ணிக்கையில் கூறியிருந்தார். இந்த தகவல் ஆதாரமற்றவை என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது. (அ-2)

# பாரதச் செய்தி

# எஸ்.ஆர்.ஜிண்டால் விருதுகளுக்கு கலாம் உள்ளிட்ட 27 பேர் தெரிவு

(புதுடில்லி)



‘சமுதாய மேன்மையில் பங்களித்ததற்காக முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல் கலாம், சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே மற்றும் கர்நாடக மாநிலம் லோக் ஆயுக்தா சந்தோஷ் ஹெக்டே உள்ளிட்ட 27 பேர் ஜிண்டால் மற்றும் எஸ்.ஆர். ஜிண்டால் விருதுகளை பெற்றனர். கிராமப்புற வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பிற்காக விருதைப் பெற்ற அன்னா ஹசாரே செய்தியாளர்களிடம் கூறியதாவது,

நான் இப்போது ஆரோக்கியமாக இருக்கிறேன். மேலும் ஊழலுக்கு எதிராக எதிர்காலத்தில் நான் போராட தயாராக உள்ளேன். எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்வேன்.

அன்னா ஹசாரே தனக்கு கிடைத்த பரிசுத் தொகையான 25 இலட்சம் ரூபாவை தனது தலைமையில் இயங்கும் அறக்கட்டளை ஒன்றிற்கு நன்கொடையாக கொடுத்தார்.

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துறையில் சிறந்த பங்களித்ததற்காக அப்துல் கலாமுக்கு லோக் ஆயுக்தாவாக இருந்து கர்நாடக மக்களின் வாழ்க்கையில் உண்மையான மாற்றத்தை கொண்டு வந்ததற்காக ஹெக்டேக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. தனக்கு கிடைத்த ஒரு கோடி ரூபாய் பரிசுத் தொகையை மூன்று தொண்டு நிறுவனங்களுக்கும் தான் பிறந்த இராமநாதபுர மாவட்ட பொது நூலகத்திற்கும் கலாம் நன்கொடையாக வழங்கினார். (அ-2)

# எயிட்ஸ் நோயாளர்களின் தொகை 6 இலட்சமாக உயர்வு

ஆந்திர மாநிலத்தில் எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை 6 இலட்சத்தை தாண்டியுள்ளதையடுத்து அம்மாநிலத்தில் எயிட்ஸ் நோயாளிகளுக்கு தீவர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆந்திரா மாநிலம் குண்டூர், கிழக்கு கோதாவாரி, கிருஷ்ணா, மேற்கு கோதாவரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் எயிட்ஸ் நோய் வேகமாகப் பரவி வருகிறது.

இந்நிலையில் ஆந்திர அரசு எயிட்ஸ் நோயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது. மேலும் நோய் பரவுவதை தடுக்கும் தளடுப்பு முறைகள் பற்றி தீவிர பிரசாரம் செய்ய முடிவு செய்துள்ளது. (அ-2)

# பிரித்தானியாவின் மேயர் தேர்தலில் இந்திய வம்சாவளி பெண் களத்தில்

பிரித்தானியா தலைநகர் லண்டனில் வருகிற மே மாதம் நடைபெறவுள்ள மேயர் தேர்தலில் இந்திய வம்சாவளியை சேர்ந்த சியோபான் பெனிடா என்ற பெண் போட்டியிடுகின்றார்.

லண்டனில் எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி மேயர் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தேர்தலில் போட்டியிட 9 பேர் தங்கள் பெயரை பதிவு செய்துள்ளனர்.


வேட்பாளர்களின் பட்டியல் மார்ச் மாதம் 30 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. பல்வேறு கட்சி சார்பில் வேட்பாளர்கள் இந்த தேர்தலில் களமிறங்க உள்ள நிலையில் இந்தி வம்சாவளியைச் சேர்ந்த சியோபான் பெனிடா சுயேட்சையாக போட்டியிடுகிறார்.

பிரிட்டன் தந்தைக்கும் இந்தியா தாய்க்கும் பிறந்த சியோபான் கடந்த 1996 ஆம் ஆண்டு சிவில் சர்வீஸ் அதிகாரியாக பணியில் சேர்ந்தார். பிரிட்டன் பிரதமர்கள் ஜான் மேஜர், டோனி பிளேர், கார்டன் பிரவுன் ஆகியோரிடம் கபினட் செயலராக பணியாற்றியுள்ளார். தற்போது இந்த பதவியை இராஜினாமா செய்து விட்டு தேர்தலில் போட்டியிட ஆயத்தமாகி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

. . (அ-2-7)

# அரசு சாரா அமைப்புக்கள் கூடங்குளம் மின் நிலையம் செயற்படுவதை விரும்பவில்லை

## பிரதமர் மன்மோகன் தெரிவிப்பு



(புதுடில்லி)

அமெரிக்காவை மையமாக கொண்டு செயற்படும் சில அரசு சாரா அமைப்புகள் கூடங்குளம் அணுமின்நிலையம் செயற்படுவதற்கு இடையூறு ஏற்படுத்துகின்றன என பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

சயின்ஸ் என்ற பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் பிரதமர் கூறியுள்ளதாவது, இந்திய எரிசக்தி துறையில் அணுமின் திட்டத்திற்கு முக்கிய பங்கு உள்ளது. நாட்டு மக்களில் பெரும்பகுதியானவர்கள் அணுமின் திட்டங்களுக்கு ஆதரவாக உள்ளனர். அதே நேரத்தில் சில அரசு சாரா அமைப்புகள் இந்தியாவில் எரிசக்தி துறையில் வளர்ச்சி ஏற்படுவதை விரும்பவில்லை. கூடங்குளம் அணுமின் நிலையம் செயற்படுவதற்கு இது போன்ற அரசுசாரா அமைப்புகள் இடையூறு ஏற்படுத்துகின்றன.

இவை அமெரிக்காவை மையமாக கொண்டு செயற்படும் அமைப்புகள் என கருதுகிறேன்.

உயிரி தொழில்நுட்பத்துறையில் மிகப் பெரிய வளம் உள்ளது. விவசாயத்துறையில் உற்பத்தியை பெருக்குவதற்கு இந்த தொழில் நுட்பத்தை உரிய நேரத்தில் இந்தியா பயன்படுத்திக் கொள்ளும். அதே நேரத்தில் சில பிரச்சினைகள் உள்ளன. வளர்ச்சிக்காக நம் நாடு எதிர் நோக்கும் சவால்களை சில அரசு சாரா அமைப்புகள் குறிப்பாக அமெரிக்காவை மையமாக கொண்டு செயற்படும் அமைப்புகள் வரவேற்பதில்லை இது போன்ற விடயங்களில் சீனாவைப் போல் நாம் செயற்பட முடியாது நம் நாடு ஜனநாயக நாடு என அந்த பேட்டியில் கூறியுள்ளார். (அ-2)

# பத்மநாப கோவிலின் சொத்துக்களை பாதுகாக்க நீதிமன்றம் உத்தரவு

(புதுடில்லி)


திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோயிலில் உடனடியாக பாதுகாப்பு பெட்டகம் கட்ட சுப்ரிம் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. பத்மநாபசுவாமி கோயி லில் உள்ள இரகசிய அறைகளில் இருந்து ஏராளமான தங்கநகைகள், வைரம், வைடூரியம், முத்துக்கள் ஆகியவைகள் குவியல் குவியலாக கண்டெடுக்கப்பட்டு அவைகளை மதிப்பீடு செய்யும் பணி நடந்து வருகிறது.

அதன் மதிப்பு சுமார் 30 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு இருக்கும் என்று கூறப்படுகிறது. இதனால் பத்மநாபசுவாமி கோயிலில் உடனடியாக பாதுகாப்பு பெட்டகம் கட்ட வேண்டும் என்று சுப்ரீம் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பாதுகாப்பு பெட்டகம் கட்ட ஏற்படும் செலவு குறித்து சுப்ரீம் நீதிமன்றத்திற்கு தகவல் கொடுக்க வேண்டும் என்றும் பாதுகாப்பு பெட்டகம் கட்ட ஏற்படும் செலவை கோயில் நிர்வாகமும் மாநில அரசும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அந்த உத்தரவில் மேற்படி நீதிமன்றம் கூறியுள்ளது. (அ-2)

# பொன் அணிகளின் போர் ; இன்றும் தொடர்கிறது

## சென்பற்றிக்ஸ் முதல் இன்னிங்ஸ் 226



பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் இடையிலான இரண்டு நாள் இன்னிங்ஸ் போட்டி நேற்று சென். பற்றிக்ஸ் மைதானத்தில் ஆரம்பமானது.



இன்றும் நடைபெறும் இவ் ஆட்டத்தில் இரு கல்லூரிகளும் 95ஆவது ஆண்டாக மோதுகின்றன.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு போட்டி ஆரம்பமானது.


நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களை எடுத்தது.

சென்.பற்றிக்ஸ் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் அபாரமாக ஆடி அணிக்கு ஓட்டங்களைச் சேர்த்தனர்.

இதனடிப்படையில் முதலாவது விக்கெட் இணைப்பாட்டமாக ஆர்.ஜக்சன்–ஆர்.ரியூடர் ஜோடி 73 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஜக்சன் 36 ஓட்டங்களுக்கு யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் லிங்கராஜ் பந்துக்கு



மதுசனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இதேபோல் ரியூடரும் 36 ஓட்டங்களுக்கு கஜேந்திரனின் பந்து வீச்சில் சோபிநாத் சுவனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த வீரர்களும் சென்பற்றிக்ஸ் அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்க,

8ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக நோபேட்–அஜித் டார்வின் ஜோடி அபாரமாக ஆடி 67 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தனர்.

நேற்றைய ஆட்ட முடிவில் சென்.பற்றிக்ஸ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது.

24 ஓட்டங்கள் உதிரி ஓட்டங்களாக யாழ்ப்பாணக் கல்லூரியால் வழங்கப்பட்டது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பாக அதிகபட்சமாக ஏ.நோபேட் 43 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக ஆர்.நிலக்சன் 55 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் என்.கஜேந்திரன் 55 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

**சென்.பற்றிக்ஸ் வீரர்களின் ஓட்ட எண்ணிக்கை**

ஆர்.ஜக்சன் 36, ஆர்.ரியூடர்–36, ரி.மோரிஸ் மிரோசன்–6, வி.குகபாலா–32, ஜே.அலெஸ்ரின்–12, ஜே.கிளிங்ரன்–9, டபிள்யூ.லிவிங்ரன் 0, ஏ.நோபேட்–43, ஏ.அஜித் டார்வின்–18, ஆர். நிர்கர்சன் (ஆட்டமிழக்காமல்)–5, சுகேர்தன் 5 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதன்பின் பதிலெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி நேற்றைய ஆட்ட நேரமுடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களையே பெற்றுள்ளது.

இதில் எஸ்.மதுசன் 28 ஓட்டங்களையும் ரீ.நிமலேந்திரா 21 ஓட்டங்களையும், என். கஜேந்திரன் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங் களையும் எடுத்துள்ளனர்.


சென்பற்றிக்ஸ் கல்லூரி சார்பாக டபிள்யூ. சி.எல்.லிவிங்ரன் 12 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இன்றும் ஆட்டம் தொடர்கிறது.

# ஆஸியால் முடியல்ல ; இலங்கையின் வெற்றி தொடர்கிறது

சி.பி கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற அவுஸ்திரேலிய அணியுடனான போட்டியில் இலங்கை அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுள்ளது.

3 நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டியின் 9ஆவது லீக் ஆட்டம் ஹேபார்ட்டில் நேற்று நடைபெற்றது.





இதில் அவுஸ்திரேலிய–இலங்கை அணிகள் மோதின. கடந்த 2 போட்டிகளில் விளையாடாத அவுஸ்திரேலிய அணித்தலைவர் கிளார்க் நேற்றைய ஆட்டத்தில் இடம்பெற்றார்.

அணிக்கு மீண்டும் திரும்பிய வோட்ஷன், மெக்காய் ஆகியோர் 11 பேர் கொண்ட அணியில் இடம்பெறவில்லை இதேவேளை இலங்கை அணியிலும் மாற்றங்கள் எதுவும் இல்லை.

அவுஸ்திரேலிய அணித்தலைவர் கிளார்க் நாணயச்சுழற்சியில் வென்று தனது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என்று அறிவித்தார்.

இதன்படி வோர்னரும், மத்யூ வேட்டும் தொடக்க வீரர்களாக களமிறங்கினார்கள்.

அவுஸ்திரேலியாவின் தொடக்க வீரர்களை இலங்கைஅணிஎளிதாகஆட்டமிழப்புச்செய்தது.

வேட் 5 ஓட்டங்களில் குலசேகர பந்திலும், வோர்னர் 7 ஓட்டங்களில் மகரூப் பந்திலும் ஆட்டமிழந்தனர்.

6.4 ஓவரில் அவுஸ்திரேலிய அணி 27 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 2 விக்கெட்டுக்களை இழந்தது.

3ஆவது விக்கெட்டுக்காக பீற்றர் பாரஸ்ட்–அணித்தலைவர் கிளார்க் ஜோடி விக்கெட் சரிவைத் தடுத்து அபாரமாக ஆடியது.

கிளார்க் 72 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பீற்றர் பாரஸ் தனது முதல் சதத்தை பதிவு செய்த பின் 104 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மைக்கல் ஹசி 21 ஓட்டங்களும், கிறிஸ் டியன் 6 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

டேவிட் ஹசி 40 ஓட்டங்களுடனும், பிரெட் லீ 20 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

ஆஸி அணி 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுக்களையிழந்து 280 ஓட்டங்களை எடுத்தது.

இதையடுத்து 281 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றியென்ற நிலையில் இலங்கை அணி களமிறங்கியது.

ஆரம்பவீரர்களாக ஜெயவர்த்தனவும், டில்சானும் களமிறங்கினர். டில்சான் 3 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அடுத்துவந்த சங்கக்கார 22 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து 3ஆவது விக்கெட்டுக்காக ஜெயவர்த்தனவுடன் சண்டிமல் ஜோடி சேர்ந்து அதிரடியாக விளையாடினார்.

இருவரும் முறையே 85 ஓட்டங்களும், 80 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். அடுத்துவந்த திரிமன்னேவும், மத்தியூஸும் தங்கள் பங்கிற்கு 24 ஓட்டங்களைப்பெற மகரூப் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த பெரேரா அதிரடியாக விளையாடி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார்.

இவர் 11 பந்துகளில் 21 ஓட்டங்கள் குவிக்க குலசேகர ஒரு பவுண்டரி விளாசி அணியை வெற்றிபெற வைத்தார்.


இலங்கை அணி 49.2 ஓவர்களில் 7 விக்கெட்டிழப்புக்கு 283 ஓட்டங்களைக் குவித்து ஆஸி அணியை 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந்தவெற்றியின் மூலம் இறுதிப்போட்டிக்கு நுழையும் வாய்ப்பை இலங்கை அணி பிரகாசப்படுத்திக்கொண்டுள்ளது.

ஆஸி அணி புள்ளிப்பட்டியலில் இரண்டாம் இடத்திலிருக்க இந்தியா அணியோ கடைசி இடத்தில் உள்ளது.

அடுத்து இந்தியா அணி இரண்டு போட்டிகளிலும் போனஸ் புள்ளிகளோடு வெற்றி பெற்றால் இறுதிப்போட்டிக்கு நுழையும் வாய்ப்பை பெற சிறிதளவேனும் வழிகிடைக்கும்.

நாளை இந்திய அணி அவுஸ்திரேலிய அணியை சந்திக்கிறது. எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கை அணியோடு மோதுகிறது.



இந்த போட்டிகள் நடைபெறும் நாட்களில் மழை பெய்ய வாய்பிருப்பதால் இறுதிப் போட்டிக்கு இந்திய அணி தகுதி பெறுவதில் சிக்கல் வந்தாலும் வரலாம்.

# கடத்தப்பட்ட சிறுமி பொலிஸாரால் மீட்பு

(புத்தளம்)

புத்தளம், முந்தல் பிரதேச பாலர் பாடசாலையில் கல்வி பயின்று கொண்டிருந்த நிலையில் கடத்திச் செல்லப்பட்ட மூன்றரை வயதுச் சிறுமி நேற்று வெள்ளிக்கிழமை, பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையை அடுத்து மீட்கப்பட்டுள்ளார்.

அத்துடன், மேற்படி சிறுமியைக் கடத்திச் சென்று சிறுமியின் பெற்றோரிடம் கப்பம் பெற்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அச் சிறுமியின் உறவு முறை அண்ணன் ஒருவரும் 45 வயதான பெண்ணொருவருமாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை கடத்தப்பட்டிருந்த மேற்படி சிறுமியை விடுவிக்க வேண்டுமாயின் 50 இலட்சம் ரூபாயைக் கப்பமாகக் கொடுக்க வேண்டும் என்று அச் சிறுமியின் தாயாரிடம் கடத்தல்காரர்கள் தொலைபேசி மூலம் அறிவித்துள்ளனர்.

இருப்பினும் அத்தொகைப் பணம் தன்னிடம் இல்லாததால் அதனைக் குறைத்துக் கொள்ளுமாறு சிறுமியின் தாயார் வேண்டிக் கொண்டதையடுத்து 15 இலட்சம் ரூபாயினை வழங்குமாறு மேற்படி கடத்தல்காரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், அத் தொகைப் பணத்தை எடுத்துக்கொண்டு சிறுமியின் தாயார் மாத்திரம் பஸ்ஸில் வர வேண்டும் என்றும் அவர்கள் அச்சுறுத்தியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுத்த பொலிஸார் சுமார் 200 பேர் அடங்கிய 5 விசேட பொலிஸ் குழுக்களை சிவில் மற்றும் சீருடையில் முந்தல் மற்றும் ஆரச்சிக்கட்டுவ பிரதேசங்களில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தியிருந்தனர்.

இந்நிலையில் ஆரச்சிக்கட்டுவ பிரதேசத்திற்கு சிறுமியையும் அழைத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்த பிரதான சந்தேக நபரும் பெண்ணும் சிறுமியின் தாயிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டதுடன் அப்பகுதியில் பொலிஸ் நடமாட்டம் இருப்பதைக் கண்டு சிறுமியைக் கையளிக்காமல் மோட்டார் சைக்கிளில் அதிவேகமாகப் பயணித்துள்ளனர்.

இதனையடுத்து அவர்களை பின் தொடர்ந்து சென்ற பொலிஸார் வழிமறித்து சிறுமியை மீட்டுள்ளதுடன், சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர்.

அத்துடன் சந்தேக நபர்களால் கப்பமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட 15 இலட்சம் ரூபாய் பணத்தையும் கைப்பற்றியுள்ளனர். (எ-11)

## கொழும்பு புறக்கோட்டையில் 2 வர்த்தக நிலையங்கள் தீக்கிரை

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் திடீரென ஏற்பட்ட மின்னொழுக்கு காரணமாக வெவ்வேறு பகுதிகளில் இரு வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாகியுள்ளன.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

கெய்சல் வீதியில் புடைவைக்கடை யொன்றும் சைனா வீதியில் பலசரக்கு கடையென இரு வர்த்தக நிலையங்கள் மின்னொர்ழுக்கு காரணமாக தீக்கிரையாகின்.

பெரும் முயற்சியின் பின்னர் வர்த்தக நிலையங்களில் தீயணைக்கப்பட்டாலும் அங்கிருந்த பெருமளவான பொருட்கள் தீக்கிரையாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-11)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 10 மணிக்கு அதிபர் ந.நாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (எ)

## இலங்கைக்கு...

இப் போரின்போது காணாமல்போன பெருந்தொகையானவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்பதில் அவர்களுடைய அன்புக்குரியவர்கள் அக்கறையாகவுள்ளார்கள் என இது தொடர்பாகத் கருத்துத் தெரிவித்த நோர்வேயின் வெளிநாட்டு உதவிகளுக்கான அமைச்சரும், இலங்கைக்கான முன்னாள் நோர்வேயின் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

'அரசாங்கம் போரில் வெற்றி பெற்றிருக்கின்றது. இருந்த போதிலும் அங்கு சமாதானத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது. இலங்கைத் தீவில் தமிழர்களும் சிங்களவர்களும் எவ்வாறு சமாதானமாக வாழ முடியும் என்பதற்கான நீண்ட காலத் திட்டம் ஒன்றை ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கின்றது எனவும் சொல்ஹெய்ம் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்திற்கு அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட மேற்கத்தைய நாடுகள் ஆதரவு வழங்கவுள்ள நிலையில், நோர்வேயும் இத் தீர்மானத்திற்கு ஆதரவு வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இலத்தீன் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்க நாடுகள் சிலவும் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்டவுள்ள தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவிக்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அத்துடன் பொறுப்புக்கூறுதல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய விவகாரங்களில் அவுஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது.

அதேவேளை பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய விவகாரங்களில் கொழும்பு மீதான சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்துச் செல்வதையே இத்தகைய நாடுகளின் நிலைப்பாடுகள் வெளிப்படுத்துவதாக நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## அரசுக்கு ஆதரவா...

அழைப்பது பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்துகிறது என ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் தங்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டுள்ளனர். (எ-11)

## இறுதிப் போரில்...

மிகவும் பிரச்சினையை ஏற்படுத்தக்கூடியவை.

அந்த அறிக்கையின்படி, 2009ஆம் ஆண்டின் முதல் 5 மாதங்களில் – அதாவது போரின் இறுதி நாட்களில் 7400 பேர் 'பிற' என்று கூறப்படுகின்ற காரணத்தால் இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது அங்கு அவர்களது இறப்புக்கான காரணம் கூறப்படவில்லை.

அதன் அர்த்தம் என்னவென்றால், அவர்கள் இயற்கையாகவோ, விபத்திலோ, தற்கொலை செய்தோ அல்லது தனிப்பட்ட கொலை செய்தோ இறக்கவில்லை. ஆகவே அவர்கள் மோதலினால் இறந்திருக்கலாம்.

இறுதிப் போரின் இரத்தக்களரி இடம் பெற்ற முல்லைத்தீவிலேயே இவர்களில் பெரும்பாலானவர்கள் இறந்திருக்கிறார்கள்.

மேலும் 2009 ஆண்டு முழுவதிலுமாக 2 ஆயிரத்து 600க்கும் அதிகமானோர் காணாமல் போயிருக்கிறார்கள்.

இந்த இறந்தவர்கள் அனைவரும் பொது மக்களா அல்லது விடுதலைப்புலிகளா அல்லது அவர்களது இறப்புக்கு யார் பொறுப்பு என்பது தெளிவாகத் தெரியவில்லை.

முதலில் தாம் பொதுமக்கள் எவரையும் கொல்லவில்லை என்று கூறிய இலங்கை அரசு பின்னர் அண்மையில் சில பொதுமக் களை தமது தரப்பு கொன்றிருக்கலாம் என்று ஒப்புக் கொண்டதுடன் இது ஒத்துப்போகிறது.(எ-11)

## சவேந்திர சில்வா...

சில்வா தொடர்பில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என கேள்வி எழுப்பினார்.

அப்போது, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்காக செய்யக் கூடிய அனைத்தையும் அரசாங்கம் செய்கிறது என பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா பதிலளித்தார். (எ-11)

## வாழ்வாதாரத்தை...

கொடுத்துள்ளனர்.

சுமார் 25 மில்லியன் ரூபாய் செலவில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டது. ஆனால் அதற்கு மேலாகவும் செலவுகள் ஏற்பட்டுள்ளது என்பதை நான் அறிவேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, கொழும்பு மாநகர சபை எதிர்க் கட்சித் தலைவர் மிலிந்த மொறகொட, யாழ். கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துரு சிங்க மற்றும் பலர் கலந்து கொண்டனர். (எ-6)

## பாணின் விலை...

யுள்ளதாக கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் உரையாற்றிய மலிபன் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி லக்ஸ்மன் வீர சூரிய கூறினார்.

பால்மா இறக்குமதியாளர்களும் டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி காரணமாக ஒவ்வொரு கிலோகிராம் பால் மாவுக்கும் 37 ரூபாய் நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளனர் என அவர் கூறினார்.

இவ்விலை அதிகரிப்பு கோரிக்கைக்கு மேற்படி இரு காரணங்களைத் தவிர உலக சந்தையில் விலை அல்லது வேறு காரணங்கள் இதனுடன் தொடர்பில்லை எனவும் அவர் தெரிவித்தார். (எ)

## இலங்கை...

ஆணைக்குழு விடயத்தில் ஜெனிவாவிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் கூட்டாக செயற்படுவது போலவும் அமெரிக்கா காட்டிக் கொள்ள முயற்சிக்கிறது என அவர் தெரிவித்துள்ளார்.

மரியம் ஷஹ்ர்ஷாட் என்பவர் கையெழுத்திட்டு, அமெரிக்கத் தூதரகத்தினால் ஐ.நா வுக்கும் ஜெனிவாவிலுள்ள ஏனைய சர்வதேச அமைப்புகளுக்கும் அனுப்பப்பட்ட கடிதமொன்று பெப்ரவரி 21ஆம் திகதி எனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

மார்ச் மாதம் அமெரிக்காவின் அனுசரணையுடன் ஐ.நா.மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப் படவுள்ள தீர்மானத்துக்கு அக் கடிதம் ஆதரவு கோரியிருந்தது என தமாரா குணநாயகம், அங்கத்துவ நாடு களின் தூதுவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப் பிட்டுள்ளார்.(எ-11)


SANTHAM HOSPITAL
சாந்தம் வைத்தியசாலை
126, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

யாழ் விசேட வைத்திய நிபுணர்களின் பின்வரும் சேவைகளை எமது சாந்தம் வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

1. விசேட பொது வைத்திய நிபுணர் (VP)
2. குழந்தைகளுக்கான விசேட வைத்திய நிபுணர்
3. சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் (Surgeon)
4. மகப்பேற்று வைத்திய நிபுணர் (VOG)
5. காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர்
6. கண் வைத்திய நிபுணர்
7. தோல் வைத்திய நிபுணர்
8, மற்றும் விசேட வைத்திய நிபுணர்கள்

அத்துடன்
உங்கள் அன்புக்குரியவர்கள் நடமாட முடியாதிருந்தால்,
அவர்களை அங்கத்தவர்களாக எமது வைத்தியசாலையில் பதிவு செய்யுமிடத்து எமது வைத்திய நிபுணர்கள் உங்கள் வீட்டுக்கு வந்து சிகிச்சை அளிப்பார்கள்.

அத்துடன் எந்நேரமும் அம்புலன்ஸ் சேவையைப் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் X Ray, Colour Scanning, ECG, ஆய்வுகூட சேவைகளைப் பெறலாம்.

விபரங்களுக்கு அழையுங்கள் :- 021 5676577
021 5677756

காலை 8 மணி முதல் மாலை 8 மணிவரை
MBBS வைத்தியரினால் வெளிநோயாளர் சேவை வழங்கப்படுகிறது.

Fast, Friendly and Accurate Care

(C-5906)



வாகனம் விற்பனைக்கு
WP GE - XXXX தொடரிலக்கம் உடைய பென்ஸ் ரக வான் விற்பனைக்கு அல்லது மாதாந்த வாடகைக்கு
தொடர்பிற்கு:-
021 222 1889
021 492 2334
(7564)



விற்பனைக்கு



சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன டபிள் பட்டன் கொமேட், சிகோ உயர்தர ஏ.சி. மெஷின்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0773 616 798



பணியாட்கள் தேவை
விருந்தினர் விடுதிக்கு பின்வருவோர் வேண்டப்படுகின்றனர்.
♦ அறை பராமரிப்பாளர்
♦ சமையலாளர்
தகைமை உடையோர் நேரில் வரவும்.
51, சிவன் வீதி, திருநெல்வேலி.
தொலைபேசி : 021 222 1889, 021 492 2334
(7563)


[illegible] பத்திரிகை வலம்புரி [illegible] இல. 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.